www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 14 செப்ரெம்பர் 2007 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 106



# சர்வ கட்சி மாநாடு

## ஏமாற்று நாடகம்

மகிந்த சிந்தனை அரசாங்கம் சர்வ கட்சி மாநாட்டை ஆரம்பித்து ஒரு வருடமாகி விட்டது. இதுவரை பல கூட்டங்கள் இடம் பெற்ற போதிலும் சாதகமான முடிவுகள் எதற்கும் வர முடியவில்லை. அதற்குப் பிரதான காரணம் ஜனாதிபதியும் அவரது கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமாகும். அத்துடன் ஜே.வி.பி. ஜாதிக ஹெறல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி என்பன தமது பேரினவாத நிலைப்பாட்டுடன் இருந்து வருவதுமாகும். பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தனது உள்ளார்ந்த பேரினவாத நிலைப்பாட்டிற்கு இணங்க இச் சர்வகட்சி மாநாட்டில் அக்கறை செலுத்தவில்லை. அவர்களது அக்கறையாவும் அடுத்து பதவிக்கு வருவதற்கு அளவாகக் காய்களை நகர்த்துவதேயாகும். ஏனைய சிறிய கட்சிகளின் ஆலோசனைகள் கவனத்திற்கு எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதியும் அவர்களது சகோதரர்களும் பேரினவாத ஆலோசகர்களும் உயர் ராணுவ அதிகாரிகளும் கொண்டுள்ள முடிவு யுத்தத்தின் மூலம் வடக்கு கிழக்கை முழுமையாகக் கைப்பற்றிக் கொள்வதாகும். அதன் மூலம் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சிக் கோரிக்கையை முறியடித்து பௌத்த சிங்கள பேரினவாத ஒற்றையாட்சியை நிலை நிறுத்திக் கொள்வதாகும். இந்த அடிப்படை இலக்கை நோக்கியே கடந்த ஒன்றரை வருட மகிந்த சிந்தனை அரசாங்கம் செயலாற்றி வந்துள்ளது.

ஆனால் யுத்தத்தின் மூலம் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதை உள்ளநாட்டு சமாதான சக்திகளும் வெளிநாடுகளும் வற்புறுத்தி வருகின்றன.

தொடர்ச்சி 4ம் பக்கம் →

தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவது தொடர்பாகத் தோட்டக்கம்பெனிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கேட்டுக்கொண்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. அதனையடுத்து தோட்டக் கம்பெனிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் தொழிலமைச்சர் அத்தாடவுட செனவிரட்ன பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அதில் எதுவித முடிவும் எட்டப்பட வில்லை என்பதும் செய்தி.

தனியார்துறை ஊழியர்களின் ஆகக்குறைந்த அடிப்படை சம்பளம் ரூ. 5000/= ஆக இருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாகையால் தோட்டத்தொழிலாளிகளின் நாளாந்த அடிப்படை சம்பளம் ரூ 200 ஆக இருக்க வேண்டும் என்பது இ.தொ.கா வின் கோரிக்கை. தற்போது நாளாந்த மொத்த சம்பளம் என்று கூறப் படும் ரூ 260/= இல் (மொத்த சம்பளமாக ரூபா 195/= மட்டுமே நடைமுறையில் கிடைக்கிறது) ரூபா 170/= அடிப்படைச் சம்பளமாகும். அதில் ரூபா 30/= ஐ கூட்டும்படி இ.தொ.கா கோருகிறது.

மலையகத் தலைவர்கள் எனப்படுவோர் பலர் ஜனாதிபதியைப் பாராட்டி அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் ஜனாதிபதி முதன் முதலாக தலையிட்டுள்ளார் என்றும் பாராட்டு அறிக்கையில் எடுத்துக்கூறிவருகின்றனர்.

கடந்த வருடம் சம்பள உயர்வைக்கோரி போராட்டங்களை தோட்டத்தொழிலாளர்கள் நடத்தியபோது தோட்டக்கம்பெனிகளுடன் தொழிற்சங்கங்கள் இணக்கப்பாட்டிற்கு வந்து 'அந்தா ரூ 260/= எனும் "மாபெரும் சம்பளப் பொதியை" ஏற்கும்படி நிர்ப்பந்தித்தவர்

தொடர்ச்சி 4ம் பக்கம் →

# உடன் சம்பள உயர்வு வேண்டும்



www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியா குள ஆக்கிரமிப்பும் அரசியல் பின்னணியும்

**வவுனியா மாவட்டத்தில் உள்ள** மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் பிரச்சனை மிக முக்கியமான பிரச்சனையாக உருவெடுத்து வருகின்றது. அதன் பூதாகரம் இன்னும் பத்து வருடத்துக்குள் பன்மடங்காகி வவுனியா வாழ் மக்களை குடிநீருக்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் பெருமளவு பணத்தை செலவு செய்யவும் துன்பப் படவும் செய்யப் போகின்றது. வவுனியாவில் குடிநீர் தட்டுப்பாடு பிரச்சனையாக உருவெடுப்பதற்கு முக்கிய காரணம் குளப் பராமரிப்பு இன்மையும் குள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுமே ஆகும்.

அதாவது வவுனியாவில் முக்கிய குளங்களான பண்டாரிக் குளம் பட்டானிச்சூர் புளியங்குளம், வைரவபுளியங்குளம், வவுனியா குளம் என்பன ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிக் கொண்டும் சில குளங்கள் அணைகள் உடைக்கப்பட்டு மண் போட்டு நிரவப்பட்டு குளங்கள் இல்லாமல் ஆக்கப்பட்டும் உள்ளன.

இந் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு குளப் பராமரிப்பு மற்றும் குளப்பாதுகாப்பு என்பன பற்றிய வவுனியா நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வவுனியா கம நலத் திணைக்களம் ஆகியவை அக்கறை எடுத்து செயற்பட வேண்டிய கடமையும் பொறுப்பும் அதிகாரமும் இவைகளுக்கே உண்டு. ஆனால் இவை பற்றி இவ் அரச திணைக்களங்கள் எதுவித அக்கறையும் எடுத்ததாக இது வரை தெரியவில்லை.

ஆனால் இலங்கையில் இவ்வாறான அத்துமீறல் நடவடிக்கைகளுக்கு எதிராகச் சட்டம் கூட உள்ளது. 2000 ஆண்டின் 46ம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின்படி பிரிவு 33(1) இற்கு அமைவாக குளத்தின் நீரேந்து பகுதி களையோ குளத்தின் நீர்த்தேக்க நிலங்களையோ ஆக்கி ரமித்தல் ஓர் குற்றமாகும். இதனை சட்டரீதியாக கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பை மேற் குறிப்பிட்ட திணைக்களங்களே கொண்டுள்ளன. ஆனால் வவுனியா மாவட்டத்தில் நடப்பதோ வேறு மாதிரியான விடயங்கள். அதாவது யார் இந்த விடயங்கள். சம்பந்தமாக கதைக்க வேண்டுமோ அவர்களே இதில் மும்முரமாக நின்று குள அழிவுகளுக்கு துணை போகின்றனர். அதாவது கச்சேரியில் முக்கிய பொறுப்பிலுள்ள நிர்வாகிகளும் மற்றும் முக்கிய தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினரும் அவரது ஆதரவாளர்களுமே குள ஆக் கிரமிப்பு மற்றும் குள அழிவுகளுக்கு முக்கிய தூண்களாக உள்ளனர் என்பது வவுனியா மாவட்ட நேர்மையான அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் வெளிச்சம் என்பது யதார்த்தமான உண்மை.

வைரவபுளியங்குளத்தில் கச்சேரியின் முக்கிய பொறுப்பில் உள்ளவரது வீடு வைரவபுளியங்குளத்தை ஆக்கிரமித்தே கட்டப்பட்டுள்ளது. மற்றும் பண்டாரிகுளம் குளப்பகுதி ஆக்கிரமிப்பு வவுனியா தமிழ்த்தேசிய முக்கிய பாராளுமன்ற உறுப்பினரின் ஆதரவுடனேயே நடைபெற்று வருகின்றது. மற்றும் வவுனியா குளத்தின் பின் பகுதி நிலங்கள் முக்கிய வவுனியா அரச அதிகாரிகளின் குடியிருப்பாகவே மாறிக் காணப்படுகின்றது.

அது மட்டுமன்றி வவுனியா நீர் வடிகால் அமைப்பு சபை 1500 இணைப்புக்களைக் கொண்டு வவுனியா பகுதிக்கு விநியோகம் செய்து வருகின்றது. அது மட்டுமன்றி வவுனியா மாவட்டத்தின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய வேறு இடங்களில் இருந்தும் நீர் கொண்டு வருவது பற்றியும் வவுனியா நீர் வடிகால் அமைப்புச் சபை திட்டமிட்டு வருகின்றது. இந் நிலையில் நீர் வடிகால் அமைப்புக்குச் சொந்தமான நீர்த் தாங்கி ஒன்றும் ஐ.தே கட்சியின் வவுனியா மாவட்ட முக்கிய தமிழ் அரசியல் உறுப்பினர் ஒருவரால் கையகப்படுத்தப்பட்டும் உள்ளது. அதனது நிலங்களையும் கையகப்படுத்தி உள்ளார் என்றும் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இவ்வாறான விடயங்கள் எல்லாமே வவுனியா மாவட்டத்தில் நீர் நிலைகளை இல்லாமல் செய்து வவுனியாவை பாலைவனம் ஆக்கும் நிலைக்கே இவ் அரசியல் வாதிகள் தூர நோக்கு அற்ற சுயநலத்துடன் செயற்பட்டு வருவது கண்டிக்கத்தக்கதும் கவலைப்பட வேண்டியதும் ஆகும். இவை அடிப்படையில் மக்கள் விரோத செயற்பாடுகளேயாகும். இவை போகும் போக்கைப் பார்த்தால் மிக விரைவிலேயே வவுனியா குடிநீர் தட்டுப்பாடு மற்றும் இயற்கை வள அழிவு, விவாசாய அழிவு என்பவற்றை உண்டு பண்ணும் என்பது கண் கூடு. இதனால் பாதிக்கப்படப் போவது சாதாரண மக்களாகவே இருப்பர். அது மட்டுமன்றி மேற் குறிப்பிட்ட குள ஆக்கிரமிப்பு பகுதிகளுக்கு எவ்வாறு மின்சாரம் தொலைத் தொடர்பு வசதிகள் என்பன. வழங்கப்பட்டன சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் பிரதேச பொறியிலாளர் மற்றும் காணி அதிகாரிகள் என்போருக்கு அது குள ஆக்கிரமிப்பு நிலப்பகுதி என்பது தெரி யாதா? அல்லது தெரிந்தும் "செல்வாக்கினால்" பெற்றனரா? அது மட்டுமன்றி பண்டாரிக்குளம் பகுதியை ஆக்கிரமித்து இறுதியில் குள நடுப் பகுதிகளுக்குள் கோவில் ஒன்றும் கட்டுப்பட்டு வருவது வவுனியா நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு தெரியாதா? பண்டாரிக்குளம் பகுதியில் 40- 45 அடிக்கு கீழ் தான் கிணற்றில் நீர் காணப்படுகின்றது. அதற்கான முக்கிய காரணம் குள ஆக்கிரமிப்பும் குள அழிவுமே ஆகும்.

அது மட்டுமன்றி வவுனியாவில் பண்டாரிக்குளம் வைரவபுளியங்குளம் பட்டானிச்சூர் புளியங்குளம் வவுனியா குளம் என்பன காலப் போக்கில் காணமால் போனாலும் ஆச்சரியப்படுவதிற்கில்ல. ஏற்கனவே உக்கிளாங்குளம், திருநாவற்குளம் என்பன காணாமல் போய் விட்டன. இனி மிச்சம் இருக்கும் குளங்களின் அழிவும் தொடங்கி விட்டது. இறுதியில் பெயர் மட்டுமே மிஞ்சும்.

அது மட்டுமன்றி நிலம் இல்லாத ஏழை மக்கள் சென்று குளத்தை ஆக்கிரமித்து இருந்தால் அடித்து துரத்தப்படுகின்றனர். ஆனால் இவர்கள் இருப்பது சட்டத்தின் நிர்வாகிகளுக்கு தெரியவில்லையா? சட்டத்தை மதிக்க வேண்டியவர்கள் நடை முறைப்படுத்த வேண்டியவர்கள் இவ்வாறு நடந்தால் என்ன செய்வது? வெவியே பயிரை மேயும் கதை போல் பயிரே பயிரை மேயும் நிலை வவுனியா குளங்களுக்கு வந்துவிட்டது. இவர்களிடம் எல்லாம் வெகு விரைவிலேயே மக்கள் கேள்வி கேட்பர். இவர்கள் பதில் சொல்ல வேண்டிய நிலை வெகு தூரத்தில் இல்லை.

**பண்டாரிக் குள அழிவால பாதிக்கப்பட்ட நிரந்தர விவசாயி**
**இ. பெரியதம்பி**




## பூமியின் வேர்

"நாங்கள் கைதான செய்தி பற்றி
மக்கள் என்ன நினைக்கிறார்கள்?"
எதிர்கால கனவுகளையும்
இறுமாப்புள்ள லட்சியங்களையும்
புரட்சி வெல்லும் பூமியையும்
மனதுக்குள் ஏந்திய
மகேந்திரனின் கேள்வியிது!

மக்கள் எதுவாகிலும் நினைக்கட்டும்
எப்படியாகிலும் நினைக்கட்டும்
இயன்ற கற்பிதங்களையெல்லாம்
நீங்கள் கைதான சங்கதிக்கு
கற்றுக் கொடுக்கட்டும்!

நீங்கள் மக்களுக்காக மட்டுமே
சிறைப்பட்ட மானுடங்கள்
மக்களுக்கு பூட்டிய விலங்குகளை
உடைத்தெறியப் புறப்பட்ட பீரங்கிகள்
உங்களுக்கு எதற்கு ஆயுதங்கள்
இந்தப் பூமியை சரியாக சரிக்கட்ட
புறப்பட்ட பிரம்மாக்கள் நீங்கள்
அக்கிரமங்கள் நடக்குமிடத்தில்
அவதார புருஷர்கள்

எவன் சொன்னான்...?
பூமியின் அக்கிரமங்கள்
அவதாரங்களால்
அழியுமென்று (?)
புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும்
கண்ணீர் வடித்து கவலைப்பட முடிந்த
இந்த மானுடனுக்கு..........
நீங்கள் கைதான செய்தி பற்றி
என்ன அக்கறை!
நீங்கள் மக்களுக்காக மட்டுந்தானே
கைதானீர்கள்.

கண்களில் நீர்த்தாரை
பூமியின் வேரைப் போல்
விடுதலையின் தரிசனம்.
ஓலமிடும் மக்களின் விடுதலைக்காய்
சிறைப்பட்டவர்களின் விடுதலை (?)
மனதை பாறாங்கல்லாய் அழுத்தியது.
ஆனாலும்-
சல்லடைக் கம்பிகளைத் தாண்டி வந்த
ஐவரின் மூச்சுக்காற்றின் சூட்டிலும்
மனித உழைப்பின் வாசம்.
அந்த ஐவரின் மூச்சு.........
இன்னும் ஆயிரம்... உயிர் மூச்சுகளும்
எனக்கு அழுத்தி சொல்லியது.....
கைது என்பது
கம்யூனிஸ்டுகளுக்கு பொருட்டல்ல!!

சந்திரலேகா கிங்ஸ்லி

## நாலு நடக்கும் நற்குணன் உலகிலே

### கொக்கர கொக்கரக்கோ சேவலே!

**தொண்டமான் பாரம்பரியம் மேலும்** கோமாளித்தனமான முறையில் தொடருகிறது. இ. தொ. கா அமைச்சர்களை அவமதித்த காரணத்தைச் சொல்லி அமைச்சர் பதவிகளைத் துறந்த பின்பும் அவமதித்ததற்காக எந்த விதமான மன்னிப் பும் கோரப்படாமலே திரும்பவும் அரசாங்கத்துடன் போய் ஒட்டிக்கொண்டிருக்கிறது இ.தொ.கா. "போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே" என்றொரு வசனம் உண்டு. ஆசை நாயகியைப் பார்க்கப் போய் நிராகரிக்கப்பட்டு மனைவியிடம் திரும்பிப் போனவனின் கதையின் அடிப்படையில் அமைந்தது அது. மச்சான் போன உண்மைக் காரணம் என்ன? சம்பாத்தியம் போதாதா? ஆட்சி கவிழும் என்ற சபலமா?

நம்முடைய கோபக்காரச் சின்ன மச்சான் ஏன் திரும்பி வந்தார்? எதிர்பார்த்தபடி யாருமே கூட வர மறுத்ததாலா? அல்லது வெளியூரிலிருந்து முக்கியமான ஆலோசனை கிடைத்ததாலா? நாட்டுக்கு ஒரு சிறு நன்மை. இனி ஐந்து அமைச்சர்கள் குறைய.

### இன்னொரு மீட்பர்?

யூ.என்.பியின் இளம் தலைமுறை அரசியல் வாதியாகக் கொழும்புத்தமிழரின் ஆதரவைப் பெறுகிற நோக்கில் அரசியல் பேசி வந்த துமிந்த சில்வா மீது இரண்டு ஆண்டுகள் முன்பு ஏழைப் பெண் தொடர்பான பாரதூரமான குற்றச் சாட்டின் பேரில் பொலீஸ் விசாரணை தொடங்கியது. அவ ரது குற்றச் செயல் பற்றிய விசாரணைகள் முடிந்ததாகத் தெரியவில்லை. எனினும் அந்தக் குற்றச்சாட்டின் விளை வாக யூ.என்.பி அவரை யாருடைய கண்ணும் படாமல் அரசி யல் இருட்டறையில் வைத்திருந் தது. இப்போது கொழும்பு வடக்கில் அவரை யூ.என்.பி அமைப்பாளர்களாக்கியுள்ளார் ரணில் விக்கிரமசிங்ஹ.

ஆனால் தமிழ் வானொலி ஒன்று அவரது நியமனத்தைப் பெரிய செய் தியாக விவரித்து அடுத்தடுத்து இரண்டு நாட்களாக வாசித்து அந்த நியமனத்திற்காக ரணிலுக்குப் பாராட்டையும் தெரிவித்தது. இதன் மருமமென்ன, ரணிலால் துணிந்து சொல்ல முடியாத அனுதாப வார்த்தைகளைச் சொல்ல இவ ரை வைத்திருக்கிறாரா, சொற்களுக் குப் பஞ்சமில்லைத் தானே. ஆனால் தமிழர்கள் முட்டாள்களாக்கப்படு வதை விட என்ன தான் செய்யப்படுகிறது?

### மானக்கேடான மாணவர் மலர

**13.8.2007 வீரகேசரி** இதழுடன் வந்த "மாணவர் மலர்" இணைப்பின் முன்பக்கத்தில் "இயக்கவியல் பொருள் முதல்வாதம்" பற்றிய எழுபது எண்பது சொற்கள் கொண்ட விளக்கக் குறிப்பிற்கு மேல் இரண்டு படங்கள். இரண்டுக்கும் அந்தக் குறிப்புடன் ஒரு தொடர்புமில்லை. ஒரு படத்தில் மாக்ஸ், லெனின், ஸ்ற்றாலின், மாஓ, கஸ்ற்ரோ எல்லாரும் குடித்துக் கும்மாளமடிப்பது போல வரையப்பட்டுள் ளது. மற்றதும் ஏதோ இணையத்தளத்தில் இருந்து சம்மந்தா சம்மந்தமில்லாமல் பெறப்பட்டது. இதன் மூலம் வீரகேசரி மாணவர்கள் மனதில் ஏற்படுத்த விரும்புகிற தாக்கம் என்ன? இதே விதமான முறையில் சமயங்கள் பற்றியோ விஞ்ஞானிகள் பற்றியோ இலக்கியவாதிகள் பற்றியோ வீரகேசரி மாணவர்கட் காகப் படம் போடுமா?

இது கல்வி பற்றி வீரகேசரி வைத்திருக்கிற பார்வையின் வெளிப் பாடா? அல்லது வீரகேசரியின் ஆசிரியர் குழுவினர் சிலர் தங்களது தண்ணிப் பார்ட்டிகளை மனதில் வைத்து தெரிவு செய்த ஒரு படமா?

### சிங்கமும் அசிங்கமும்

**சிங்கத்துக்கு முகங்கொடுக்க** சிங்கத்தின் குகைக்குள் போயிருக்கி றேன் என்று ம.ம.மு தலைவர் தான் அரசாங்கத்தில் இணைந்திருப் பதை நியாயப்படுத்தியிருக்கிறார். புலி வேஷம் போட்டு மலையக இளைஞர்களைத் தன்பக்கம் திருப்ப முயன்று இப்போது மந்திரிப் பதவிக்காக மந்தி மாதிரிக் கிளைதாவித்தாவியே எஞ்சியுள்ள எலும்பு களை நக்க ஒரு நாய் மாதிரிப் போயிருக்கிறார் போலத்தான் தெரி கிறது.

### கப்பலோட்டிய தமிழன்

**யு.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர்** மகேஸ்வரன் ஆவேச மாக நடிப்பதில் வல்லவர். கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளி யேற்றப்பட்ட போது சட்டையைத் தளர்த்தி மார் தட்டி "ஆ.ஃ. ஊ.ஃ............" என்று பாராளுமன்றத்தில் அமர்க்களம் பண் ணினார். ஆனாலும் அவருடைய கப்பல்கள் மூலம் அத்தி யாவசியப் பொருட்கள் உட்படப் பல வேறு பண்டங்களும் தடையின்றி வடக்கிற்குப் போகின்றன. கொள்ளை லாபமும் கிடைக்கிறது. இந்தக் கடல் வழி வணிகத் துறையில் அவரது கூட்டாளிகள் யார் என்பது பற்றிப் பாராளுமன்றத்திற்குள் ளும் வெளியிலும் பேசப்பட்டுள்ளது. சனாதிபதியுடன் இவரது நெருக்கமான உறவு பற்றி "சண்டே லீடர்" பத்திரிகை ஒன் று க்குப் பலமுறை தகவல் வெளியிட்டுள்ளது. இவரை வைத் திருக்கவும் முடியாமல் விரட்டவும் முடியாமல் ரணில் விக்கிர மசிங்ஹ தத்தளிக்கிறார். எவரெவருடையதோ யோக்கியங் களை எல்லாம் கேள்விக்கு உட்படுத்துகிற நமது தமிழ் ஊடக ங்கள் ஏன் இவருடைய இரட்டை வேடத்தை அம்பலப்படுத் தத் தயங்குகின்றன?

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவரின்

# மனித உரிமையும் மனிதாபிமானமும்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடத்திலிருந்து பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் மாணவர்கள் ஒரு வருட உள்ளகப் பயிற்சி உட்பட இரண்டு ஆண்டுகள் வடக்கு கிழக்கில் உள்ள மருத்துவ மனைகளில் கட்டாயம் பணியாற்ற வேண்டும் என சுகா தார அமைச்சு தீர்மானித்துள்ளது. இதனை ஏற்றுக் கொள்ள யாழ் மருத்துவ பீடத்திலிருந்து வெளியே வரும் மருத்துவ பட்டதாரி மாணவர்கள் விரும்பவில்லை. வடக்கு கிழக் கிற்கு வெளியே உள்ள மருத்துவமனைகளில் பயிற்சியும் பணியும் புரியவே விரும்புகின்றனர். அரசாங்கத்தின் இரண்டு வருட கட்டாயப் பணியை தமக்கு எதிரான மனித உரிமை மீறல் எனக் கூறுகின்றனர். இது பற்றி கொழும்பில் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறைப்பட்டுள்ளதாகவும் தேவை ஏற்பட்டால் நீதிமன்றத்திற்குச் செலத் தயாராக இருப்பதாகவும் அவர்களில் சிலர் தெரிவித்துள்ளனர்.

இப்பொழுது சகலவற்றுக்கும் உயர் நீதிமன்றம் செல்வதும் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்வதும் அதிகரித்து வருகின்றது. காரணம் அரசாங்க நிர்வாகங்களும் அவற்றுக்கான அமைச்சுக்களும் நியாயமான நேர்மையான வழிகளில் செயல்படுவது அருகிவிட்டது. மனித உரிமை மீறல்களும் அரசியல் செல்வாக்களும் தான் தோன்றித்தனமான முடிவுகளும் அரச துறைகளில் தாண்டவமாடுகின்றன. இத்தகைய சூழலில் மனித உரிமை மீறலுக்காக உரிய இடங்களுக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகிறது. நீதி நியாயம் கேட்பது அடிப்படை உரிமையுமாகும்.

ஆனால் தனிமனித அடிப்படை உரிமை எனக் கூறி சமூக நிலைகளில் மக்கள் பெருந் திரளினரின் நலன்களைப் புறந்தள்ளிச் செல்வது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தொன்றல்ல. சில சந்தர்ப்பங்களில் தனி மனித விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் மக்கள் பணி சார்ந்து நிற்க வேண்டியது அவசியமானதாகும்.

அந்த வகையில் யாழ்- மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் மாணவர்கள் வடக்கு கிழக்கில் கட்டாயம் இரண்டு வருடங்கள் பணிபுரிய வேண்டியது மனிதாபிமானம் சார்ந்த ஒன்றாகும். வடக்கு கிழக்கு மக்கள் தமது மருத்துவத்திற்கு நம்பி இருப்பதும் நாடிச் செல்வதும் அரசாங்க மருத்துவ மனைகளையேயாகும். ஏற்கனவே மருந்துகள், மருத்துவ உபகரங்கள் கட்டிட வசதிகள் உட்பட வளங்கள் குறைந்த நிலையிலேயே அவை இருந்து வருகின்றன. அங்குள்ள மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கும் நாளாந்தம் வரும் வெளி நோயாளர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்போதிய மருத்துவர்கள் இல்லை. இதனால் பலவேறுபட்ட நோயாளர்கள் கடுமையான வேதனைகளையும் துயரங்களையும் அனுபவிக்கின்றனர். தேவையற்ற இறப்புகளும் நிகழ்கின்றன. ஏ9 பாதை மூடிய பின் தெற்கு வரவேண்டிய நோயாளர்களும் வரமுடியாது சாவடைகிறார்கள்.

எல்லாப் பணிகளையும் விட மருத்துவப் பணியே மேலானது. சக மனிதர்களுக்குச் செய்யும் இவ் மருத்துவ சேவை ஒரு சமூகத்திற்கு வழங்கும் அதி உயர் சேவையாகும். "தமிழ் இனம்" "தமிழ் இரத்தம்" "தமிழர் விடுதலை"

தொடர்ச்சி 4ம் பக்கம்

## தோழர் ஜோசி மரியா சிசன் கைது !

## உடன் விடுதலை செய்ய வேண்டும்

**புதிய-ஜனநாயக கட்சி வேண்டுகோள்**



பிலிப்பீன்ஸ் தேசிய ஜனநாயக முன்னணியின் மூத்த அரசியல் ஆலோசகர் தோழர் ஜோசி மரியா சிசன் நெதர்லாந்தின் யுட்ரிச்ட் நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அதே வேளை மேற்படி தேசிய ஜனநாயக முன்னணியின் பணிமனையை சுற்றி வளைத்து தேடுதல்களுக்கும் கணனி மற்றும் ஆவணங்கள் பறிப்பிற்கும் உள்ளக்கப்டுள்ளன. நெதர்லாந்து பொலிசாரின் இப் பாசிச நடவடிக்கையானது திட்டமிட்ட பிலிப்பீன்ஸ் அமெரிக்க ஆட்சிகளின் கூட்டுச் சதியின் பின்னணியில் நடாத்தப்பட்டுள்ளது. மேற்படி ஜோசி மரியா சிசனின் கைதையும் பணிமனை மீது நடாத்தப் பட்ட அடாவடித்தனங்களையும் புதிய- ஜனநாயக கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் தோழர் சிசனை உடன் விடுதலை செய்யுமாறு வற்புறுத்துகின்றது.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, தோழர் மரியா சிசன் பிலிப்பீன்சை விட்டு வெளியேறி நெதர்லாந்து நாட்டில் வாழ்ந்து கொண்டே தனது நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான புதிய மக்கள் ராணுவத்தின் மூலமான மக்கள் போராட்டத்திற்கு வலிமை சேர்த்து வந்தவர். அப்போராட்டத்தின் ஐக்கிய முன்னணியான பிலிப்பீன்ஸ் தேசிய ஜனநாயக முன்னணியின் மூத்த ஆலோசகராகவும் இருந்து செயல்பட்டவர். அதன் மூலம் அம் முன்னணி பிலிப்பீன்ஸ் நாட்டு மக்களின் அடிப்படை அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் பரப்புரை செய்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான போராட்டத்திற்கு வழிகாட்டியவர்களில் முக்கியமானவராக தோழர் சிசன் இருந்து வந்தவர். அவர் மீது ஏற்கனவே சுமத்தப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து நெதர்லாந்து உயர் நீதிமன்றம் சில காலம் முந்தி அவரை விடுவித்து அமெரிக்கப் பின்னணி கொண்ட நெதர்லாந்துப் பொலிசின் பாசிச நடவடிக்கையை நிராகரித்திருந்தது. இப்போது மீண்டும் பொய்யான கொலைக் குற்றச் சாட்டின் பேரின் சிசன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை அமெரிக்காவிடமோ அல்லது பிலிப்பீன்சிடமோகையளிக்கும் சூழ்ச்சித் திட்டங்களும் இருக்கவே செய்கிறது.


ஆதலால் அமெரிக்க- அரோயோ ஆட்சிக்கும்பலின் சூழ்ச்சி மூலம் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தோழர் சிசன் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும் என நாம் வற்புறுத்துகின்றோம். அவரது விடுதலைக்கு அறை கூவல் விடுத்துள்ள பிலிப்பீன்ஸ் கம்யூனிஸ் கட்சியுடனும் ஏனைய நாடுகளில் அவரை விடுதலை செய்யுமாறு இடம் பெறும் இயக்கங்களுடனும் வற்புறுத்தல்களுடனும் எமது கட்சி தோழமை மிக்க ஒருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கிறது.

# யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது?

இன்று யாழ் குடாநாட்டு மக்கள் உறவுகளைப் பிரிந்து, உடமைகளை இழந்து, அன்றாட வேலைவாய்ப்புகள் அற்ற நிலையில் பட்டினியினை எதிர் கொள்வதுடன் மட்டுப்படுத்தப்பட்ட வெளித்தொடர்புகளுடன் அச்சம் பீதி கொலைகளின் மத்தியில் திறந்த வெளிச் சிறைச்சாலையில் வாழ்கின்றனர். இதனை இணையத்தளங்கள். பத்திரிகைகள் வானொலிகள் வெளிப்படுத்தினாலும் யாழ்பாண மக்களின் அவலங்களும் சொல்லனாத்துயரங்களும் பட்டியல் படுத்தப்பட்டு சர்வதே சமூகம் என்ற பெயரில் இருப்போர் கண்டன அறிக்கைகள் விட்டும் வருகின்றனர். ஆனால் நிலமை மேலும் மேலும் மோசமடைந்து ஜனாயகம் மனித உரிமைகள் யாழ்ப்பாணத்தில் உள்ளதா என்ற கேள்வியையே எழுப்புகின்றது. ஜனாயகம் பேசப்படும் நாட்டில் மக்களின் வாழ்வு எவ்வாறு பறிக்கப்படுகின்றது. சிதைக்கப்படுகின்றது. புதைக்கப்படுகிறது. இவற்றிக்கு எல்லாம் யார்? காரணம் என்ற வினாவிற்கு விடைதேடமுற்பட்டால் உண்மைகள் துலங்கவே செய்யும். யாழ் மக்களின் உணர்வுகளை மதிக்காது, அவர்களை மனிதக்கேடயங்களாக தமது இராணுவநலன்களுக்காகப் பயன்படுத்தும் போக்கே காணப்படுகிறது. மக்களுக்கு எற்படும் பாதிப்புகள், தாக்கம் மறுதாக்கங்கள் பற்றிச் சிந்திக்காமல் செயற்படும் சக்திகள் மக்களை விரக்தியுறச் செய்கின்றன. ஒரு புறத்தால் இராணுவமும் மறுபுறத்தால் போராடுவோரும் பழிக்குப் பழியான கொலைகளிலும் தாக்குதல்களிலும் ஈடுபடுகின்றனர். திட்டமிட்ட கொலைகளும் ஆட்கடத்தல்களும் இடம் பெறுகிறன. இவ்வாறான சூழ்நிலையில் அன்றாடவாழ்வைக் கழிக்கின்ற மக்கள் இவற்றிக்கு எதிராகக் குரலெழுப்பவோ போராட்டங்கள் நடாத்தவோ, கண்டித்துப் பேசவோ முடியாத நிலையில் உள்ளனர். இராணுவ நிகழ்ச்சி நிரலுக்காக உளவியல் ரீதியாக அடக்குகின்ற உத்திகளும் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடத்தப்படுபவர் தலையுண்டிக்கப்பட்டு உடல் ஒரு இடத்திலும் உடம்பு வேறு இடத்திலும் போடுதல், கடத்தல் கொலை அச்சுறுத்தல் உள்ளவர்கள் மனித உரிமை ஆனைக்குழுவக்கு அறிவித்தால் அந்நபர்களின் வீட்டுக்குச் சென்று இனந்தெரியாதோர் என்றவகையில் அச்சுறுத்துதல் விடுதல், வெளிமாவட்டங்களுக்கான அனுமதி மறுக்கப்படுதல், இடம்பெறுவதுடன் இரவுநேர ஊரடங்கு அமுல்படுத்தலின் போது கொள்ளைகளும், திட்டமிட்ட கொலைகளும், இடம்பெறுகின்றன. பகல் நேரத்திம் பல மணித்தியாலங்களாக வீதிகளைத் தடைசெய்வதும் மக்கள் அன்றாட கருமங்கள் செய்யமுடியாத அவலங்களும் இடம்பெறுகின்றன. பாடசாலைகள், ஆலயங்கள் போன்றவற்றுக்கு முன்னால் சிறிய காவலரண்கள் அமைத்து கண்காணித்தலும் வாரந்தோறும் சுற்றிவளைத்து தேடுதலும் வீடுகளில் உள்ள பொருட்கள், நபர்கள் பற்றிய ஆவணங்கள் புகைப்படப்பிரதிகள் கொடுத்து இராணுவ அதிகாரியிடம் உறுதிப்படுத்திகொள்ளவேண்டும். ஒவ்வெருவரும் புகைப்படம் எடுப்பப்பட்டு விபரங்கள் திரட்டப்பட்டு ஆவ ணப்படுத்தலும் விசேட அடையாளட்டையும் வழங்கப்படுகின்றது. இவ்வாறு மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மதிக்கப்படாத மனித அவலங்களின் இருப்பிடமாகக் காட்சியளிக்கும் யாழ்பாணத்தில் மீண்டும் எப்போது விடிவு ஏற்படும், A9 பாதை திறக்கும், உற்றார் உறவின ரைசந்திபோம், பொரு ட்களின் தட்டுபாடு அகலும் போன்ற பல எதிர்பார்ப்புகளுடன் மக்கள் உள்ள னர். இதனைப் பார்க்கும் போது "தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் இறுதிக்கால வாசகம் தான் நினைவுக்கு வந்தது. அரசிடமும் ஆயுதப் போராட்டத்திடமும் நம்பிக்கை இழந்த மக்கள் ஆலயங்கள் நோக்கிச் சென்று நேர்த்திவைப்பத்தில் மட்டுமே நம்பிக்கையாக உள்ளனர். யாரைத் தான் நம்புவதோ பேதை நெஞ்சம் என்ற நிலையில் தான் யாழ்பாண மக்கள் அழுது அலுத்து அல்லல்கள் மத்தியில் வாழ்கின்றனர். அவர்களில் நானும் ஒருவன். எனது உள்ளத்தில் பட்டதைக் கூறியுள்ளேன். எனது ஆதங்கத்தை புதிய பூமி வெளிப்படுத்த வேண்டும் என வேண்டுகின்றேன்.

வ. சி. பரமசிவம்
ஓய்வு பெற்ற அரச ஊழியர்
யாழ்ப்பாணம்

## தோழர் மு. கார்த்திகேசன்
## 30 வது ஆண்டு நினைவு
## (1919- 1977)



இலங்கையில் பொதுவுடமைமை இயக்கத்தை முன்னெடுத்துச் சென்ற முன்னோடிகளில் ஒருவர் தோழர் மு. கார்த்திகேசன். தான் வரித்துக் கொண்ட மாக்சிச லெனினிசக் கொள்கை வழியில் சொல்லாலும் செயலாலும் தனது இறுதி மூச்சு வரை வாழ்ந்து மறைந்தவர் கார்த்திகேசன். அவர் தொழிலால் ஆசிரியர். வாழ்வால் முன்னுதாரா வாழ்வு வாழ்ந்த மாக்சிச லெனினிசவாதி. 1919ல் பிறந்த கார்த்திகேசன் (1937-41) காலகட்டத்தில் இலங்கை பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தவர். அக்கால கட்டம் சர்வதேச ரீதியிலும் தேசிய அளவிலும் மாக்சிசம் லெனினிசமாகி தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும் அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் பிரிவினரிடையேயும் வேகமாகப் பரவி வந்த காலப் பகுதியாகும். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் ஸ்டாலின் தலைமையில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சோஷலிசத்தில் வீறு நடை போட்ட காலமுமாகும்.

அக்காலத்தில் இலங்கையில் பல புத்திஜீவிகள் மாக்சிச லெனினிசத்தால் ஈர்க்கப்பட்டனர். ஏற்கனவே டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹா பீற்றர் கெனமன் ஏ. வைத்திலிங்கம், பொன். கந்தையா போன்றோர் மாக்சிசத்தை கையேற்று பொதுவுடைமைக் கட்சிக்கான கால் கோள் நாட்டினர். அவர்களோடு இணைவதில் பல்கலைக் கழகக்கப்பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய நா. சண்முகதாசன் மு. கார்த்திகேசன் போன்றோர் இணைந்தனர். முழுமையாக பொதுவுடைமை இயக்கத்திற்கு தம்மை அர்ப்பணித்தனர்.

தோழர் கார்த்திகேசன் 1945ம் ஆண்டில் வடபுலத்தில் கட்சிப் பணிகளை முன்னெடுப்பதற்காக பொதுவுடைமைக் கட்சியால் அனுப்பி வைக்கப்பட்டார். அன்றிலிருந்து அவர் தனது இறுதி மூச்சை விடும் வரை பொதுவுடைமை இயக்கத்தைக் கட்டியெழுப்புவதில் ஏனைய பொதுவுடைவாதிகளுடன் இணைந்து தனது ஆற்றல் ஆளுமை முழுவதையும் பயன்படுத்திக் கொண்டார். அதன் மூலம் புதிய தலைமுறையினரை பொதுவுடை இயக்கம் உள்வாங்கி வளரச்சி கண்டது. வடபுலத்தின் பொதுவுடைமை இயக்கத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் (தோழர் சி. கா. செந்திவேல் 2002ல் வெளியிட்ட வடபுலத்து பொதுவுடைமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும் என்னும் நூலில் விரிவாகக் காணலாம்) தோழர் கார்த்திகேசனின் பங்களிப்பும் பணியும் விரவி நின்றது. ஒரு மாக்சிச லெனினிச வாதியின் சொல்லும் செயலும் வாழ்வும் பணியும் தான் புதிய வித்துக்களான இளைய தலைமுறையினரை வீரியத்துடன் வளரவைக்கிறது. தமது காலத்தினதும் அதற்கு முந்திய கால கட்டத்தினதும் முன்னோடிகளில் இருந்து பெறப்பட்டவற்றின் மூலமே புதிய தலைமுறையினர் ஊட்டம் பெற்ற முழுமையான மாக்சிச லெனினிசவாதிகளாக வளர்ச்சி பெறுகின்றனர்.

அந்த வகையில் தோழர் கார்த்திகேசன் போன்ற பொதுவுடைமை இயக்க முன்னோடிகள் மீண்டும் நினைவு கொள்ளப்பட்டு படிக்கப்பட வேண்டும். இன்றைய தேசிய சர்வதேசியச் சூழலில் இவ்வாறான படிப்பிற்கும் செயற்பாட்டிற்கும் புதிய தலைமுறைப் பொதுவுடைமைவாதிகள் முதன்மை இடம் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் அர்ப்பணிப்புடனும் தியாக சிந்தையுடனும் செய லாற்றிச் சென்ற கார்த்திகேசன் போன்ற முன்னோடிகள் கண்ட இலட்சியக் கனவை நனைவாக்க முடியும். அதற்கான திடசங்கற்பத்தைக் கொள்ள இயலும்.

சி.கா.செ

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# அமைச்சுப் பதவி துறந்தது யாருக்காக?

**இ.தொ.கா வின்** அமைச்சர்கள் இராஜினாமா செய்து ஒரு மாதத்திற்கு மேலாகிறது. அவர்களது இராஜினாமாவை இன்னும் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ச ஏற்கவில்லை. என்று கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் இராஜினாமா செய்தார்கள் என்ற செய்தி வெளி வந்ததையடுத்து அரசாங்கத்துடன் யாரும் சேர்ந்து கொள்ளலாம். யாரும் வெளியேறலாம். அது அவரவர்கள் விருப்பம் என்று ஜனாதிபதி கூறியிருந்தார். இ.தொ.கா தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைவதையும் அதிலிருந்து பிரிவதையும் நீண்டகால அரசியல் நாகரீகமாகக் கொண்டுள்ளனர். எதற்காக பிரிவார்கள் எதற்காக இணைவார்கள் என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும். அவர்களுக்கு சௌகரியமில்லாவிட்டால் அரசாங்கத்திலிருந்து விலகுவார்கள்.

தகவல் தொழிநுட்ப இயந்திரத் தொகுதியொன்றை எவ்வித சுங்க வரியுமின்றி இறக்குமதி செய்து கொள்ளவதற்காக இ.தொ.கா தலைவர்கள் ஜனாதிபதியின் ஆலோசகரும் சகோதரர்களில் ஒருவருமான பசில் ராஜபக்ச வுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது அவர் இ.தொ.கா தலைவர்களை தகாதவார்த்தைகளில் திட்டினார் என்பதலேயே அமைச்சுப்பதவிகளை இராஜினாமா செல்வதாக அறிவித்தன

இதிலிருந்து தோட்டத்தொழிலாளர்களின் அடிப்படைப்பிரச்சினைகள் எதனையும் தீர்க்கும்படி கோரிக்கை விடுத்து இ.தொ.காவின் அமைச்சர்கள் அவர்களின் அமைச்சுப்பதவிகளை துறக்கவில்லை.



அவசரத்தில் பதவிகளைத் துறந்துவிட்டு மீண்டும் அமைச்சுப்பதவிகளை பெற்றுக் கொள்ள திரைமறைவு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகப் பேசப்படுகிறது.

அதேவேளை அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொண்டிருக்கும் ம.ம.மு தலைவர்கள் தோட்டத்தொழிலாளர்களையும் இ.தொ.கா. வையும் இழிவுபடுத்தி பேசியதாக கூறப்படும் பசில் ராஜபக்சவை தோட்டங்கள் தோறும் அழைத் துச் சென்று அடிக்கல் நாட்டுப் விழாக்களை நடத்துகின்றனர்.

இ.தொ.கா, ம.ம.மு மட்டுமன்றி அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் எந்தவொரு அமைப்புகளும் அதன் சொந்த நலன்கருதியே இணைந்திருக்கிறது. அடக்கு முறை, அரசாங்கங்களுடன் இணை ந்து கொண்டிருப்பதை போன்று மக்கள் விரோத செயற்பாடு எதுவும் இருக்க முடியாது.

அதேவேளை அரசாங்கத்திற்கு பதிலாக மாற்று அரசாங்கத்தை கொண்டுவருவதாக சமாதானம் கூறிக்கொண்டு இந்நாட்டிற்கு பாரிய அடக்குமுறை பாரம்பரியத்தையே ஐ.தே.கட்சியுடன் இணைந்து கொண்டு செயற்படும் பே.ம.மு தலைவர் மனோகணேசன் போன்றவர்களும் இருக்கின்றனர். அவர் ஐ.தே.க பட்டியலில் போட்டியிட்டு வென்றவர் என்ற நன்றியுணர்வும், எதிர்காலத்தில் அதில் போட்டியிட்டால்தான் வெல்லமுடியும் என்ற சாணக்கியம் கொண்டவர். அதற்காக பாதிக்கப்பட்ட மக்களை ஐ.தே கட்சியிடம் பாதக்காணிக்கையாக கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இந்த சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாடுகளால் மலையகத்தமிழ் மக்களுக்கோ, ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கோ எவ்வித விமோசனமும் இல்லை.

## சுதந்திரம் எனும் மாயை

கூரான என்
பேனா முனையை
முறித்துப் போட்டீர்கள்

மழுங்கிய முனைகளைக்
கொண்டு
தெளிவில்லாமல்
எழுதச் சொன்னீர்கள்

இல்லையெனின்
கண்களை, காதுகளை, வாயை
பொத்திக் கொண்டு
காந்தி மேசைக் குரங்காய்
இருக்கச் சொன்னீர்கள்

நான் நடக்கும் போது
என் நிழலுக்கு பதிலாக
உங்கள் துப்பாக்கிகள்
என்னைத் தொடர்கின்றன.

எப்போதும் என்னைச் சுற்றி
உங்கள்
வேட்டை நாய்கள்.

ஒரு வட்டத்தை வரைந்து
அதிலேயே
என் காலத்தை கழிக்கச்
சொன்னீர்கள்

வட்டத்தை மீறி என்
சுவடுகள் பதியும் போது
உங்கள்
முகமூடி கிழிந்து கொள்ளும்

என் பயணம் தொடரும் போது
உங்கள் ஜனநாயகம்
மரணத்தை நினைவுபடுத்தும்

-கிருஷ்ணா-

1ம் பக்க தொடர்ச்சி

### சர்வகட்சி மாநாடு......

அத்தகைய வற்புறுத் தல்களை ஒரேயடியாக நிராகரிக்க முடியாத அரசாங்கம் அரசியல் தீர்வுக்கு உரிய நடவடிக்கை எடுத்து வருவதாகக் பொய் முகம் காட்டிக் கொள்ளவே சர்வகட்சி மாநாட்டைத் தொடக்கியது. அதற்குத் தலைவராக இடதுசாரி சமசமாஜக் கட்சியின் அமைச்சர் திஸ்ஸ விதாரணவைத் நியமித்துக் கொண் டது. அவரும் சில முயற்சிகளை எடுத்து இச் சர்வகட்சி மாநாட்டின் மூலம் குறைந்த பட்சத் தீர்வு ஆலோசனைகளை யாவது வரைந்து கொள்ளலாம் என்றே நம்பிக் கொண்டார். ஆனால் ஜனாதிபதியின் திட்டமிட்ட முடக்கும் செயற்பாடுகளால் சர்வகட்சி மாநாடு அர்த் தமற்றதாகிப் போயுள்ள கையறு நிலையினையே அவரும் காணவேண்டி ஏற்பட்டுள்ளது. பாவம். அவரும் அவரைப் போன்ற பாராளுமன்ற சந்தர்ப்பவாத இடதுசாரிகளும் எதைத் தான் செய்ய முடியும். அவர்கள் ஏற்கனவே பேரினவாதத்திற்கு வளைந்தும் பணிந்தும் கொண்ட வர்கள். தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் பதவிகளுக்காக கைநழுவ விட்டவர்கள். என்பது மறைக்கக் கூடிய ஒன்றல்ல. இன்றும் ஒற்றையாட்சி பௌத்த மேலாதிக்கம் என்று கூறி நிற்கும் ஜனாதிபதியை எதிர்த்து ஒரு வார்த்தை கூறக் கூடத் தயாராக இல்லை.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான சர்வ கட்சி மாநாடு என்ற ஏமாற்று வகை சார்ந்த அரசியல் நாடகம் இன்று மட்டும் இடம் பெறும் ஒன்றல்ல. கடந்த முப்பது வருடகால இன முரண்பாடும் போராட்டமும் யுத்தமும் என்ற அழிவுச் சூழலில் பல தடவைகள் நடாத்தப்பட்டு தோல்வி கண்டவை தான். இலங்கை பல்லினத் தேசியங்களைக் கொண்ட ஒரு நாடு என்ற யதார்த்தம் ஏற்றுக் கொள்ள ப்பட்டு இனங்களின் தனித்துவம் சமத்துவம் ஐக்கியம் சமாதானம் என்பனவற்றின் அடிப்படையில் அரசியல் தீர்வு நோக்கி முன்னெடுக்கப்படும் ஒரு சர்வ கட்சி மாநாடு இடம் பெறுமானால் பயன் அது உள்ளதாக அமைய முடியும். அதை விடுத்து பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை தேசிய இனங்கள் மீதும் சிறுபான்மை சமூகங்களிடமும் திணிக்க முற்படும் எந்தவொரு சர்வ கட்சி மாநாடும் தோல்வியை மட்டுமே தழுவிக் கொள் ளும்.

### யாழ்- பல்கலைக்கழக மருத்துவ......

3ம் பக்க தொடர்ச்சி

என்றெல்லாம் எழுதியும் பேசியும் வரும் தமிழ்த் தேசியச் சூழலில் தமிழர்கள் மத்தியில் இருந்து மருத்துவர்களாக வெளிவரும் மாணவர்கள் வடக்கு கிழக்கை விட்டு வெளியே சென்றுவிடச் சந்தர்ப்பம் பார்த்து இருப்பது எவ்வகையிலும் நியாயமல்ல. வடக்கு கிழக்கிற்கு உரிய ஒரே மருத்துவ பீடத்திலிருந்து வெளிவரும் மருத்துவர்கள் தத்தமது பிரதேச மக்களுக்கு முதலில் சேவை செய்ய வேண்டும். வெளி மாவட்டங்களில் பயிற்சி பெற்று அங்கேயே பணி நியமனம் பெறுவதும் சிலர் வெளிநாடுகளுக்குப் பாய்ந்து கொள்ள எத்தணிப்பதும் தவாறான நிலைப்பாடாகும். மருத்துவர்களாவதன் மூலம் பணம் திரட்டுவதற்கும் பெருந்தொகைச் சீதனம் பெற்று உயர்தர ஆடம்பர வாழ்வு நடத்துவதற்கும் அந்தஸ்து கௌரவம் தேடிக் கொள்வதற்கும் உரிய ஒன்றாகவே தமிழ்ச் சூழலில் அன்று முதல் இருந்து வந்த நடைமுறையாகும். இலவசக் கல்வி தாய்மொழிக் கல்வி பின்பு உயர்தரக் கல்வி என்பனவற்றின் மூலமாக மக்களது பணத்திலேயே மருத்துவர்கள் உட்பட துறைசார் நிபுணர்கள் உருவாகிறார்கள். இத்தகையவர்கள் ஒரு கணம் தானும் மக்களுக்கும் சமூகத்திற்கும் சேவை செய்ய மனம் ஒப்பாதவர்களாகி சுய நலமிகளாகிக் கொள்கின்றனர். இதற்கு விதிவிலக்காகி மனச்சாட்சி மனித நேயத்தை கடைப்பிடித்து பணிபுரிந்து வருபவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தனி மனித முனைப்பும் தனிச் சொத்து சேர்த்து சமூக சிந்தனை அற்று வாழும் இன்றைய சமூகச் சூழலில் இத்தகைய மருத்துவ மாணவர்கள் சுயநல முடிவுகளையே நாடி நிற்பது தவிர்க்க முடியாத ஒன்றேயாகும். ஆதலால் யாழ். மருத்துவ மாணவர்கள் வடக்கு கிழக்கில் பயிற்சி பெறவும் அப் பயிற்சிக் காலம் உட்பட இரண்டு வருடம் அங்கே பணி புரிவதும் இன்றைய சமூகக் கடமையாகும். அதேவேளை இத்தகைய கட்டாயத்தை விதிக்கும் அரசாங்கம் வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை அச்சமற்றுப் பணிபுரியக் கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும். மனித உரிமை மீறல்களையும் மக்கள் விரோத நடைமுறைகளையும் கைவிட வேண்டும். ஏற்கனவே மருத்துவர்கள் வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற அரச அடக்குமுறையே காரணம் என்பதையும் மறந்துவிட முடியாது.

1ம் பக்க தொடர்ச்சி

### எமக்கு சம்பள உயர்வு......

ஜனாதிபதி ஆவார். அலரி மாளிகையில் அவர் தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். சம்பள உயர்விற்கான தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் முடிவிற்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் பங்கெடுத்தனர். அப்போதும் தொழிலமைச்சர் பல முறை இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் பேசினார். முடிவெதுவும் எடுக்கப்படாது பல முறை பேச்சுவார்த்தைகள் முற்றுப்பெற்றன. அப்போது இ.தொ.கா, இ. தோ.தோ.தொ.ச, பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி என்பன தோட்டத்தொழிலாளர்க ளுக்கு நாளாந்தம் ரூபா 260/= கிடைக்கப்போவதாகப் பெரிய தம்பட்டம் அடித்தன. கூட்டு ஒப்பந் தத்தில் கையொப்பமிட்டன. தோட்டத்தொழிலாளர்களின் போராட்டத்தை காட்டிக்கொடுத்தன.

அனைத்து தோட்டத்தொழிலாளர்களுக்களுக்கும் ரூபா 260/= கிடைக்கப்போவதில்லை என்பதைப் புதிய பூமி மூலம் சுட்டிக்காட்டப்பட்டது. ஆகக் கூடியது ஒருவருக்கு ரூபா 195/= மட்டுமே கிடைக்கும் என்பதும் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் இக்கருத்துக்களை அந்த மூன்று தொழிற்சங்கங்களும் ஏற்க மறுத்தன.

இன்று அவைதான் ரூபா 200/= அடிப்படை சம்பளம் வேண்டுமென்று கோரிக்கையை விடுத்துள்ளன. இன்று சாதாரண தோட்டத்தொழிலாளர் குடும்பமொன்றுக்கு நாளொன்றுக்கு ரூபா 750/= தேவைப்படும் போது ரூபா 200 அடிப்படை சம்பளமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினால் என்ன பயன்? இரு நூறு ரூபா கோரிக்கையினால் தோட்டத்தொழிலாளர்களின் தற்போதைய நாளாந்த வருமானத்தில் எவ்வித அதிகரிப்பும் ஏற்படமாட்டாது. ரூபா 5000/= மாதாந்த அடிப்படை சம்பளமாகக் கொண்டிருக்கும் ஏனைய தனியார் துறை ஊழியர்களின் மொத்தசம்பளம் ரூபா 15000/= மேல் கிடைக்கிறது. தோட்டத்தொழிலாளர்களின் மாதாந்த அடிப்படை சம்பளத்தை ரூபா 5000/= ஆக அதிகரிக்கு ம்படி கோருபவர்கள் அவர்களின் மொத்த சம்பளத்தை ரூபா 15000 ஆயிரத்திற்காவது உயர்த்திப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வித வேலைத் திட்டங்களையும் கொண் டிருக்கவில்லை. அதனால் இருக்கின்ற மொத்த நாள் சம்பளத்தில் எவ்வித அதிகரிப்பையும் ஏற்படுத்தாமல் அடிப்படை சம்பளத்தில் மட்டும் மாற்ற த்தை ஏற்படுத்தி சில ரூபாய்களைத் தரும்படி கோரிக்கை விடுப்பதால் என்ன பிரயோசனம்.

இது தேவையான நியாயமான சம்பளக்கோரிக்கையைத் தொழிலாளர்களின் சார்பில் முன்வைக்கப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கை ஆகும். தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தோட்டத்தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தில் ரூபா 30 ஐ அதிகரித்து தரும்படி கேட்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. அத்துடன் அரசாங்கத்தின் தலையீடு ஜனாதிப தியின் தலையீடுகள் எல்லாம் கடந்த காலங்களிலும் நடைபெற்றன. அவை யாவும் தொழிலாளர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை. தொழிலாளர்கள் அவர்களின் உழைப் புக்கு கேற்ற, வாழ்க்கைச் செலவுக்கு அமைய சமாளிக்கக்கூடிய நியாயமான சம்பளத் தையே கேட்டுவருகின்றனர். சம்பள உயர்வு பற்றிய தீர்மானம் எதுவும் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு கிட்டவாவது செல்லவில்லை. மாறாக தோட்டக்கம்பெனிகளின் விடாப்பிடியான முடிவுகள் தொழிற்சங்கங்கள் மீதும் தொழிலாளர்கள் மீதும் திணிக்கப்பட்டன. அப்போதெல்லாம் தொழிற்சங்கங்களின் தோல்விகள் வெற்றியாகவே காட்டப்பட்டன.

தற்போதும் அவ்வாறான ஒரு அணுகுமுறையையே இ.தொ.கா. எடுத்துள்ளது. அதாவது நாளாந்த அடிப்படை சம்பளத்தை ரூ 30/= ஆல் அதிகரிக்கும்படி கேட்டு தோட்டக்கம்பெனிகளுக்கு உதவும் நடவடிக்கையையே இ. தொ. கா. முன்னெடுத்துள்ளது.

தற்போதைய வாழ்க்கைச் செலவு சுமையைச் சமாளிக்க கூடிய சம்பள உயர்வு அவசியம். அதனை முன்மொழிந்து தொழிற்சங்கங்கள் போராடவேண்டும். அதனை வென்றெடுக்க அரசாங்கம் தலையிட்டு தோட்டக் கம்பெனிகளை நிர்ப்பந்திக்க வேண்டும். இதைவிடுத்து வெறும் சலசலப்பிற்காகவும் தமது அரசியல் பதவி ஆதாயங்களுக்காகவும் சம்பள உயர் வுபற்றி உரத்துப்பேசி இறுதியில் தொழிலாளர் தலையில் மிளகாயையே அரைத்துக் கொள்வர் என்பது மட்டும் உண்மையாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 14 செப்ரெம்பர் 2007 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 106
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# மக்களின் சொத்துக்கள் கொள்ளை! தெரிவுக்குழு விசாரணை கண்துடைப்பா?

**20 அரசாங்க நிறுவனங்களில்** அறுநூறு கோடி ரூபாய் ஊழல் இடம் பெற்றிருப்பதாக பொது நிறுவனங்களுக்குப் பொறுப்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு அறிவித்துள்ளது. ஏற்கனவே 26 நிறுவனங்களில் 15 ஆயிரம் கோடி ரூபா ஊழல் மோசடி லஞ்சம் என்பன இடம் பெற்றிருந்தது. இவ் இரண்டாவது அறிக்கையில் மேலும் இருபது நிறுவனங்களின் ஊழல் மோசடி வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

லேக்ஹவுஸ், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், பிணைகள் கைமாற்று ஆணைக்குழு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, நுகர்வோர் விவகார அதிகாரசபை, விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதிச்சபை, தெங்கு அபிவிருத்தி சபை ஊழியர் நம்பிக்கை நிதியம், தேசிய வீடமைப்பு அதிகாரசபை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனம், இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், தேசிய இளைஞர் சேவை மன்றம், தேசிய இரத்தினக் கல் ஆபரணங்கள் அதிகாரசபை, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கான இலங்கை சபை, தென்பிராந்திய அபிவிருத்தி சபை, றுகுண அபிவிருத்தி வங்கி, மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியம் ஆகிய நிறுவனங்களில் இடம் பெற்றுள்ள ஊழல்கள் மோசடிகள் பற்றி பாராளுமன்ற தெரிவுக்குழு விசாரணைகளை நடாத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கைகளின் மூலம் அந்நிறுவன அதிகாரிகளினால் அந் நிறுவன சொத்துக்களும், வளங்களும் கையாடப்பட்டுள்ளன பற்றியும், மோசடி செய்யப்பட்டுள்ளமை. பற்றியும் கவலையீனமான பரிபாலனம் செய்யப்பட்டுள்ளமை பற்றியும் அம்பலப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த தெரிவுக்குழு விசாரணைகளை நடத்தக் கூடாதென்று அந்நிறுவனங்களுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தி வந்துள்ளனர். அவ்விசாரணைகளுக்கு பயந்தே எதிர்க்கட்சியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதாவது அவர்கள் முன்பு அமைச்சர்களாக இருந்த போது அம் மோசடிகள் இடம் பெற்றுள்ளதால் அவர்கள் அதற்கு பொறுப்பாவர். இவை பற்றி விசாரித்த பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்சவிற்கு அச்சுறுத்தல்கள் கூட விடுவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. இவ்வாறான தகவல்கள் வெளிவந்தபோதும் தெரிவுக் குழுவின் விசாரணை அறிக்கைகள் வெளியாகியுள்ளன. அந்நிறுவன மோசடிகள், ஊழல்களில் சம்மந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக லஞ்ச விசாரணை ஆணைக்குழுவிடம் இவ் விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட விருப்பதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிறுவனங்களின் சொத்துக்கள் பொதுமக்களின் சொத்துகளாகும். அவை முறையாகக் கையாளப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். அதற்காக அச்சொத்துப் பரிகரணம் தொடர்பில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். எடுக்கப்படுமா என்பதே கேள்விக்குரியதாகும்.

அவ்வூழல்கள் மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு பொதுவாக அரசாங்கம் பாதுகாப்பு வழங்குவதே நாமறிந்த விடயம், அப்படி விசாரணைகள் நடைபெற்று குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலும் விரல்விட்டு எண்ணக் கூடிய சம்பவங்களாகவே இருக்கும். அந்த சம்பவங்களைப் பார்த்த மக்கள் அரசாங்கத்தினாலும் விசாரணை நிறுவனங்களாலும் நீதி புரியப்பட்டுள்ளதாக ஆறுதலடைவர். பெரும்பாலான விடயங்கள் கணக்கில் எடுக்கப்படுவதே இல்லை. ஒரு சம்பவத்திற்கு 'நீதிபுரியப்பட்டாலும்' எதிர்காலத்தில் அவ்வாறான மோசடி ஊழல் சம்பவம் இடம் பெறாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. அதே வேளை தண்டிக்கப்பட்டாலும் அவர்கள் 'சிறு மீன்களாகவே' இருப்பர். 'திமிங்கிலங்கள்' தவறிக் கொள்ளவே செய்வர்.

எனவே தற்போது பாராளுமன்ற தெரிவுக்குழு கண்டுப்பிடித்துள்ள ஆயிரம் மில்லியன் ரூபாய் மோசடி தொடர்பான விசாரணை, அதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றன வெறும் கண்துடைப்பாக இருக்கக் கூடாது. இது மக்களின் எதிர்பார்ப்பென்றாலும் விசாரணை நிறு வனங்கள் சமூகநீதியை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலே அது சாத்தியமாகும். ஏற்றத்தாழ் வான முதலாளித்துவ சமூக அமைப்பில் அது சாத்தியமானதல்ல. அதற்காக மக்கள் பேசாமல் இருந்து விட முடியாது. வாழ்க் கைச் செலவு உயர்வு வரிச்சுமை போன்றவற்றால் பாதிக்கப்படும் மக்கள் அவற்றுக்கெல்லாம் ஓரளவாவது காரணமான மோசடிகள், ஊழல்களை சகித்துக் கொள்ள முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகளுக்கு சாதாரண மக்களைவிட பலமடங்கு சம்பளம் கிடைக்கிறது. அது அவர்கள் ஆடம்பரமாக வாழ்வதற்கு போதுமானாலும் அதற்கு மேலாக அவர்கள் மோசடிகள், ஊழல்களில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்வதில்லை. இந்த முதலாளித்துவ அரசியல், பொருளாதார பொறி முறை சுரண்டல் ஊழல் மோசடி, பிறழ்முகாமை, லாபம், வட்டி போன்றன இல்லாமல் இயங்கமுடியாது. இவை மக்கள் விரோத செயற்பாடுகளேயாகும்.

முதலாளித்துவத்தில் நல்ல முதலாளித்துவம் கூடாத முதலாளித்துவம் என்று எதுவும் கிடையாது. முதலாளித்துவம் எப்போதுமே பெரும்பான்மையான சாதாரண தொழிலாளர்கள் விவசாயிகள், உழைப்பாளிகள் மற்றும் சுரண்டப்படும் அனைத்து வர்க்கங்களுக்கும் எதிரான நிலைகளிலேயே ஊழல் மோசடி லஞ்சம் முறைகேடுகள் புரிகின்றன. இதனைத் தட்டிக் கேட்டு எதிர்க்கும் போது கொடிய அடக்குமுறைகளை ஏவிவிடுகின்றது முதலாளித்துவம்

சோஷலிஸ ஆட்சிமுறையிலும் ஊழல்கள் மோசடிகள் இடம்பெறுவதற்கு காரணம் நிச்சயமாக சோஷலிஸமல்ல. முதலாளித்துவக் கருத்தியலும் நடைமுறைகளும் ஆரோக்கியமான சமூகத்தைப் படைக்க எண்ணம் கொண்டுள்ள சோஷலிஸ ஆட்சிமுறைக்கு எதிரான புற்றுநோய் போன்று இருக்கவே செய்யும். இருப்பினும் சோஷலிசத்தின் கீழ் இடம் பெறும் மிகக் குறைவான ஊழல் லஞ்சம் மோசடிகளுக்கு மக்கள் மத்தியிலான விசாரணைகளும் கடுமையான தண்டனைகளும் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே மக்களின் சொத்தைக் கொள்ளையிட்டவர்கள் எவராக இருப்பினும் உரிய விசாரணைக்கு உட்படுத்தி கடுமையான தண்டனை வழங்க வேண்டும். தினம் ஊழல் மோசடி லஞ்சம் பொய் புரட்டு ஏமாற்று போன்ற வற்றால் உறுட்டிச் செல்லப்படும் ஒரு அரசாங்கத்தின் கீழ் அது சாத்தியமா? மக்கள் தான் சிந்திக்க வேண்டும்.

**-ஆசிரியர் குழு-**

# ஊடக சுதந்திரமும் ஊடகவியலாளர் மீதான அச்சுறுத்தலும்

**வெகுஜனன்**

**உலகில் எந்தவொரு** நாட்டிலும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது சிக்கல்களையும் நெருக்கடிகளையும் எதிர்ப்புக்களையும் எதிர் நோக்கும் போது அந்நாட்டு அரசாங் கமானது அடக்கு முறை களைக் கட்டவிழ்த்து விடுவது ஆளும் வர்க்கங்க ளின் இயல்பாகும். இந்த இயல்பு அரசு என்ற கட்டமைப்பின் அடிப்படையில் இருந்து பெறப்படுவதாகும். அரசாங்கங்களை எதிர்த்து நிற்கும் அனைத்து சக்திகள் மீதும் ஏவப்படும் இவ் அடக்கு முறை ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் விட்டு வைப்பதில்லை. மக்களுக்கு உடனுக்குடன் தகவல்களையும் கருத்துக்களையும் விமர்சனங்களையும் தருவது ஊடகங்களாகும். அவற்றில் அரசாங்கத்தை விமர்சனம் கண்டனம் செய்து மறைக்கப்பட்டிருக்கும் தகவல்களை வெளியே கொண்டு வரும் ஊடகங்கள் ஊடகவியலாளர்கள் மீது பல வித அடக்குமுறைகள் ஏவிவிடப்படுவது தொடர்ந்தும் இடம் பெற்று வந்துள்ள நிகழ்வுகளாகும்.

ஜனநாயகம் கருத்துச் சுதந்திரம் பத்திரிகைச் சுதந்திரம் என்றெல்லாம் அலங்கார வார்த்தைகள் கொண்டு அரசியல் யாப்பில் எழுதப்பட்டிருப்பினும் ஆளும் வர்க்கத்திற்கு நெருக்கடி ஏற்படும் போது அந்தச் சுதந்திரங்கள் யாவும் தூக்கி வீசப்பட்டவைகளாகி விடும். அவ் வேளைகளில் ஊடகங்களின் மீதும் ஊடகவியலாளர் மீதும் அப்பட்டமான அடக்கு முறைகள் கையாளப்படும். குறிப்பாக ஊடகவியலாளர்கள் இலக்கு வைத்து தாக்கப்படுவர். இத் தாக்குதல்கள் பல நிலைகளில் மேற் கொள்ளப்பட்டு கொலைகள் வரை முன்னெடுத்துச் செல்லப்படும்.

இவ்வாறு தாக்குதல்களுக்கும் கொலைகளுக்கும் உள்ளாகிய இலங்கையின் ஊடகவியலாளர்களின் பட்டியல் நீளமானது. இதில் சிங்கள தமிழ் முஸ்லீம் ஊடகவியலாளர்கள் என்ற வேறுபாடின்றி ஆளுவோருக்குச் சவாலாகக் கருத்து வெளியிட்ட பலர் ஒவ்வொரு கால கட்டத்திலும் அரச வன்முறைக்குப் பலியாக்கப்பட்டனர். இவர் யார்? என்ன செய்கிறார்? எனக் கேள்வி எழுப்பிக் கருத்து வெளியிட்ட றிச்சாட் டி சொய்சா என்ற இளம் பத்திரிகையாளர் வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு கொன்று கடற்கரையில் போடப்பட்டார். இது 1988- 89 கால கட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் இருண்ட ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றது. அவ்வாறே பல பத்திரிகையாளர்கள் கொடூர அடக்கு முறைகளை அனுபவித்தனர். பின் வந்த அரசாங்கங்களும் அதே அடக்கு முறைகளையே பின்பற்றினர்.

இதன் வழியில் வடக்கு கிழக்கில் அண்மைய வருடங்களில் பத்திரிகை நிறுவனங்களும் பத்திரிகையாளர்களும் தாக் குதல்கள் கொலைகளுக்கு ஆளாகி வந்துள்ளனர். அவ்வாறே தெற்கிலும் இடம் பெற்று வந்துள்ளன. இவ்வாறான தாக்குதல்களும் கொலைகளும் நீடித்துச் செல்லும் சூழலில் அரசாங்கத் தரப்பிலிருந்து அவற்றை ஏதோ விதத்தில் நியாயப்படுத்தும் அறிக்கைகளும் கருத்துக்களுமே வெளியிடப்படுகின்றன. இதுவரை கொல்லப்பட்ட எந்தவொரு பத்திரிகையாளனினதும் கொலைக்காகயாரும் தண்டனை பெற்றது கிடையாது. விசாரணைகள் எல்லாம் வெறும் கண்துடைப்புகளேயாகும்.

ஊடகங்களோ ஊடகவியலாளர்களோ நடுநிலை கொண்டவைகளோ புனிதமானவர்களோ அல்லர். ஊடகவியலாளர்கள் சிலர் மிகப் பிற்போக்கான கருத்துக்களையும் வெளிப்படையான பக்க சார்பையும் கொண்டவர்கள் என்பதில் ஐயமில்லை. அதேவேளை சில ஊடகவியலாளர்கள் உள்ளூரவே சந்தர்ப்ப வாதிகளாகவும் அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளுக்கு ஒற்றுவேலை செய்பவர்களாகவும் பணி புரிகிறார்கள் என்பதும் கண்டு கொள்ளக் கூடியதாகும். அதே வேளை சிலர் தமது கருத்துக்களை தமது பேனாக்கள் மூலம் மக்கள் சார்பானவையாகவும் மக்களுக்கு எதிரான நிலைகள் எடுக்கப்படுவதை எதிர்ப்போராகவும் இருந்து எழுதி வருகிறார்கள். பணத்திற்காக சுயநல செல்வாக்கிற்காக எழுதுகிற பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். அத்தகையோரின் கருத்துக்கள் கருத்துக்களால் எதிர்க்கப்பட வேண்டுமே தவிர வன்முறையால் அல்ல. அதேவே ளை மனச் சாட்சிக்கு நேர் மையாகவும் சமூக அக்கறை சார்ந்தும் எழுதுவோர் இருக்கிறார்கள். அத்தகைய பத்திரிகை யாளர்களே சவால்களுக்கும் அச் சுறுத்தல்களுக்கும் ஆளாகிறார்கள். பழி வாங்கப்பட்டு கொலப்படுகிறார்கள். அரச அடக்கு முறையால் மட்டுமன்றி கடந்த கால் நூற்றாண்டு கால தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் மத்தியில் இயக்கங்களுக் கிடையிலான மோதலில் பல பத்திரிகை யாளர்கள் பழிக்குப் பழி எனக் கூறிப் படுகொலைகளுக்கு ஆளாக்கப்பட்டனர் என்பதும் நினைவு கூரத்தக்கதாகும்.

இன்றைய இலங்கையின் ஒடுக்கு முறை யுத்த சூழல் ஊடகவியலாளர்களுக்கு படுபாதகமானவையாகவே உள்ளன. வடக்கு கிழக்கில் மட்டுமன்றி தெற்கிலும் அவர்கள் அபாயங்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கி நிற்கின்றனர். அண்மையில் கொழும்பில் பத்திரிகையாளர் இக்பால் அத்தாசிற்கு கடும் அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது. அவர் சண்டே ரைம்ஸ் ஆங்கிலப் பத்திரிகையின் ஆலோசனை ஆசிரியரும் பாதுகாப்பு அரசியல் ஆய்வாளருமாவார். அவர் எழுதிய பல கட்டுரைகள் முக்கியத்துவமுடையவை. அத்துடன் சர்ச்சைகளையும் பிரச்சினைகளையும் எழுப்பியும் வந்தன. அந்த வகையில் அண்மையில் அவர் எழுதிய "மிக் 27" விமா னக் கொள்வனவில் இடம் பெற்ற ஊழல் பற்றிய கட்டுரை ஆளும் தரப்பில் சிலரை மடைய வைத்தது. அதன் வெளிப்பாடாக அத்தாசின் இல்லம் முன்பாக திட்டமிடப் பட்ட வகையில் சிலர் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் அவருக்கு அச்சுறுத்தலும் விடுவிக்கப்பட்டது. அவர் மட்டுமன்றி அச் சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ள வேறும் பல பத்திரிகையாளர்கள் தலைமறைவாகவும் சுயபாதுகாப்புடனும் இருந்தவாறே எழுதி வருகின்றனர்.

இன்று சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புகள் இலங்கையின் வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் இடம் பெறும் ஊடகங்கள் ஊடகவியலாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்கு முறைகள் அச்சுறுத்தல்கள் கொலைகளை வன்மையாகக் கண்டித்து வருகின்றன. இருப்பினும் ஒடுக்கு முறை அரசின் செயற்பாடுகள் குறைவதாக இல்லை. மேலும் ஒரு படி சென்று பத்திரிகை அவதூறுச் சட்டத்தைக் கொண்டு வரத் தருணம் பார்த்து இருக்கிறது. அரசின் யுத்தத் முனைப்பும் பொருளாதார நெருக்கடிகளின் நீட்சியும் மேன் மேலும் ஊடகங்கள் ஊட கவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களையும் அடக்கு முறைகளையும் முன்னெடுத்துச் செல்லும் சூழலை அதிகரிக்கவே செய்யும். மக்கள் தான் இவற்றுக்கான உரிய பதிலைக் கூற வேண்டும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# யுத்தமும் அபிவிருத்தியும்

-சண்முகம்

நாடு சகல துறைகளிலும் சீரழிந்து சின்னாபின்னமாகிக் கொண்டு செல்கிறது. இது இன்று நேற்று உருவாக்கப்பட்ட கொள்கையின் விளைவல்ல. கடந்த முப்பது ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வந்த மிகத் தவறான பொருளாதாரக் கொள்கை முடிவுகளினதும் யுத்த முனைப்புச் செயற்பாடுகளினதும் ஒட்டு மொத்த விளைவுகளாகும். ஒவ்வொரு அரசாங்கமும் பதவிக்கு வரும் போது இத் தொடர்ச்சியான போக்குகள் தடுத்து நிறுத்தப்படும் என்றே ஏகப் பெரும்பான்மையான மக்கள் அப்பாவித்தனமாக நம்புவதும் பின்பு மோசம் போவதும் பாராளுமன்ற முதலாளித்துவ ஆட்சியில் அனுபவித்தவைகளாகும்.


அத்தகைய வரலாற்றுத் தொடரில் தான் தற்போதைய ஆட்சியும் அதற்குத் தலைமைதாங்கும் ஜனாதிபதியும் "மகிந்த சிந்தனை" என்ற மகுடத்தின் கீழ் ஆட்சிக் கட்டிலேறினர். "எல்லோரும் ஏறிய குதிரையில் சக்கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்தாராம்" என்ற முது மொழியைப் போன்று மகிந்த சிந்தனையால் ஆகப் போவது எதுவும் இல்லை என்றே நம்பமுடியும். யார் வந்தாலும் அழிவுகள் தான் பெருகும் எனத் தூரநோக்குடைய நேர்மையான அரசியல் சக்திகள் எதிர்வு கூறிய போது சிலர் கோபமடைந்தனர். வேறு சிலர் இருந்து பார்க்குமாறு சவாலும் விட்டனர். வேறு சிலரோ சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம், ஏனெனில் மகிந்தாவின் அரசியல் பிரதேச குடும்பப் பின்னணி சற்று வேறுபட்டது என்றும் காரணம் கற்பித்தனர்.

ஆனால் மகிந்த சிந்தனை ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடங்களுக்கு மேலாகி விட்டது. நாட்டின் இன்றைய நிலைதான் என்ன? இக் காலப்பகுதியில் யுத்தம் மேன்மேலும் முடுக்கி விடப்பட்டது. பல்லாயிரம் கோடி ரூபா நாளாந்த யுத்தச் செலவிற்கும் ஆயுதக் கொள்வனவிற்கும் செலவிடப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. நாட்டின் பொருளாதார அபிவிருத் திக்கும் மக்களது சுபீட்ச வாழ்வுக்கும் அவர்களது அடிப்படைத் தேவைகளுக்கும் செலவிடப்பட வேண்டிய பணமும் ஏனைய வளங்களும் யுத்த முனைகளில் பீரங்கிகளுக்கு தீனியாக்கப்ப ட்டு வருகின்றன. அண்மையில் வெளிவந்த புள்ளி விபரப்படி உள் நாட்டு வெளி நாட்டுக் கடன் தொகை முன்நூறு லட்சத்தைத் தாண்டி நிற்கிறது. மேலும் யுத்தத் தீனி தேடுவதற்காக வெளி நாட்டு வங்கி எச்.எஸ்.பி.சியிடம் 5 ஆயிரத்து நூறு கோடி ரூபா கோரப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் யுத்தத்தின் மூலமும் தாராள பொருளாதாரக் கொள்கையின் பின்பற்றுதலாலும் சிதைவடைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. இந் நிலையிலே ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் வரை யுத்தம் இடம் பெறும் அதே வேளை அபிவிருத்தியையும் முன்னெடுக்க முடியும் என மக்களுக்கு உபதேசம் செய்து கொள்கின்றனர். நிலத்தை வெட்டி அதனுள் அடிக்கல் நாட்டுவதும் எப்பவோ திறக்க வேண்டிய சிலவற்றை நாடா வெட்டித் திறப்பதும் அபிவிருத்தி என்றே அரச ஊடகங்கள் காண்பிக்கின்றன. இன்று பல நூறு ஆடைத் தொழிற்சாலைகளும் உள்நாட்டுக் கம்பனிகளும் மூடப்பட்டு விட்டன. அவற்றில் பணி புரிந்த பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் நடுத்தெருவில் நிற்கின்றனர். பாதுகாப்பின்மை காரணமாகவும் எதிர்பார்க்கப் பட்ட இலாபம் இன்மையினாலும் பல வெளிநாட்டு மூலதனக்காரர்கள் வேறு நாடுகளுக்கு மூட்டைகட்டி வருகின்றனர். உள்நாட்டுக் கைத்தொழில் விவசாய உற்பத்தித்துறை கடுமையான பாதிப்புக்களையும் சிதைவுகள் அழிவுகளையும் கண்டு வருகின்றன. ஏறத்தாழ தேசிய பொருளாதாரத் துறைகள் என அடையாளப்படுத்தப்பட்ட அனைத்துமே முற்று முழுதாகச் செயலிழந்து விட்டன. உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் எவற்றை நடைமுறைப்படுத்துமாறு கட்டளையிட்டு ஆலோசனைகள் வழங்கியனவோ அவையாவும் நிறைவேற்றப்பட்டு விட்டன. தாராள பொருளாதாரக் கொள்கைக்கும் அதன் நடைமுறைகளுக்கும் பரிந்துரைக்கப் பட்ட அனைத்தையும் ஜே.ஆர் முதல் பிரேமதாச சந்திரிகா ரணில் உள்ளிட்ட மகிந்த ராஜபக்ஷ வரை நிறைவேற்றி விட்டார்கள். அதேவேளை தனியார் மயத்திற்காக முன்வைக்கப்பட்ட உலகவங்கி சர்வதேச நாணய சபை என்பனவற்றின் கோரிக்கைகளில் ஏறத்தாள எண்பது வீதமானவை நிறை வேற்றப்பட்டு விட்டன. அதன் வழியில் சுமார் நூறு அரசாங்க பொது நிறுவனங்கள் பகுதியாகவும் முழுமையாகவும் தனியார் மயப்படுத்தப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள கல்வி, சுகாதாரம், மின்சாரம், புகையிரதப் போக்கு வரத்து, தபால், தண்ணீர், அரச வங்கி கள் போன்றன மட்டுமே தனியார் மயத்திற்குள் அகப்படாது இருந்து வரும் துறைகளாகும். அவற்றையும் அபகரித்துக் கொள்ள திரை மறைவு முயற்சிகள் நடை பெற்றும் வருகின்றன. அவற்றையும் கையளித்துக் கொள்வதற்கு இன்றைய அரசாங்கம் தயாராக இருந்த போதிலும் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் என்பனவற்றுடன் மக்களின் கடுமையான எதிர்ப்பலைகள் வெளிக் கிளம்பும் என்பதால் தயக்கங்கள் காட்டப்படுகின்றன.



மேலும் இன்றைய அரசாங்கமும் முந்திய ஆட்சியாளர்களும் யுத்தத்தையும் அதன் வளர்ச்சியையும் பேணிப்பாதுகாத்து விரிவுபடுத்தி அதற்கு பல்லாயிரம் கோடி ரூபாய்கள் செலவழித்து வந்தது போன்று பொருளாதார அபிவிருத்திக்கு முன்னுரிமையோ முதலீடுகளோ செய்யவில்லை என்பது காணப்பட வேண்டிய உண்மைகளாகும். இலங்கை கிராமங்கள் நிறைந்த விவசாய நாடாகும். 1970– 77ல் ஓரளவிற்கு ஈட்டப்பட்ட தன்னி றைவுப் பொருளாதார அடிப்படை நோக்கிய விவசாய முன் முயற்சிகள் யாவும் 77க்குப் பின் தாராள இறக்குமதியால் மூழ்கடிக்கப்பட்டு விட்டது. தன்னிறைவை நோக்கிச் சென்று கொண்டிருந்த அரிசி உப உணவு உற்பத்திகள் யாவும் அழிவு கொள் ளுமாறு விடப்பட்டன. அவ் வாறே கைத்தொழில்கள் குறிப்பாக நகர கிராமத் கைத்தொழில்கள் யாவும் அந்நிய இறக்கு மதிகளால் முடக்கம் பெற்றன. இன்று யாவறுக்கும் அந்நிய இறக்குமதிப் பொருட்களை எதிர் பார்த்து நிற்கும் நிர்ப்பந்த நிலைக்கு நாடு தள்ளப்பட்டு விட்டது. பல்தேசியக் கம்பனிகளின் சந்தையாகவும் அதற்கான நுகர்வுப் பண்பாட்டு விரிவாக்கமாகவும் நாடு மாற்றப்பட்டு விட்டது. ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் படி நாடு மறு கொலனியாக்கம் செய்யப்பட்டு வருகி ன்றது.



இந் நிலையில் கைத்தொழில் விவசாய உற்பத்திக்கான அபிவிருத்தி என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதைகளாகவே உள்ளன. விமான நிலைய விஸ்தரிப்பு, புதிய சர்வதேச விமான நிலையம், துறைமுக விஸ்தரிப்பும் புதிய துறைமுகம் கட்டுவது, விரைவு நெடுஞ்சாலை அமைப்பது, அகல நெடுஞ்சாலை நிர்மானம், ஐந்து நட்சத்திர உல்லாச விடுதிகள் நிர்மாணம் போன்ற யாவும் நாட்டின் அபிவிருத்திப் பணிகள் என்றே காட்டப்படுகின்றன. ஆனால் இவை நாட்டையும் மக்களையும் அபிவிருத்தி செய்யக் கூடியவை அல்ல. இவை உலகமயமாதலின் கீழான தாராள பொருளாதாரத்தினதும் தனியார் மயத்தினதும் விரிவாக்கத்திற்கான கட்டமைப்புக் களேயாகும். இதனை மத்திய வங்கியின் ஆளுனர் அண்மையில் சுட்டிக்காட்டி உயர்ந்து காணப்படும் கட்டிடங்கள், இறக்குமதி செய்யப்படும் நவீன மோட்டார்கார்கள், எல்லோரிடமும் காணப்படும் கையடக்கத் தொலை பேசிகள், ஆடம்பரப் பொருட்கள் யாவும் பொருளாதார வளர்ச்சியினதும் அபிவிருத்தியினதும் அடையாளங்கள் என்று கூறியுள்ளார். பாவம் இந்த மத்திய வங்கி ஆளுனருக்கு நாட்டின் ஏகப் பெரும்பான்மையான விவசாயிகள் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்களின் துன்பமுறும் அன்றாட வாழ்க்கை பற்றி எங்கே தெரியப் போகின்றது. அவரது மிகக் கொழுத்த சம்பளத்திற்கும் சுகபோக வாழ்க்கைக்கும் சராசரி மக்களின் வாழ்க்கை நிலைக்கும் மலைக்கும் மடுவிற்குமான வித்தியாசமாகும்.

இதே ஆளுனர் வெளியிட்டுள்ள பொருளாதார வளர்ச்சிக்கான புள்ளி விபரத்தில் வடக்கு கிழக்கு தவிர்க்கப்பட்டே 7.4 வீத வளர்ச்சி எனக் காட்டப்பட்டது. அவ்வாறு வடக்கு கிழக்கு தவிர்க்கப்பட்டதன் மூலம் அங்கு முன்னெடுக்கப்படும் யுத்தத்தால் சகல பொருளாதார அடிப்படைகளும் அழிவுற்றுக் காணப்படுகின்ற உண்மை ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு அப்பாலும் கூட நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வெறும் புள்ளி விபரங்களால் மட்டும் கணக்கிட முடியாது. மக்களின் முன்னேற்றமடைந்து வரும் வாழ்க்கைத் தரத்தினால் வாழ்க்கைச் செலவின் தன்மையினால் கணக்கிடப்பட வேண்டியதாகும். அவ்வாறு நோக்கப்படும் போதே யுத்தத்தின் பிரதிபலிப்புகளை பொருளாதாரத்துறையில் காணமுடியும்.

இன்று ரூபாவின் மதிப்பு மோசமாகக் கீழிறங்கி வருகின்றது. ஒரு அ. டொலரை ரூபா 113.11 சதம் கொடுத்தே வாங்க வேண்டிய நிலை என்றால் நமது ரூபாயின் மதிப்பு எவ்வளவிற்கு இறக்கம் கண்டு நிற்கின்றது என்பதைக் காண இயலும். பணவீக்கம் 20 வீதத்தை அடைந்து விட்டது. இதனால் பொருட்களின் விலைகள் அதிகரித்துக் கொண்டு செல்லவே செய்யும். இவ்வாறு நாட்டின் பொருளாதாரம் மோசமடைந்து செல்வதால் அதற்குக் காரணமான யுத்தமும் தாராள தனியார்மய முன்னெடுக்கப்புகளும் ஆளும் வர்க்கத்தால் நிறுத்தப்படப் போவதில்லை. சொத்து சுகம் படைத்த ஆளும் வர்க்கம் மக்களைச் சுரண்டிக் கொள்ளையிட்டு சுகபோக ஆடம்பர வாழ்வை முன்னெடுக்கின்றனர். அதே வேளை புலிகள்– பயங்கரவாத ஒழிப்பு நாட்டுப்பிரிவினை எதிர்ப்பு போன்றவற்றின் மூலம் நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க தாம் யுத்தம் செய்வதாக மக்களுக்குக் கூறி நிற்கின்றனர். குறிப்பாகச் சிங்கள மக்கள் யுத்தத்தைக் காட்டி ஏமாற்றப்படுகின்றனர். அபிவிருத்தி என்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் அறவே இல்லை. இருப்பது யுத்தத்திற்கான திட்டங்களேயாகும். இது முழு நாட்டையும் அழிவுகளுக்கு உள்ளாக்கி அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு நாட்டையும் மக்களையும் முற்று முழுதாக இரையாக்கும் நிலைக்கே இட்டுச் செல்லக் கூடியதாகும். இதன் உடனடி ஆபத்தையும் நீண்ட கால அபாயங்களையும் சிங்கள மக்கள் உட்பட தமிழ் முஸ்லீம் மக்களும் அரசியல் ரீதியில் உணராத வரை மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. பௌத்த சிங்கள மேட்டுக்குடி முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகளை சிங்கள மக்கள் தமது ரட்சகர்களாக நம்பும் வரை சிங்கள மக்களுக்கு விடுதலை விமோசனம் கிடைக்க மாட்டாது. மாறாக பரந்த மக்கள் எழுச்சி மூலம் அத்தகைய பிற்போக்கு சக்திகளைத் தோற்கடித்து இலங்கையைப் பல்லினத் தேசியங்களின் நாடாக ஏற்று அவற்றின் சமத்துவத்தையும் ஐக்கியத்தையும் சுய நிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சி அமைப்புகளையும் ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலை உருவாக்கப்பட வேண்டும். அதற்கான மக்கள் சக்தி கட்டியெழுப்பப்பட வேண்டும். யுத்தமும் அபிவிருத்தியும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கக் கூடிய இணக்கமுடைய விடயங்கள் அல்ல. எனவே யுத்தம் தடுத்து நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலான அபிவிருத்தியும் சுபீட்சமும் நோக்கி நாடு முன்நோ உரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இவை இடம் பெறாதவரை நாடு நாசங்களின் மேல் நாசங்களை அனுபவிப்பதைத் தவிர்க்க முடியாது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் வதைபடும் தோட்டத் தொழிலாளர்கள்

**நாளாந்தம் உயர்ந்து** கொண்டிருக்கும் விலைவாசிகளினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்ற மக்கள் பிரிவினர் தோட்டத்தொழிலாளர்களாவர். காரணம் அவர்கள் அனைவரினதும் வருமானத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கின்றபோது அவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழான வருமானத்தைப் பெறுபவர்களாகவே இருக்கின்றனர்.

நீண்ட போராட்டங்களுக்குப் பின்பு கடந்த வருடம் உயர்த்தப்பட்ட சம்பள உயர்வின்படி ஒரு தோட்டத்தொழிலாளியின் உயரிய நாளாந்த சம்பளம் ரூபா 260/= ஆகும். ஆனால் பொதுவாகக் கிடைக்கக் கூடிய நாட் சம்பளம் ரூபா 195/= ரூபா மட்டுமே இருக்கிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டத்தொழிலை விட சுய தொழிலில் ஈடுபட எவ்வித வாய்ப்பும் இல்லை. சொந்தமான ஒரு துண்டு நிலம் கூடக் கிடையாது. வீடும் சொந்தமாக இல்லை. நிலமும் நிதியும் இல்லாமல் வேறு சுய தொழிலில் ஈடுபட முடி யாது. அவ்வாறு சுயதொழில் ஈடுபட்டாலும் அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டும் நாளாந்தம் செலவுகளை சமாளிக்க முடியாது.

இன்றும் தேயிலை, றப்பர் ஏற்றுமதியால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தோட்டத்தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்க முடியும். தோட்டத் தொழிலா ளர்களின் அடிப்படைப் பாவனைப் பொருட்களான அரிசி, கோதுமை மா, சீனி, மண்ணெண்ணெய் மரக்கறி போன்றவ ற்றின் விலை பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. தற்போது அரிசி ஒரு கிலோ 40/= வும் கோதுமை மா 55/= வும் சீனி 65/= வும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 65/= ரூபாவானவும் விற்கப்படுகிறது.



இப்பொருட்கள் மலையகப் பிரதேசங்களில் இன்னும் அதிகரித்த விலைகளுக்கே விற்கப்படும். இதற்கு காரணம் போக்குவரத்துச் செலவு மிகையாக இருப்பதாக கூறப்படுகிறது.

பொதுவாக மிகவும் சாதாரணமாக தொகுக்கப்பட்ட கணிப்பின்படி நான்கு பேர் கொண்ட தோட்டத் தொழிலாளர் குடும்பமொன்றுக்கு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு நாளொன்றுக்கு ரூபா 700 தேவைப்படுகிறது. இவ்வாறான குடும்பமொன்றில் வேலை செய்வோர் இரண்டு பேராக இருக்கின்ற நிலைமையில் அதன் வருமானம் ரூபா 390 என இருக்கும். வேலை செய்வோரின் எண்ணிக்கை அதிகமாகவும் தங்கி வாழ்வோர் இல்லாதும் இருக்கின்றபோது நிலைமை சிறிது வித்தியாசமாக இருக்கும். என்றாலும் விலைவாசி உயர்வால் ஏற்படும் பாதிப்பு பொதுவாகவே தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைவான சம்பளம் வழங்கப்படுவதும், சுயதொழில் வாய்ப்பில்லாமையும். பிரதான நிர்வாக ஓட்டத்தில் முழுமையாக தோட்டத் தொழிலாளர்கள் உள்வாங்கப்படாததும் காரணங்களாகும். பெருந் தோட்டப் புறங்களில் பொருட்களை வாங்குவதற்காக நகரங்களுக்கு செல்லவும் பாடசாலைகள். வைத்தியசாலைகளுக்கு செல்லவும் நீண்டதூரம் பிரயாணம் செய்ய வேண்டி இருக்கிறது. அத்துடன் ஏனைய பகுதிகளை விட போக்கு வரத்து வசதி குறைவு என்பதால் போக்குவரத்துச் செலவும் அதிகமாகும். அந்தளவிற்கு தோட்டப்புறங்களில் குடியிருப்பிற் கான பொது உள்ளக கட்டமைப்புகள் இல்லை.

தோட்டப்புறக்குடியிருப்புகள் ஆகக்குறைந்த குடியிருப்பிற்கான பொது உள்ளக கட்டமைப்புகளை கொண்டிருக்கவில்லை. அக்குடியிருப்புகள் கிராமங்களாகவும் இல்லை. நகரங்களாகவும் இல்லை. தொழிலாளர்களுக்கான வசதியான குடியிருப்புக் கட்டமைப்பையும் கொண்டிருக்கவில்லை. கொலனித்துவ பிடியிலிருந்ததைப் போன்று இன்னும் தோட்டக்குடியிருப்புக்கள் சுதந்திர மற்றதாகவும் வசதியற்றதாகவுமே உள்ளன. அவற்றை சுய மாக அபி விருத்தி செய்து கொள்ளவும் முடிவதில்லை. காரணம் தொழிலாளர்கள் பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்தாலும் அக் குடியிருப்புகள் மீது தொழிலாளர்களுக்கு எவ்வித உரித்தும் இல்லை.

இந்தப் பின்னணியில் அரசாங்கத்தினால் உயர்த்தப்படும் வாழ்க்கை செலவிற்கு தோட்டத் தொழி லாளர் குடும்பங்கள் முகம் கொடுக்க முடியாதிருக்கின்றன. அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளும் நடைமுறைகளும் பொதுவாகவும் மலையக தோட்டப்புறங்களின் பிற்படுத்தப்பட்ட நிலைமையினால் குறிப்பாகவும் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை மேலும் மேலும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களை உள்ளடக்கிய மலையகத் தமிழ் சமூகத்தினரை பிரதிநிதித்துவம் செய்ய பாராளுமன்றத்தில் 10 பேர் இருப்பதாகப் பெருமைப் பட்டுக் கொள்ளும் மலையகத் தலைமைகள் சனத் தொகை விகிதாசாரப்படி 16 பேர் இருக்க வேண்டுமெனவும் அடிக்கடி கூறிவருகின்றனர்.



ஆனால் 15 லட்சம் எனக்கூறப்படும் மலை யகத்தமிழ் சமூகத்தில் எத்தனைக் குடு ம்பங்கள் நிறை உணவை உண்ணுகின்றனர். என்ற எண் ணிக்கை அவர்களுக்குத் தெரியாது. 80 சதவீத த்திற்கு மேற்பட்டவர் கள் இரத்த குறைபாடு அல்லது இரத்த சோகைக்குட்பட்டவர்களாகவே இருக்கின்றனர். கண், வாய், வயிற்று சுகாதாரக் குறைபாடுடையவர்களாகவே இருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையில் நிறையுணவு, கல்வி, சுகாதாரம், இருப்பிடம் போன்றவை இல்லாது வாழும் உரிமையற்ற வர்க்களாகவே தோட்டத்தொழிலாளர் அல்லது மலையக சமூகம் இருக்கிறது. அரசாங்கத்தின் எஞ்சியிருக்கும் வறுமை ஒழிபுத் திட்டங்கள். மானியத்திட்டங்கள் பலவிதமான காரணங்களினாலும் தோட்டத்தொழிலாளர்களை சென்றடையவில்லை. இனரீதியாக. வர்க்கரீதியான அடக்குமுறைகளை அதற்கு பொதுவான காரணங்களாக அடையாளம் காணலாம்.

இதைவிட பண்பாட்டு ரீதியாக இருக்கின்ற சீரழிவுகளினாலும் தோட்டத் தொழிலாளர்கள் மேலும் வறுமைக்குள்ளேயே இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். வெற்றிலைப் பாக்குப் பாவிப்பு, புகைத்தல், மதுபாவனை, கோயில் திருவிழாக்கள் பண்டிகைக் கொண்டாட்டங்களில் ஏற்படும் செலவுகளும் அவர்களை எழும்ப முடியாதவாறு அமுக்கி வைத்திருக்கின்றன.

இவற்றுக்கு மாறான மாற்றுப் பண்பாட்டு, அரசியல், பொருளாதார வேலை முறைகளை முன்னெடுக்க சமூக ரீதியான நடவடிக்கைகள் தோட்டப்புறங்களில் கிடையவே கிடையாது எனலாம். இத்தகைய பின்தங்கிய நிலையையும் நிலவுடைமைக் கருத்தியல் சிந்தனை வழிவந்த தொழிற்சங்க அரசியல் தலைமை வழிபாட்டுத் தொடர்ச்சியும் மலையக மக்களை அமுக்கி வருகின்றன.

இத்தகைய தலைமைகள் வாழ்க்கைச் செலவை அதிகரித்து தோட்டத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து உழைக்கும் மக்களையும் வதைத்து வரும் இன்றைய அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுத்து வருகின்றனர் என்பது தான் வேடிக்கையானது மட்டுமன்றி விசனத்திற்கும் உரியதாகும்.

அழகேசன்

# தோட்டக்காணிகளில் பாதிக்கப்பட்டோர் குடியேற்றம் ?

**ஹங்குராங்கெத்தை** வலப்பனை ஆகிய தேர்தல் தொகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களை வலப்பனை தொகுதியில் உள்ள ஹைபோரஸ்ட் சென் ரெட்பானா ஆகிய பெருந தோட்டக்காணிகளில் குடியேற்றப்படவுள்ளனர். இதனால் தேயிலைத்தோட்டக்காணிகள் பாதிக்கப்படுவதுடன் தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறைவும் அல்லது இல்லாது போகும். மண்சரிவினால் பாதிக்கப்பட்ட 842 குடும்பங்களும் சிங்களக்குடும்பங்களாகும். அத்தேயிலை தோட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் அனைவரும் தமிழர்களாவர் என்பதால் தோட்டக்காணிகளில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படும்போது இனமோதல்களுக்கு வழியேற்படும். மலையகத் தோட்டங்களில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட பெரும்பான்மை இனக்குடியேற்றங்களால் இனங்களுக்கிடையே அமைதியீன த்தையே தோற்றுவிக்க முடிந்தது.

பெருந்தோட்டங்களில் பெரும்பான்மை இனக்குடியேற்றங்களை ஏற்படுத்துவதன் நோக்கம் தோட்டத்தொழிலாளர்களை அடக்கி ஒடுக்குவதாகும். அவர்களின் இனத்துவச் செறிவை குலைப்பதற்கும் அவர்களை பொருளாதார ரீதியாக ஒடுக்குவதற்கும் அவ்வாறான குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மண்சரிவாலும் ஏனைய இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவுமில்லை. அவர்கள் வேறு இடங்களில் குடியேற்றப்படவுமில்லை. ஏன் எந்தவொரு தோட்டத் தொழிலாளிக்கும் தோட்டங்களில் சொந்தமாக வீடும் இல்லை. காணியும் இல்லை.

மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்கள் சிங்களவர்களா முஸ்லீம்களா, தமிழர்களா எனப் பார்த்து நிவாரணம் வழங்குவதும், வேறு இடங்க ளில் குடியேற்றுவதும் மிகவும் அநாகரீகமானது. ஆனால் இல நகை அரசாங்கங்கள் இனரீதியாக முஸ்லீம் தமிழ் தேசியங்களைப் புறக்கணித்தே வருகிறது.

அதுமட்டுமல்ல பாதிக்கப்பட்ட சிங்கள மக்களை வேறு இடங்களில் குடியேற்றும் போர்வையில் தோட்டத்தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை நிகழ்ச்சி நிரலும் மறைமுகமாக முன்னெடு க்கப்படுகிறது என்பதை மறந்துவிடலாகாது.

பாதிக்கப்பட்டவ சிங்கள மக்கள் வேறு பாதுகாப்பான இடங்களில் குடியேற்றப்படவேண்டும் என்பதில் இரண்டு பேச்சுக்கு இடமி ல்லை. ஆனால் அதனால் இன்னொரு இனம் வீதிக்கு விடப்ப டுவதும், பொருளாதார ரீதியாக ஒடுக்கப்ப டுவதும் இன்னொரு இனத்தின் பாதுகாப்பு அச்சுறுத்தப்ப டுவதும் எவ்விதத்திலும் அனும திக்கப்பட முடியாது.

பாதிக்கப்பட்டவர்கள் பயன்தரும் செழிப்பான பெருந்தோட்டங்களிலன்றி வேறு அரச காணிகளில் குடியேற்றப்படலாம். அதற்குரிய வாய்ப்பு வசதிகள் உண்டு.

வலப்பனை, ஹங்குராங்கெத்தை பகுதிகளில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட 842 குடும்பங்களை ஹைபோரஸ்ட், சென்ரெட்பான தோட்டங்களில் குடியேற்ற வேண்டு மென நுவரெலியா ஜே.வி.பி எம்.பி நிமல் பிரேமவன்ச பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதுபற்றி கருத்துதெரிவித்த நுவரெலியா மாவட்ட எம். பி யும் பிரதியமைச்சருமான எஸ். ஜெகதீஸ்வரன் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களை பெருந்தோட்ட க்காணிகளில் குடியேற்ற வேண்டாம் என கூறவில்லை. மாறாக நிமல் பிரேமவன்ச எம். பி யின் கருத்தை ஆமோ திக்கும் வகையில் மண்சரிவில் பாதிக்கப்பட்ட வர்களைத் தோட்டக்காணிகளில் குடியேற்றும் போது இன்னொரு இனத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்று கெஞ்சி க்கேட்டுள்ளார். ஜெகதீஸ்வரனுக்கோ அவரின் இ. தொ. கா விற்கோ ஹைபோர ஸ்ட், சென்ரெட்பானா தோட்டத்தொழிலா ளர்கள் பற்றி அக்க றை இருக்கமுடியாது. அவரும் அவரது கட்சியும் தான் தலவாக்கொல்லையையே விழுங்கும் மேல் கொத்மலைத் திட்ட த்தினை நிறைவேற்றத் துணை நின்றவர்கள் என்பது அங்கு நினைவுபடுத்தப்பட வேண்டும்.

ஹைபோரஸ்ட், சென்ரெட்பானா தோட்டத்தொழிலாளர்கள் அவ்வாறான குடியேற்றங்களை எதிர்க்கின்றனர். அவர்களின் இவ்வாறான எதிர்ப்பிற்கும் போராட்டங்களுக்கும் தொடர்ந்து தலைமைதாங்கி வந்த தற்போது அவசரகாலச்சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்களின் துணிவையும் அர்ப்பணிப்பையும் நினைத்துப் பார்க்கின்றனர். மண்சரிவினால் பாதிக்கப்பட்ட போது தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்கி மக்களுக்கு ஆறுதல் அளித்தவ ர்கள் புதிய- ஜனநாயக கட்சியினர்.

பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு பாதுகாப்பான இருப்பிடம் நிலம் வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தும் புதிய- ஜனநாயக கட்சி அந் நில வழங்கலை மலையகத் தமிழ் மக்களுக்கு பாதிப்பும் இணக்குரோதமும் ஏற்படுத்தும் வகையில் முன்னெடுப்பதை வன்மையாக எதிர்க்கின்றது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# "இலங்கை மீண்டும் போருக்கு"

# அமெரிக்க மனித உரிமை நிறுவனத்தின் அறிக்கையும் அவசர முடிவுகளும்

மோகன்

**மனித உரிமைக் கண்காணிப்பு** (ஹியூமன் றைற்ஸ் வோச்) என்கிற அமெரிக்க மனித உரிமை நிறுவனம் "இலங்கை மீண்டும் போருக்கு" என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் இலங்கை அரசாங்கத்தையும் அரசாங்கத்திற்குச் சார்பான ஆயுதமேந்திய தமிழ்க் குழுக்களையும் பற்றிய விமர்சனம் முன்வைக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் முன்னுரையில் அதற்கான விளக்கம் ஒன்றும். தரப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகள் குற்றமற்றவர்களென்றோ இன்றைய நிலைமைகட்கு அவர்களுங் காரணமானவர்கள் இல்லையென்றோ கூறப்படவில்லை. மாறாக விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் பற்றி ஏற்கெனவே பல முறை அந்த அமைப்பு விமர்சித்திருப்பதை அறிக்கை தெளிவாகக் கூறியிருந்தது.

மேற்படி அறிக்கை 2002ம் ஆண்டுப் போர்நிறுத்தத்தைத் தொடக்கப் புள்ளியாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்பதையும் போர் நிறுத்தச் சூழல் பிரகடனஞ் செய்யப்படாத ஒரு போராகச் சென்ற ஆண்டின் முற்பகுதியில் உருமாறியது என்பதையும் கருத்திற் கொண்டால் அரசாங்கத்தைக் குறிப்பான விமர்சனத்திற்குட்படுத்தியதில் நியாயம் உண்டு. அதை விட முக்கியமாகப் போர்ச் சூழல் இல்லாத பகுதிகளில் நடக்கும் பலவேறு மனித உரிமை மீறல்களும் சாதாரண மக்கள் பலவிதமான இன்னல் கட்கும் அச்சுறுத்தல்கட்கும் தொடர்ந்தும் உட்படுத்தப்பட்டு வருகிற சூழலில் அரசாங்கம் அவற்றைத் தடுக்கவோ. முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை நடத்திக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவோ முயற்சி எடுக்கவில்லை என்பது போக அரச படைகளும் பொலிஸும் குற்றச் செயல்கள் பலவற்றுக்கும் உடந்தையாக இருந்துள்ளனர் என்பதற்கான ஆதாரங்களும் புலனாகியுள்ளன. தமிழ் மக்கள் வீண் உபாதைகட்கு உட்படுத்தப்படுவதன் உச்சக் கட்டமாகப் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொழும்பிற் தமது தற்காலிக வதிவிடங்களினின்று வெளியேற்றப்பட்டதுடன் அவர்களில் ஒரு பகுதியினர் கட்டாயமாகக் கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்டமையும் இவ்விடயத்தில் அரசாங்கத்தை மிகவும் பலவீனமான நிலையில் வைத்துள்ளன.

அறிக்கையில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளில் அரசாங்கம் மனித உரிமை மீறல்களை நிறுத்த வேண்டும் என்றும் குற் றவாளிகளை விசாரித்துத் தண்டிக்க வேண்டும் என்றும் அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் கருணா குழுவினரும் ஈ.பி. டியினரும் மனித உரிமைகளை மீறுகிறதைத் தடுக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்து. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம், கருணா குழு, விடுதலைப் புலிகள் ஆகிய மூன்று தரப்பினரிடமும் அடிப் படையில் ஒரே விதமான கோரிக்கைகளே முன் வைக்கப்பட்டுள்ளன. எனினும் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் பொது மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைக் கணக்கிட்டால் அதில் அரசாங்கத்தினதும் அரசாங்கத்தின் சார்பாக இயங்கும் தமிழ் ஆயுதக் குழுக்களதும் பங்கு அதிகம் என்பதில் ஐய மில்லை. விடுதலைப் புலிகள் மீதும் பாரிய குற்றச் சாட்டுக்கள் உள்ளன. அவர்கள் அவற்றை மறுத்துள்ளனர். அவையாவும் செல்லுபடியான குற்றச் சாட்டுக்களாகவே இருந்தாலுங் கூட அல்லாமல் அவை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை விடத் தொகையில் அதிகமாகவே இருந்தாலுங் கூட அர சாங்கம் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை மறுக்கவோ நிராகரிக்கவோ அவை உரிய காரணங்கள் அல்ல.

இந்த அறிக்கையைப் பற்றி அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ள சினமும் அதன் பூரண நிராகரிப்பும் மனித உரிமைகள் விடயத்தில் அரசாங்கத்தின் தவறான அணுகுமுறையையே கூட்டிக் காட்டுகின்றன. அறிக்கையிற் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களில் ஒரு சிலவற்றை மறுக்க இயலுமாக இருப்ப தால் மற்ற அனைத்தையும் அக்காரணங்கொண்டு நிராகரிக்க இயலாது. அரசாங்கம் மறுக்கிற வியடங்கள் கூடப் பொய்யான தகவல்கள் என்று திட்டவட்டமாக நிறுவ இயலாதவையாகவே உள்ளன. இந்த அறிக்கை வெளிவந்து அது பற்றிய சர்ச்சைகளின் சூடு தணிய முன்னரே ஐ.நா சபையின் மனிதபிமானப் பணிகள் தொடர்பான உயரதிகாரி ஹோம்ஸ் இலங்கைக்கு வந்து வடக்கு, கிழக்கு மாகாணங்கட்குச் சென்று விசா

**எல்லா மனித உரிமை அமைப்புகளுக்குப் பின்னாலும் ஒரு அரசியல் பின்னணி உண்டு. அது யாருடைய அரசியல் என்பது தான் கேள்வி.**



ரணைகளை நடத்தியுள்ளமை அரசாங்கத் தரப்பில் மேலுங் கொதிப்பைக் கிளறிவிட்டுள்ளது. நிதானந்தவறிய முறையில் பிரதமர் ரத்னசிரி விக்கிரமநாயக்க பேசுவதில் ஒரு அதிசயமும் இல்லை. ஆனால் அவரால் நிதானமாகவும் பேச இயலும் என்று தமிழ் மக்கள் கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்ட

**முன்பு இந்தியா படைகளைக் கொண்டு வந்தது. இப்போது ஐ.நா. படை வர வேண்டுமா? அன்றும் தமிழர் தரப்பு வரவேற்றது. இன்றும் வரவேற்கத்தயாராகிறது.**

பின்பு அவர் மனவருத்தம் தெரிவித்ததிலிருந்து அறிந் தோம். சனாதிபதி சொல்லத் தயங்குகிற விடயங்களைச் சொல்ல அவர் பயன்படுகிறார் என்ற ஐயத்தை வலுப்படுத்துகிற விதமாகவே அவரது ஆக்கிரோஷமான கண்டனம் அமைந்துள்ளது. மேலை நாடுகளதும் ஐ.நா சபையினதும் நோக்கங்களைக் கண்டித்துப் பேசுகிற அரசாங்கத்தரப்பினரும் ஜே.வி.பியும் சிஹல உறுமயவும் அதே மேலை நாடுகள் இன ஒழிப்புப் போரைத் தொடரப் பல வகைகளிலும் உதவியதை மட்டும் ஏன் பாராட்டி வந்திருக்கிறார்கள்? அது அவர்களது தீய நோக்கங்களில் ஒரு பகுதியில்லையா?

இந்த அறிக்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஒரு பயனுள்ள ஆவணம். அரசாங்கம் அதிற் கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களிற் பெரும் பகுதியை மறுக்க இயலுமாக இருந்தாலுங்கூட எஞ்சியுள்ள பாரிய குற்றச்சாட்டுகள் மட்டுமே கூட அரசாங்கம் மிக மோசமான முறையில் மனித உரிமைகளை மீறியுள்ளது என்று நிறுவப் போதுமானவை. இன்று மனித உரிமை மீறல்கள் 1989க்குப் பிறகு இன்னொரு முறை சிங்கள மக்களையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது. மேற்படி அறிக்கை சிங்கள ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளையும் நிர்ப்பந்தங்களையும் மட்டுமே கணிப்பில் எடுத்துள்ளது. ஆனால் "சிங்களப் புலிகள்" என்ற பேரில் நேர்மையான சிங்கள இடதுசாரிகளும் இடதுசாரித் தொழிற்சங்க வாதிகளும் கைதாகியுள்ளனர். சிலர் கடுமையான மிரட்டல் கட்குட்பட்டுள்ளனர். புதிய ஜனநாயகக் கட்சித் தோழர்கள் ஐவர் கைதானதற்கும் அவர்கள் தமிழர்கள் என்பதை விட வலுப்பெற்றுவரும் இடதுசாரி அமைப்புக்குரியவர்கள் என் பதே முக்கிய காரணம். இதில் வியப்படைய அதிகமில்லை. நேர்மையான இடதுசாரிகள் இலக்கு வைக்கப்படுவதைப்பற்றி நமது ஊடகங்களோ மனித உரிமைவாதிகளோ அதிகங் கண்டு கொள்வதில்லை. எனவே அவ்வாறான விஷயங்கள் பூதாகரமாக வெடித்துக் கிளம்பும் வரை யாரும் அவை பற்றிப் பேசப் போவதில்லை.


இனி நாம் இந்த அறிக்கையின் நோக்கத்தைக் கவனிப்போம். எல்ல அரசு சாரா மனித- உரிமை அமைப்புக்களையும் போல இந்த அமைப்பும் மனித உரிமை மீறலின் அடிப்படைக் காரணங்களையும் அவற்றைத் தொடர்வதன் பின்னணியிலுள்ள அரசியலையும் தொடவேயில்லை. பேரினவாதப் போருக்கு மட்டுமன்றிப் பிரச்சனையைச் சிக்கலாக்குவதற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் உதவியுள்ள தைப் பற்றியோ அதன் தமிழர் விரோத நிலைப்பாடுகளையோ அறிக்கை கவனிக்கவில்லை. பிரச்சனை அரசாங்கம், புலிகள், கரு ணா குழு ஆகியோருக்கிடையே உள்ள ஒன்றாகவும் அவர்கள் இனி எப்படி நடக்க வேண்டும் என்பதும் அவர்கள் ஒழுங்காக நடக்கச் சர்வ தேச சமூகம் (உதவி வழங்கும் நாடுகள்) என்ன செய்யலாம் என்பதும் தான் அறிக்கையின் சாராம்சம். அதில் இலங்கை அரசாங்கத்திற்கு ஆயுதங்களை விற்பது பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை. ஆனால் ஐ.நா. கண்காணிப்புக் குழு ஒன்று வர வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. சர்வதேச சமூகம் அதை வற்புறுத்த வேண்டும் எனவும் இலங்கை அரசாங்கம் அதை வரவேற்க வேண்டும் எனவும் அதிற் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அறிக்கை அதை விட விசேடமான வேறு முக்கியமான பரிந்துரை எதையுமே கூறியதாகத் தெரியவில்லை. இந்த அறிக்கை பற்றித் தமிழ் ஏடுகளதும் தமிழ்த் தேசிய வாதிகளதும் மகிழ்ச்சி அரசாங்கத் தரப்பின் மூர்க்கத் தனமான சினத்தினளவு மந்த புத்தி காரணமானது. தேசிய சுய நிர்ணயம் தேசிய இனங்களின் சமத்துவம் என்பன பற்றிய தெளிவான நிலைப்பாடில்லாமல் மனித உரிமைபற்றிப் பேசுவது சட்டமும் ஒழுங்கும் பற்றிப் பேசுகிறது போலத்தான் இருக்கும். முன்பு இங்கே அமைதியை நிலை நாட்ட இந்தியா படைகளைக் கொண்டு வந்தது. இனி ஐ.நா. படைகள் வர வேண்டுமா?

இந்த அறிக்கையைத் தயாரித்தவர்களுக்கு ஐ.நா. படைகளின் யோக்கியம் தெரியாதா? ஐ.நா. படைகள் சென்ற எந்த இடத்தில் பிரச்ச னைகள் மேலும் மோசமாகாமல் இருந்தது என்று யாராலுஞ் சொல்ல முடியுமா? மனித உரிமை அறிக்கை வெளியான மறு வாரமே ஐ.நா. பிரமுகர் ஹோம்ஸ் இலங்கை வந்ததும் தற்செயலான விடயமல்ல. இந்த அறிக்கை மட்டுமல்ல எல்லா மனித உரிமை அமைப்புக்களது அறிக்கைகளுக்கும் பின்னால் ஒரு அரசியல் பின்னணி உண்டு. அது யாருடைய அரசியல் என்பது தான் கேள்வி. இந்த அறிக்கைக்கும் பின்னால் உள்ளது தமிழ் மக்களுடைய இன்னல்களைத் தீர்க்க விரும்புகிறவர்களது அரசியல் அல்ல என்று மட்டும் உறுதியாகக் கூறலாம்.





செப்ரெம்பர் – ஒக்டோபர் இதழ் விற்பனையாகிறது.




செப்ரெம்பர் இதழ் வெளியாகி விற்பனையாகிறது.


www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கின் விடுவிப்பும் உதயமும்

அ. பூபதி

**வடக்கிலிருந்து கிழக்கு** ஏற்கனவே பிரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிழக்கின் மீதான "மனிதா பிமான மீட்பு" யுத்தம் தொடரப்பட்டது. இரண்டு லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து ஏதிலிகளாகினர். அவர்களது அவலவாழ்வு விபரிக்க முடியாத அளவுக்கு பரந்து விரிந்த துன்பங்களை ஏற்படுத்தியது. உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் உலக நிறுவனங்களும் கிழக்கு மக்களின் அவலங்களில் தத்தம் நலன்களைப் பேணிக் கொண்டனவே அன்றி மக்களுக்கு கிடைத்



தவை அர்ப்பத்திலும் அர்ப்பமானவைகளாகும்.

இப்பொழுது கிழக்கை மீட்டுள்ளதாகவும் அங்கு மீள் கட்டுமானப் பணிகளும் மீள் குடியேற்றங்களும் இடம் பெறுவதாகவும் காட்டப்படுகிறது. கிழக்கின் உதயம் என்ற தலைப்பில் புனர் வாழ்வுத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கு சர்வதேச உதவிகள் கோரப்பட்டுள்ளன. கிழக்கின் உதயம் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அரசாங்கம் எதனைச் சாதிக்க முன்னிற்கின்றது. ஒன்று கிழக்கின் அபிவிருத்திக்கும் அரசியல் தீர்வுக்கும் சம்மந்தம் இல்லை என்று காட்டவும் அதிகாரப் பகிர்வு இன்றியே கிழக்கின் மக்களது அபிலாஷைகளை நிறைவேற்ற முடியும் என்பதை மெய்ப்பிக்கவும் அரசாங்கம் எத்தனிக்கின்றது. கிழக்கின் மூன்று மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட தமிழர் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றப் பிரதிநிதி களைப் புறந்தள்ளி விட்டே கிழக்கின் உதயம் நிகழ்ச் சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அதேவேளை ஏனைய தமிழ் இயக்கங்களை அரசாங்கம் தனது பக்கத்தில் வைத்து விடயங்களை முன்னெடுக்கின்றது. ஏற்கனவே அங்கு ஈ.பி.டி.பி கட்சியும் கருணா குழுவும் தத் தமது நிலைப்பாட்டை வலுப்படுத்தியுள்ளன. அண் மையில் புளோட் இயக்கம் ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) தமிழர் விடுதலைக் கூட்டணி என்பனவற்றின் தலைவர்கள் கிழக்கிற்குச் சென்று நிலைமைகளைக் கண்டறிந்து திரும்பியுள்ளனர். இவர்களின் வற்புறுத்தல் அழுத்தங்கள் எந்தளவிற்கு அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது புரியப்படாத ஒன்றாகும். இவ ர்களது செயற்பாட்டிற்கு வரையறைகளும் எல்லைக ளும் உண்டு என்பதால் அவர்களால் அரசாங்கத்துடன் இணங்கிப் போகவும் அல்லது மௌனம் சாதிக்கவுமே முடியும்.

அதேவேளை தமது மரபுவழி ராணுவப் போராட்ட நிலைக்கு வந்ததாகப் பரப்புரை செய்து வந்த விடுதலைப் புலிகள் அண்மைய கிழக்கின் பின் வாங்குதலுடன் கொரில்லாப் போராட்ட நிலைக்கு மாற்றம் பெற்றுள்ளனர். அதனால் கிழக்கில் ஆங்காங்கே அவ்வப்போது மறைந்திருந்த தாக்குதல்கள் இடம் பெறவே செய்யும். அதேவேளை மீட்கப்பட்ட கிழக்கைப் பாதுகாத்து நிலை நிறுத்த அரசாங்கத்திற்கு தற்போதைய இருபதினாயிரம் படைகள் போதுமானவை அல்ல என்றே ராணுவ விமர்சகர்கள் சுட்டிக் காட்டி வருகின்றனர். அதனால் கிழக்கில் தாக்குத ல்கள் எதிர்த் தாக்குதல்கள் யாவும் முடிவுக்கு வந்து விட்டதாகக் கற்பனை செய்து கொள்வது யதார்த்த த்தை ஏமாற்றுவதாகும்.

மேலும் கிழக்கில் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களிடையே கடந்த மூன்று தசாப்த காலத்தில் பகையுணர்வுகள் வளர்க்கப்பட்டு வந்துள்ள உண்மைகளைக் காணத் தவறவிடக் கூடாது. பேரினவாத மேலாதிக்க நிலை போன்றே தமிழ்க் குறுந்தேசியவாத மேலாதிக்கப் போக்கு அவ்வப்போது தன்னை வெளிப்படுத்தி வந்துள்ளமை எவ்வகையிலும் மறைக்கக் கூடிய ஒன் றல்ல. அவ்வாறே முஸ்லீம் மதத் தேசியவாத நிலைப்பாடு தமிழ்ப் பேரினவாதம் எனக் கூறி தமிழர் விரோ தத்தை வளர்த்து வருகின்றது. கிழக்கில் தமிழ் முஸ் லீம் முரண்பாட்டை வளர்க்கவும் அதன் மூலம் நன்மையடையவும் பௌத்த சிங்களப் பேரினவாதம் செயலாற்றி நிற்பது புதுமையல்ல. அதற்கு முகம் கொடுக்க வேண்டிய தமிழ் முஸ்லீம் தேசிய இனங்கள் பேரினவாதத்திற்குப் பலியாகும் சூழலை தமிழ் முஸ்லீம் பாராளுமன்றத் தலைமைகள் தத தமது சுயநல நோக்கில் உருவாக்கி வளர்த்து வருகின்றன. அண்மையில் தமிழர் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு தமிழப்பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அரசாங்கத்தின் கிழக்கு முஸ்லீம் அமைச்சர் ஒருவரும் நடாத்திய பகிரங்க சொற்போர் ஊடகங்களில் வெளி வந்தது. அவர்களது சொற்போராலும் உணர்ச்சி மிகு வாக்குவா தங்களாலும் சாதாரண தமிழ் முஸ்லீம் மக்கள் தம்முள்ளே பிரிந்து வரிந்து கட்டிக் கொள்ளும் நிலையே காணப்படுகின்றது, தமது பொது எதிரி பௌத்த சிங்களப் பேரினவாதம் என்பதைக் காண மறுத்து தமிழ் முஸ்லீம் மக்கள் தம்முள் மோதுவ தற்கே தமிழ் முஸ்லீம் தலைமைகள் வழி காட்டுகின்றன. இது தம்தமது வர்க்க சொத்து சுக வசதிகளைப் பாதுகாத்துக் கொள்ள சாதாரண மக்களை தேசயங்களின் பெயரால் ஏவி மோத விடுவதே யாகும்.



அதேவேளை சிங்களப் பேரினவாதம் கிழக்கின் தமிழ் முஸ்லீம்களின் நிலங்களையும் வளங்களையும் அபகரிப்பதில் அன்றிலிருந்தே திட்டமிட்டு செயலா ற்றி வருகின்றது. புனித பூமி, புதை பொருட்களின் கண்டு பிடிப்பு, புனித நகர் திட்டங்கள் என்ற பெயர்களில் தமிழ் முஸ்லீம்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன. விகாரைகள் பன்சாலைகள் தோற்றுவிக்கப்பட்டு பௌத்த மதப் பேணுகை என்ற பெயர்களில் வளமான நிலங்கள் பறித்தெடுக்கப்பட்டதுடன் அரச காணிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன.



இவற்றின் தொடர்ச்சி கிழக்கின் உதயம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடக முன்னெடுக்கப்படும் என்ற அச்சமும் ஆதங்கமும் தமிழ் முஸ்லீம் மக்களிடம் காணப்படுகின்றது. உதாரணமாக மூதூர் கிழக்கு சம்பூர் பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு வலயமாக்கப் பட்டுள்ளதன் மூலம் தமிழ் முஸ்லீம் மக்கள் தத்தமது பாரம்பரிய நிலங்களில் இருந்து விரட்டப்பட்டுள்ளனர். மீள் குடியேற்றத்திற்கு சட்டபூர்வமாகவே தடை விதிக்கப்பட்டுள்ளது. இது பற்றி தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய கட்சிகள் அமைப்புகள் எதிர்ப்பு கண்டனம் தெரிவித்துள்ளனர். ஆனால் அரசாங்கத்தில் உள்ள தமிழ் முஸ்லீம் அமைச்சர்கள் மௌனமாக இருந்து வருவதன் மூலம் பேரின வாதத்திற்கு அங்கீகாரம் வழங்குகின்றனர்.

கிழக்கை விடுவித்தன் மூலம் அங்குள்ள மக்கள் சுதந் திரமாக வாழ்வதாகவோ தத்தமது தொழில்களைக் கெடுபிடிகள் இன்றி நடாத்துவதாகவோ யாரும் கற்பனை செய்து விடக் கூடாது. யாவும் ராணுவ- அதிரடிப்படை- பொலீஸ் நிர்வாகத்தின் கீழேயே இடம் பெறுகின்றன. பதிவுகளும் கண்காணிப்பும் சுற்றி வளைப்புகளும் தேடல்களும் தொடரவே செய்கின்றன. கிழக்கின் மக்கள் நான்கு திசைச் துப்பாக்கிகளுக்கு மத்தியில் அச்சம் பீதி உணவின்மை வீடின்மை தொழில் இன்மை சுகாதாரம் கல்விச் சீர்கு லைவுகள் என்பனவற்றின் மத்தியிலேயே அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் நாட்களைக் கழித்து வருகின்றனர்.

கிழக்கை வடக்கிலிருந்து பிரிப்பதும் அம்பாறை திருகோணமலை மாவட்டங்களை பூரண பௌத்த சிங்கள மயப்படுத்திக் கொள்வதும் பேரினவாதிக ளின் திட்டமாகும். இத் தொடர் நிகழ்ச்சி நிரலின் ஒரு பிரதான கட்டம் தான் அண்மைய கிழக்கு விடுவிப்பும் கிழக்கின் உதயம் என்ற திட்டமும் ஆகும். இதனைப் பல நிலைப் பிரசாரங்க ளுக்கு உள்ளாக்குவ தன் மூலம் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை இத்தகைய யுத்த வழிமுறைகளின் மூலம் தீர்த்து வைக்க முடியும் என்றவாறான ஒரு மாயத் தோற்றத்தை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பிக் கொள்வதில் அரசாங்கமும் அதன் சார்பான ஊடக ங்களும் பெரும் பிரயத்தனங்களுடன் செயலாற் றுவதைக் காணமுடிகின்றது. ஆனால் தாக்குத ல்களும் தற்காப்பு பின்வாங் கல்களும் முன்னோக்கிய நகர்வுகளும் தாக்குப் பிடிக்க முடியா மைகளும் கடந்த கால் நூற்றாண்டு கால இனப் பிரச்சி னை காரணமான இலங்கையின் யுத்த அரங்கிலே மாறி மாறி நிகழ்ந்து வந்தவை களேயாகும். ஆதலினால் எந்த வெற்றியும் அல்லது தோல்வியும் நிரந்தரமா னவைகள் அல்ல. யுத்தத்திற்கு காரணமான தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்படும் போதே நிரந்தர சமாதானமும் உண்மையான இயல்பு வாழ்வும் அதன் மூலமான அபிவிருத்தியும் ஏற்பட முடியும். அத்தகைய ஒரு நிலை கிழக்கில் மட்டு மன்றி வடக்கிலும் ஏற்பட வேண்டும். இத னை யுத்தத் தைத் தொடர்ந்து முன்னெடுத்து சிறு வெற்றிகளைப் பெரு வெற்றி என விழாவெடுப்பதன் மூலம் சாதிக்க முடியாது. வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அடிப்படைகளைக் கொண்ட சுயாட்சித் தீர்வுக்கான அரசியல் ஆலோசனைகளும் உரிய அமு லாக்கமுமே ஒரே வழிமுறையாகும்.

# சமூகமும் பண்பாடும் 16

## சமூக நோயாக மாறிவரும் மருத்துவம்

பேராசிரியர் சி.சிவசேகரம்

**ஒரு சமூகம் தனது உறுப்பினர்களில்** நலிவடைந்தோரை எவ்வாறு கவனித்துக் கொள்ளுகிறது என்பது அதன் வளத்தில் மட்டும் தங்கியுள்ளது என்று கூற முடியாது. அதன் பண்பாடு எவ்வளவு உயர்ந்தது என்பதிலேயே அது முக்கியமாகத் தங்கியுள்ளது. மனிதரின் அடிப்படைத் தேவைகளுள் உணவு, உடை, உறைவிடம் என்பனவற்றுக்கு அடுத்தபடியாக உடல் நலத்தைக் கூறலாம்.

முதுமையும் வறுமையும் உடல் நலன்மின்மைக்கான முக்கிய காரணங்கள். அவற்றைவிட ஒரு சமூகத்தில் உள்ள உணவுப் பழக்கங்கள், உடற்பயிற்சி, மக்கள் வாழுமிடங்களதும் தொழில் புரியும் இடங்களதும் சுற்றுச் சூழல் போன்ற பலவும் உடல் நலத்தைப் பாதிக்கின்றன. ஒரு சமூகத்தின் பொருளியல் மேம்பாட்டுக்கு மக்களின் உடல்நலம் முக்கியமானது. சமூகத்தில் உள்ளோரின் உடல் நலம் முழுச் சமூகத்தினதும் பொறுப்பு என்பது சோஷலிசப் பார்வை. எனினும் முதலாளியத்திற்கு முந்திய சமூகங்களில் மருத்துவம் என்பது கல்விபுகட்டல் போன்று ஒரு சமூகப் பணியாகவே கருதப்பட்டு வந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. எவ்வித பாகுபாடுமின்றி நோயாளியைக் கவனித்தல் பல வைத்திய மரபுகளிலும் அண்மை வரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒரு நெறியாகும். மருத்துவர்கள் தமது சேவைக்கென்று பணங் கேட்கிறது தரக்குறைவானது என்ற சிந்தனை இன்னமும் மரபு வழி மருத்துவத் துறையில் உள்ள சிலரிடம் தொடர்ந்தும் உள்ளது. சமூகத்தில் அதன் சிறப்பான இடங்கருதி மருத்துவர்கள் மிகுந்த மரியாதையுடனேயே நடத்தப்பட்டும் வந்தனர். எனினும் அவர்கள் சமூகங்களில் உயர்நிலையில் வைக்கப்பட்டிருந்தனர் என்று கூற இயலாது. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கில நிலப்பிரபுத்துவக் குடும்பச் சீமாட்டிமார் மருத்துவருடன் நேரடியாகப் பேசுவது இழிவு என்று கருதினர். ஒரு வேலையாளிடம் நீ இவ்வாறு மருத்துவனிடம் சொல்லு என்கிற தோரணையிலும் மருத்துவன் என்ன சொல்கிறான் என்று கேட்கிற முறையிலுமே உரையாடல் நடத்தப்படும். முதலாளிய சமூகத்தின் எழுச்சியின் பின்னரே மருத்துவம், பொறியியல் போன்ற துறைகள் மரியாதைக்கு உரியனவாயின.

இந்தியத் துணைக்கண்டத்திலும் கிழக்காசியாவிலும் மருத்துவர்கள் கூடிய மரியாதையுடன் நட த்தப்பட்டனர். எனினும் சமூகத்தில் ஒரு அங்கத்தவராகச் சமூகத்தின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கிற மருத்துவர்களும் அரச குடும்பங்கள் பெரும் நிலப்பிரபுக்கள் போன்றவர்களது பணிகளைச் செய்கிற மருத்துவர்களும் நோயாளிகளுடன் பேணுகிற உறவு ஒரே விதமானதல்ல. மருத்துவர்கள் என்று ஒரு குறிப்பிட்ட சாதி இருந்ததில்லை. அதேவேளை எல்லாச் சாதிப் பிரிவுகளின் நடுவிலும் மருத்துவர்கள் இருந்தார்கள் என்று கூறவும் இயலாது. சாதி எல்லைகளைக் கடந்து மருத்துவம் செயற்பட வேண்டிய தேவை எப்போதுமே இருந்து வந்துள்ளது. எனினும் தீண்டாமை இறுக்கம் பெற்ற சூழ்நிலைகளில் சில எல்லைகள் தாண்டப்பட்டாமலே இருந்துள்ளன.

மருத்துவம் முற்றிலும் பரம்பரைத் தொழிலாக இருந்ததில்லை. எனினும் நிலப்பிரபுத்துவத்தின் கீழ் அது குரு- சீடர் என்கிற வழியிலேயே பயிலப்பட்டு வந்தது. மருத்துவம் பற்றிய இந்தியத் துணைக்கண்டக் கொள்கைகள் அனுபவச் செழுமை மிக்கவை. ஆயினும் அவை முற்றிலும் விஞ்ஞான முறையிலானவை என்று கூறுவது கடினம். இக் குறைபாடு சமூகத்தில் விஞ்ஞான அடிப்படையிலான சிந்தனை வளர்ச்சியின் போதாமையுடன் தொடர்புடையது. பல மருத்துவ நடைமுறைகளுக்கான விளக்கங்கள் விஞ்ஞான அடிப்படையே அற்ற கருத்து முதல் வாதத் தன்மையுடையன. இந்த நிலையிலிருந்து மரபு வழி மருத்துவத்தை விடுவித்து நவீனப்படுத்த இயலாத விதமாக மருத்துவத்தைப் பலரும் அறிவது அதன் வலிமையை அழித்து விடும் என்கிறவிதமான மூட நம்பிக்கைகளும் மரபிற்கு வெளியிலிருந்து எதையும் கற்கவும் ஏற்கவும் இயலாது தடுக்கும் பழமைவாதப் போக்குகளும் இருந்து வந்துள்ளன.

நமது நிலவுடைமைச் சமுதாயத்தின் உடைவு இயல்பான முதலாளிய வளர்ச்சியின் வழி அமையால் கொலனிய ஆதிக்கத்தின் விளைவாக உட்புகுந்த முதலாளியம் காரண மாக நேர்ந்தால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கட்கமைய நமது மரபு மருத்துவ வழி நடைமுறை மாறவில்லை. நவீன சமூகத்தின் தேவைகளும் பலவேறு நிர்ப்பந்தங்களும் மட்டுமன்றி மரபு வழி மருத்துவத்தின் நலிவும் பெரும்பாலான நகர மக்களையும் கிராமப்புற மக்களிற் கணிசமான பகுதியினரையும் மேலைநாட்டு மருத்துவத்தில் தங்கியிருக்குமாறு செய்துள்ளது. எனினும் நமது முதலாளிய வளர்ச்சியும் குறிப்பாகத் திறந்த பொருளாதாரக் கொள்கையை அடுத்து நிகழ்ந்த மாற்றங்களும் மருத்துவத்தை ஏறத்தாழ முற்றிலும் வணிகமயமாக்கி விட்டன. மனிதாபிமான நோக்கும் சேவை மனப்பான்மையும் கொண்ட மருத்துவர்கள் இன்னமும் உள்ளனர். எனினும் அவர்கள் சிறுபான்மையினராயும் பலவேறு சமூக நிர்ப்பந்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

அமெரிக்காவில் உள்ளது போல பணம் இருந்தால் மட்டுமே மருத்துவமும் உடல் நலமும் என்கிற நிலையை நோக்கி இலங்கைச் சமூகம் இன மத வேறுபாடின்றி வேகமாக நகர்ந்து கொண்டுள்ளது. ஐரோப்பிய நிலைமைகள் கொஞ்சம் வேறுபட்டவை மருத்துவமும் கல்வியும் அரசின் பொறுப்பு என்ற நிலை இன்னும் மாறவில்லை. அங்கு மருத்துவத்தைத் தனியார் மயமாக்குவதற்கு எதிரான சமூக உணர்வு அங்கு இன்னமும் வலுவாக இருந்தாலும் மருத்துக் கம்பனிகளின் வணிக நோக்கங்களின் ஆதிக்கமும் வலுப்பட்டு வருகிறது. இவற்றிற்கு நேர்மாறான ஒரு போக்கு கியூபாவில் உள்ளது. முழு லத்தின் அமெரிக்காவிலும் விடச் சிறப்பான மருத்துவ சேவை ஒப்பிடுகையில் வறிய நாடான கியூபாவில் நடைமுறையில் உள்ளது. மருத்துவத் துறையில் கியூபாவில் சாதனைகள் முழுச் சமூகத்திற்கும் எட்டக்கூடியனவாக உள்ளன.

நமது மருத்துவத்துறை மேற்கிலிருந்து மருத்துவத் தொழில் நுட்பத்தையும் நவீன மருந்துக்களையும் வைத்திய முறைகளையும் உள்வாங்கியுள்ளதில் உள்ள பெரிய குற்றம் ஏதெனில் அது இவற்றை வணிக நோக்கிலேயே உள்வாங்கியுள்ளமைதான். மருத்துவம் ஒரு சேவை என்ற கொள்கையை நமது மருத்துவத்துறை பெருமளவும் இழந்து விட்டது. அதன் விளைவுகளைப் பெருகி வரும் தனியார் மருத்துவமனைகளின் வடிவிலும் மருத்துவத்தை விலை கூறி விற்கும் மருத்துவ நிபுணர்களின் வடிவிலும் காணுகிறோம்.

நமது மருத்துவ நடைமுறையின் மிகப்பெரிய இழப்பு, ஏதென்றால் வணிகமயமாக்கலின் விளைவாக மருத்துவருக்கும் நோயாளிக்குமிடையிலான உறவு நோயாளியிடம் மருத்துவர் நடந்து கொள்ளும் விதம் ஒரு நோயாளி பற்றிய அணுகுமுறை என்பன மனித நேயத்தை இழந்து விட்டமை தான். இன்றைய வணிக நோக்கு மருத்துவர்களை வெறும் மருந்து வியாபாரிகளாக மாற்றி விட்டது. இவ்வாறான நலிவு ஒரு கேவலமான பண்பாட்டுச் சீரழிவாகும். நமது சமூகம் பண வசதியற்ற எவரதும் உடல் நலம் பற்றி அக்கறையற்ற ஒன்றாக மாறி வருகிறது என்றால் அது தன்னைத் தானே காத்துக் கொள்ள இயலாத ஒரு சமூகமாகி வருகிறது என்பது தான் அதன் பொருள். நம்மால் நிலவுடைமைச் சமூகத்திற்கோ முற்றாக மரபு வழி மருத்துவத்துக்கோ மீள முடியாது. அது நமது உடனடியான தேவையுமல்ல. ஆனால் மருத்துவத் துறையை மனிதாபிமானப் பண்புடைய ஒரு பண்பட்ட சமுதாயத்தை அடையாளப்படுத்துகிற துறையாக மாற்றுகிற தேவை நம்முன் உள்ளது. மருத்துவத்தின் உயர் விழுமியங்களை மீட்டெடுக்கிற வாய்ப்பு நம்முன் உள்ளது. சமூகத்திற்கான மருத்துவம், நோய்த் தடுப்பு மருத்துவம், பொது சுகாதாரமும் உடல் நலமும் என்பனவற்றுக்கு மருத்துவத்துறை முதன்மை வழங்குமாயின் ஒரு புறம் மருத்துவச் சேவை மீதான சுமை குறையும். மறுபுறம் மருத்துவத்துறையினருக்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு ஆரோக்கியமும் நட்புங் கொண்டதாக அமையும். ஒவ்வொரு சமூகச் செயற்பாட்டுத் துறையும் சமூகத்திற்குப் பயனுள்ளதாயும் சமூகத்தின் மரியாதைக்குரியதாயும் அமைவது உச்சமான பண்பாட்டின் அடையாளம்.

இவ்வாறான மாற்றங்கள் மருத்துவத்தை ஒரு வணிகமாக்கியுள்ள மருத்துவப் பெரு முதலாளிய நிறுவனங்கட்கு விருப்புடையதாக இருக்கமாட்டாது.

நம் முன்னுள்ள தெரிவு சிரமமானதல்ல. அதை நடைமுறைப் படுத்தும் பணி சமூக நீதிக்கான போராட்டங்களினின்று பிரிக்க இயலாதது என்பது தான் அதற்கு முன்னாலுள்ள பெரிய சவால்.

# சுதந்திர இந்தியாவில் பெண்கள்

**"காணமல் போகும் பெண்கள்"** என்ற தலைப்பில் கீத்தா ஆறுமுகன் என்ற எழுத்தாளர் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். இந்த நூலில் இந்தியாவில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகத் திடுக்கிடும் தகவல்கள் வெளியிட்டுள்ளார். இந்தியாவில் தற்போது ஒரு பெண் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். இந்தியாவில் ஒரு பெண் பிரதமராகவும் பலர் முதலமைச்சர்களாகவும் இருந்த போதும் பெண்களின் நிலைமை சீரடையவில்லை. சீக்கியர் முஸ்லீம், தலித் என்போர் இந்திய ஜனாதிபதிகளாயிருந்த போதும் அவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவு வரவில்லை. இந்தியா ஒரு பெரிய ஜனநாயக நாடு எனப் பெருமைப்படுபவர்களில் எமது தமிழ்த் தலைவர்களும் அடங்குவர். அவர்களுக்கு இந்திய உழைக்கும் மக்கள் பொருட்டல்ல. ஆளும் வர்க்க சக்திகளே எசமானர்கள்.

குறிப்பிட்ட நூலில் வெளியிடப்பட்ட சில தகவல்களைக் கீழே தருகிறோம். இந்தியாவில் ஜனநாயகம் இருக்கிறதா இல்லையா என்பதை நீங்களே தீர்மானியுங்கள். இந்தியாவில் வேண்டப்படாத பெண் குழந்தைகள் பாலில் அழுத்தியும், மட்பாண்டங்களில் போட்டு மூடி உயிருடன் தீயூட்டப்படுகின்றனர். நச்சு விதைகளைப் பாலுடன் கலந்து ஊட்டி கொலை செய்யப்படுகின்றனர். அண்மைக் காலங்களில் கருப்பைக்குள்ளேயே கொலை செய்வது சுலபமாகி விட்டது.

இந்தியாவில் ஆயிரம் ஆண்களுக்கு 927 பெண்களே உள்ள நிலையில் தினமும் கருச்சிதைவு மூலம் ஏழாயிரம் (7000) பெண் குழந்தைகள் கொல்லப்படுவதாக யூனிசெவ் சென்ற ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கின்றது. பிருத்தானிய மருத்துவ சஞ்சிகையான தலான்செற்- THELA NCHT- தகவலின் படி கடந்த இரண்டு தசாப் தங்களில் இந்தியா ஒரு கோடி பெண்களை இழந்துள்ளது. "கற்பமுற்றிருக்கும் வேளையில் பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை முன் கூட்டியே அறியும் தொழில் நுட்பம் தற்போது இருப்பதால் இந்தக் கொலைகள் அதிகரிப்பதாக" கீதா தெரிவிக்கிறார்.

ஆண்குழந்தைகளைப் பெறும் நோக்கில் பெண்கள் அதிக கருத்தரித்தலும் இடம் பெறுகிறது. ஒரு மருத்துவத் தாதியைப் பேட்டி கண்ட போது அவர் தான் பிறந்த பல பெண் சிசுக் களைக் கொன்றதாகவும் அந்த எண்ணிக்கை ஞாபகம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்து முறைப்படி ஆண்பிள்ளைகளே பெற்றோரின் உடலுக்கு தீமூட்டவேண்டும்.

"பெண் குழந்தை திருமணமாகிப் படும் சித்திரவதையிலும் பார்க்க அதை உடனேயே சொர்க்கலோகத்திற்கு அனுப்புவது சிறந்ததென" ஒரு தாய் நூலாசிரியர் கீதாவிடம் கூறினார். சில பகுதிகளில் பெண்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால் ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரர்கள் ஒரு பெண்ணை மனைவியாக்கிகொள்வார்கள். திரிப்பால குமாரியின் வயது 18. திருமணமானபின் கணவன் அவளை தனது சகோதரர்களுக்கும் மனைவியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டான். அதை அவள் மறுக்கவே அவளை அவன் கொலை செய்தான் என்ற தகவலும் அந்த நூலில் உள்ளது.

பெற்றோர்களிடமிருந்து பணத்தைப் பெறும் நோக்கில் பிறக்கப்போகும் குழந்தை பெண் எனப் பொய் கூறி கருச்சிதைவு செய்யும் டாக்டர்களும் உண்டு.

பிறக்கப்போகும் பிள்ளை ஆணா, பெண்ணா எனத் தெரிந்து கொள்வதற்கான பரிசோதனையைத் தடைசெய்ய இந்தியாவில் 1994ல் சட்டமியற்றப்பட்டது. ஆனால் பண்ணிரண்டு வருடங்களின் பின்பே ஒருவர் தண்டிக்கப்பட்டார்.

"சீதனம் தொடர்பாகவும் கருச் சிதைவு தொடர்பாகவும் இந்தியாவில் உள்ள சட்டங்கள் மிகவும் சிறந்தவை." ஆனால் அவை எழுத்தில் மட்டுமேயுள்ளதாகக் கீதா தெரிவிக்கிறார்.

# ஏழைப் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் இடமில்லையா?

தயா

**ஆரம்ப பாடசாலைக் கல்வி முதல்** பல்கலைக்கழக கல்வி வரை இலங்கையில் இன்னும் இலவசக்கல்வி இருக்கிறது. க.பொ.த. உயர்தரம் சித்தியடைபவர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழக கல்வி வாய்ப்பு கிடைப்பதில்லை. காரணம் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினரே பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

1977 ஆம் ஆண்டு முதல் அறிமுகமான தனியார் மயத்தால் தனியார் பாடசாலைகளும், சர்வதேச பாடசாலைகளும் அதிகரித்துள்ளன. பிரபல அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் காணப்படுகின்ற குறைபாடுகளினால் வாய்ப்பு கிடைக்காதோர் வசதியிலிருந்தால் சர்வதேச பாடசாலைகளை நோக்கிச் செல்கின்றனர்.

பிரசித்தமான பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்ப்பதில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கொள்கை நடைமுறை என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்களில் சிலர் வருடாந்தம் அவர்களின் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டுள்ளதாக நீதி கேட்டு உயர் நீதிமன்றத்தில் வழக்குகளை தொடுத்து வந்தனர். அவர்களில் சிலருக்கு சார்பான நியாயமும் கிடைத்தது.

அடுத்த வருட பாடசாலை அனுமதி தொடர்பாக இவ்வருடம் உயர்நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதனால் தனித்தனி வழக்குகளாக விசாரித்து தீர்ப்பளிக்காமல் முதலாம் வகுப்பில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வழி காட்டல்களை உயர்நீதிமன்றம் முன்வைத்தது.

அதன் படி பெற்றோர்களின் கல்வித்தகமைக்கு 25 புள்ளிகளும் பிள்ளையின் திறமைக்கு 25 புள்ளிகளும் பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு 40 புள்ளிகளும் பாடசாலைக்கு அருகில் வசிப்பவர்களுக்கு 10 புள்ளிகளும் வழங்கப்பட்டு அதனடிப்படையில் முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று உயர்நீதிமன்றம் யோசனைகளை முன்வைத்திருந்தது. அதனடிப்படையில் முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான சுற்று நிருபத்தை தயாரிக்கும்படி கல்வி அமைச்சின் செயலாளரை உயர்நீதி மன்றம் கேட்டிருந்தது.

இதில் பெற்றோர்களின் கல்வித்தகைமை, சேர்க்கப்படவுள்ள மாணவர்களின் கல்வித்தகைமை பழைய மாணவர்களின் பிள்ளைகள் போன்றவற்றுக்கு வழங்கப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் முன்மொழிந்துள்ள புள்ளிகள் எதிர்க்கட்சித் தலைவரினதும் இலவசக் கல்வியை ஆதரிக்கும் பெரும் எண்ணிக்கையான மக்களினதும் எதிர்ப்பிற்குள்ளானது.

பாடசாலைக்கு அருகில் வாழ்பவர்களுக்கு அதிகமான புள்ளிகள் இதுவரை வழங்கப்பட்டு வந்தது தெரிந்ததே. பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட புள்ளியைக் குறைப்பதற்கு கல்வியமைச்சு எடுத்த நடவடிக்கையை அடுத்தே உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. உயர் நீதிமன்றம் முன்மொழிந்த புள்ளி வரையறைகள் இலவசக்கல்வி வசதியை மறுப்பது போன்று குறிப்பாக கல்வித்தகைமை குறைந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் ஆரம்பக் கல்வி அறிவு குறைந்த பிள்ளைகளுக்கும் அனுமதி மறுப்பதாக அமைந்திருந்தது.

இவ்விடயம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு முதலாம் வகுப்பிற்கு சேர்க்கப்படவுள்ள மாணவர்களின் அறிவிற்கு எவ்வித புள்ளிகளும் வழங்கப்படக் கூடாதெனவும் பெற்றோர்களின் கல்வித் தகமைக்கு எவ்வித புள்ளிகளும் வழங்கப்படக்கூடாதெனவும் இணக்கம் காணப்பட்டது. அத்துடன் பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படுவதைக் குறைப்பதற்கும் பாடசாலைக்கு அருகில் வசிப்பவர்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கவும் இணக்கம் காணப்பட்டது. இந்த அடிப்படையில் கல்வியமைச்சின் செயலாளர் சுற்று நிருபத்தை தயாரித்தார்.

அவரின் சுற்றறிக்கை உயர்நீதிமன்றத்தின் யோசனைகளை மீறுவதாக இருப்பதால் அவர் உயர்நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்கு ஆளாவார் என்றும் அவரை உயர் நீதிமன்றத்திற்கு அழைத்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கடுமையாக எச்சரித்தார்.

அப்போது பெற்றோர்களின் கல்வித்தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்படத்தேவை இல்லையென்று பிரதம நீதியரசர் கூறினார். ஆனால் பாடசாலைக்கு சேர்க்கப்படவுள்ள பிள்ளையின் அறிவுக்கு 50 புள்ளிகளும். பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு 40 புள்ளிகளும் பாடசாலைக்கு அருகில் இருப்பவர்களுக்கு 10 புள்ளிகளும் வழங்கப்படவேண்டும் எனவும் விதந்துரைத்தார். முதலாம் தரத்திற்கு சேர்க்கப்படவுள்ள பிள்ளைகளின் அறிவுக்கு புள்ளிகள் வழங்கப்படுவது நியாயமற்றது என்று எடுத்துக் கூறப்பட்டபோது பாராளுமன்றத்திற்கு செல்வதற்கு வேண்டுமென்றால் எதுவித தகைமையும் தேவைப்படாமல் இருக்கலாம். ஆனால் பாடசாலைகளுக்கு அனுமதிக்கும் போது பிள்ளைகளின் அறிவைக் கணக்கில் எடுக்க வேண்டும் என்று பிரதமநீதியரசர் கூறினார். உயர் நீதிமன்றம் கூறும்படி சேர்க்கப்படவுள்ள மாணவர்க ளின் அறிவிற்கு 50 புள்ளிகளும் பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு 40 புள்ளிகளும். பாடசாலைக்கு அருகில் இருப்போருக்கு 10 புள்ளிகளும் வழங்கப்பட வேண்டுமென்றும் அந்த அடிப்படையிலேயே கல்வியமைச்சின் செயலாளர் அரசாங்க பாடசாலைகளில் முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான சுற்று நிருபத்தை தயாரிக்க வேண்டுமென்றும் பிரதம நீதியரசர் வலியுறுத்தியுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் யோசனைகள் இலவசக் கல்வியை மறுப்பதாக அமைவதால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படைகளின்படியே மாணவர் அனுமதிக்கான சுற்று நிருபத்தை தயாரிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹ கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உயர்நீதிமன்றம் மாற்றமுடியாது. அப்படி மாற்றினால் அது பாராளுமன்ற த்தின் சிறப்புரிமையை மீறுவதாகும். அதனால் பாடசாலை அனுமதியில் பாராளுமன்ற முடிவே சுற்று நிருபமாக வெளி வரவேண்டும். அது குறித்து சபாநாயகர் தீர்ப்பளிக்க வேண்டு மென எதிர்கட்சித்தலைவர் கேட்டுள்ளார்.

தற்போது அரைகுறை உயிரில் பிழைத்திருக்கும் இலவசக் கல்வி உயர்நீதிமன்றத்திற்கும் பாராளுமன் றத்திற்குமிடையில் மாட்டிக் கொண்டுள்ளது. முடிவை எதிர் பார்த்து லட்சக் கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் இருக்கின்றனர்.

எது எவ்வாறெனினும் முதலாம் தரத்திற்கு சேர்க்கப்படவுள்ள மாணவர்களின் அறிவு பெற்றோர்களின் கல்வித்தகைமை என்பவற்றுக்கும் பழையமாணவர்களின் பிள்ளைகளுக்கும் அதிக புள்ளிகள் வழங்கப்படுவதால் வசதிகுறைந்த சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைகளின் கதவுகள் மூடப்படுவதாகவே இருக்கும்.

இலவசக் கல்வி என்பது உயர்நீதிமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்குமிடையிலான கயிறு இழுத்தல் மாணவர்களின் ஆதிக்கத்திற்கும் இடமளிக்கக்கூடாது. போட்டியாக மாற்றப்படக் கூடாது. பாடசாலை அனுமதியில் வசதிபடைத்த கல்வித் தகைமையுள் பெற்றோர்களின் ஆதிக்கத்திற்கும் பழைய

# தரம் 1 பாடசாலை அனுமதி யாருடைய நலனுக்காக

-திருமுகன்-



**பல்கலைக்கழக அனுமதி** ஒரு அரசியல் பிரச்சினையாக்கப்பட்டு நீதியற்ற தரப்படுத்தல் முறை ஒன்று புகுத்தப்பட்டதன் விளைவாகத் தேசிய இனப்பிரச்சினை மேலும் மோசமாகியது. அது நடந்து முப்பத்தேழு ஆண்டுகளின் பின்பு பாடசாலைகளின் முதலாம் வகுப்பு அனுமதியே ஒரு அரசியல் பிரச்சினையாக்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகட்கு முன்பு பாடசாலை அனுமதிகளில் ஊழலும் லஞ்சமும் பற்றிய முறைப்பாடுகளை அடுத்துப் பெரிய பாடசாலைகள் சிலவற்றின் அதிபர்கள் பதவி விலக்கப்பட்டதாக அறி விக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு மாணவர்கள் தூண்டி விடப்பட்டனர். அந்தளவுக்குக் கல்வித் துறையில் ஊழல் மலிந்துள்ளது.

பாடசாலை முதலாம் வகுப்பு அனுமதிகட்கான சுற்று நிருபம் பாடசாலை அனுமதிகட்கான பிள்ளைகட்கு இருந்த இட ஒதுக்கீட்டில் கை வைத்ததும் பாடசாலையிலிருந்து மாணவர்களின் வதிவிடம் உள்ள தொலைவிற்கு இருந்த முக்கியத்துவத்தை மாற்றியதும் அதனாற் பாதிக்கப்படக்கூடியவர்களைக் கொதித்தெழச் செய்தது. பேர் பெற்ற பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் கல்வி அமைச்சின் செயலாளாரால் அறிவிக்கப்பட்ட மாற்றங்களை வெளிப்படையாகவே தங்களது வர்க்க நலன் சார்ந்த காரணங்களுக்காக எதிர்க்கின்றனர். அரசாங்கத்தின் பலவேறு நோக்கங்களுள் ஒன்று பாடசாலைகள் 1961ல் தேசியமயமாக்கப்பட்ட போது பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் தொகையில் மத அடிப்படையிலான பங்கீடு பேணப்படும் என்ற உத்தரவாதத்தை நீக்குவதாகும். இது பற்றிப் பேர் பெற்ற சிங்கள பௌத்த பாடசாலைப் பழைய மாணவர்கள் கூட ஆவேசமாகக் எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளனர். எனினும் தேசிய சிறுபான்மையினரதும் மத அடிப்படையிலான சிறுபான்மையினரதும் நலன்கள் பாதிக்கப்படுவது பற்றி யாரும் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. அரசாங்கம் முன் வைத்துள்ள ஆலோசனைகள் பற்றிய விவாதம் பேர் பெற்ற 345 பாடசாலைகள் தொடர்பாக அல்லது அதில் ஒரு பகுதியானவை தொடர்பானதாகவே உள்ளது. அதேவேளை எஞ்சியுள்ள 9300க்கும் மேற்பட்ட பாடசாலைகள் எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளன என்பது பற்றியோ அடிப்படை வசதிகள் போதாத நிலையிலும் ஆசிரியர்கள் போதாமலும் அவற்றுட் பெரும்பாலானவை இருப்பது பற்றியோ இந்த விவாதத்தில் ஈடுபடுகிறவர்கள் எவருக்கும் அக்கறையில்லை. போதாக்குறைக்கு நீதியரசரும் உயர் நீதிமன்றமும் கல்விக் கொள்கை தொடர்பான சட்டமியற்றலில் குறுக்கிட்டுள்ளமை விவாதத்தை மேலும் சிக்கலாக்கியுள்ளது. ஆனால் இந்த விவாதம் நாட்டின் பாடசாலைக் கல்வி பற்றியதாக இல்லாமல் ஓரளவு வசதிபடைத்த நடுத்தர-உயர் நடுத்தர வர்க்கத்தினரின் போட்டாபோட்டி பற்றிய ஒன்றே ஒழிய ஏழை மாணவர்களின் கல்வி வாய்ப்புக்கு அரசாங்கம் ஆப்பு வைக்கிறது என ரணில் விக்கிரமசிங்க வாதிப்பது உண்மையாகாது. 1960களின் நடுப்பகுதி வரையும் ஓரளவுக்கு 1970களின் முற்பகுதி வரையுங்கூட நாட்டின் பின் தங்கிய சமூகங்கள் முன்னர் தங்களுக்கு மறுக்கப்பட்ட கல்வி வாய்ப்பைப் பெற்றன. ஆனால் 1965 முதல் வசதிபடைத்த வர்க்கத்தினர் தமது மேலாண்மையை நிலைநாட்டுவதற்கான வழிகளை உருவாக்கத் தொடங்கிவிட்டனர். பாடசாலைக் கல்வியில் அரசாங்க முதலீடு போதாமையால் நாட்டின் பாடசாலைகளில் பத்துச் சதவீதத்திற்குங் குறைவானோர் கற்கும் வசதிபடைத்த பாடசாலைகட்கும் ஏனைய வறிய பாடசாலைக்குமிடையிலான ஏற்றத் தாழ்வு மேலும் விரிவடைந்தது. 1978க்குப் பிறகு அரசாங்கம் திட்டமிட்ட முறையில் இலவசக் கல்விக்குக் குழி பறித்து "சர்வ தேசப் பாடசாலைகள்" என்ற பேரில் தனியார் பாடசாலைகளை உருவாக்கியது. இப் பின்னணியில் பொருள் வசதி மிக்க பலர் தமது பிள்ளைகளைத் தனியார் பாடசாலைகளிலும் வெளிநாட்டிலும் கல்வி கற்க அனுப்பினர். அவர்களில் இன்னொரு பகுதியினரும் உயர் நடுத்தர வர்க்கத்தினரும் பேர் பெற்ற பாடசாலைகளில் தமது ஆதிக்கத்தை இறுக்கமாக்கிக் கொண்டனர்.

வசதிகளுடன் கூடிய புதிய பாடசாலைகளை உருவாக்குவதற்கும் பின்தங்கிய பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் பதிலாக நாட்டின் அரசாங்கங்கள் பிரபல பாடசாலைகளில் மாணவர் தொகையைக் கூட்டிக் கொண்டு போனது. இந்த விதமான அணுகு முறையால் நகர்வாழ் நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சியின் விளைவான தேவைகளை நிறைவு செய்ய இயலாமையே கடந்த சில ஆண்டுகளாகக் கல்வித் துறையில் ஊழலும் ஒழுங்கீனங்களும் பெருக வழி செய்தது.

அரசாங்கமோ எதிர்க்கட்சியோ பெரிய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களோ நாட்டின் மிகப் பெரும்பாண்மையான குடும்பங்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்கிற நோக்கில் எதையும் செய்யவில்லை. இன்றைய விவாதம் நல்ல கனிகளைத் தமக்குள் பங்கிடுவதற்கு ஓரளவான வசதி படைத்தோரிடையிலான அடிபாடாகவே உள்ளது. அதில் ஏழைகள் பற்றியும் இலவசக் கல்வி பற்றியுமான கவலைகள் எல்லாம் வெறும் முதலைக் கண்ணீர்தான். ஏனெனில் கடந்த முப்பதாண்டுகளாக இலவசக் கல்வி அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் சிதைக்கப்பட்டு விட்டது.

இந்த நாட்டுகென்றொரு கல்விக் கொள்கை பிரதான அரசியற் கட்சிகளில் எதனிடமும் இல்லை என்பதையும் கல்வி பற்றிப் பேசுகிற கணவான்களின் வங்கலோட்டுத் தனத்தையுமே நாம் இன்று காணுகிறோம்.

எனினும் அரசாங்கம் தனக்குச் சாதகமான ஒரு உயர்நடுத்தர அதிகாரி வர்க்கப் பிரிவினரின் நலன்களைப் பேணக் கூடிய விதமாகவும் தனது பேரினவாத நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் முன்வைத்த காலை லேசில் பின் வைக்கப் போவதில்லை. அது சில சமரசங்களைச் செய்யக்கூடும். ஆனால் நாட்டின் புறக்கணிக்கப்பட்ட உழைக்கும் வர்க்கங்களுக்கும் தேசிய சிறுபான்மை இனங்கட்கும் அதன் மூலம் எதுவுமே கிட்டப் போவதில்லை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன்

# தேசிய இன அடையாள உருவாக்கத்தின் விதைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இந்தியத் துணைக் கண்டத்தில் பிரித்தானியக் கொலனிய ஆட்சிக்கு எதிரான எழுச்சிகள் நடைபெற்றுள்ளன. புலித்தேவன், கட்டப்பொம்மன், திப்பு சுல்தான், ஸான்ஸிராணி என்று நாமறிந்த போர்கள் எல்லாம் பிரித்தானிய கொலனி ஆதிக்கத்திற்கு எதிரான முக்கியமான எழுச்சிகளின் சின்னங்கள், சிற்றரசர்களாலும் மாநில அரசர்களாலும் வழிநடத்தப்பட்ட இவ்வாறான அந்நிய ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மக்களின் ஆதரவும் இருந்தது. எனினும் இவை மக்கள் போராட்டங்களாக அமை யக்கூடியளவுக்கு அன்றைய காலம் மக்களே பிரதான அரசியற் சக்தியாகச் செயற்பட க்கூடிய ஒரு காலம் அல்ல. எனினும் அப் போராட்டங்கள் எல்லாவற்றிலும் முற்போக்கான பண்புகள் பல இருந்தன. அவற்றையே இன்று வரை முற்போக்குச் சிந்தனையாளர்கள் கொண்டாடுகின்றனர். 1857ம் ஆண்டின் சிப்பா ய்க்கலகம் வெகுசனப் பண்புடைய ஒரு முக்கியமான வரலா ற்று நிகழ்வே எனினும் அதுவும் அடக்கப்பட்டது. இந்திய விடுதலைக்கான போராட்டத்தை வழி நடத்தியதாகக் கூறப்படுகிற காங்கிரஸின் பாரம்பரியம் அதற்கு முக்கிய ஆயுதப் போராட்டங்களின் வரலாற்றுத் தொடர்ச்சி என்று கூறுவது கடினம். மக்கள் மத்தியில் அந்நிய ஆதிக்கம் பற்றி இருக்கக் கூடிய எதிர்ப்புணர்வு சுதந்திரப் போராட்டத்தி ற்கான அதைப் பயன்படுத்திய தலைமையின் வர்க்கப் பின்னணியினின்றும் அது வலியுறுத்திய வர்க்க நலன்க ளினின்றும் வேறுபட்டிருந்ததை நாம் இங்கு கவனிக்க வேண்டும். இலங்கையிலும் பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் சிலர் இருந்துள்ளனர். எனினும் இலங்கையின் அந்நிய மேலாதிக்கவாதிகளுடனான சமரசமே இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் யார் அதிகாரத்தில் இருந்தனர் என்பதை முடிவு செய்தது. அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து நின்று போரிட்ட கிளர்ச்சிப் பாரம்பரியங்கள் தேசிய வாத நோக்கங்கட்காகக் கொண்டாடப்படுகின்றன. எனினும் தேசியவாதிகள் ஐரோப்பியக் கொலனிய எதிர்ப்பு என்ற சிந்தனையின் தொடர்ச்சியாக அவற்றை விருத்தி செய்த தில்லை.

இலங்கை கொலனிய நிருவாகம் நகர்சார்ந்த அதிகார மையங்களைக் கொண்டிருந்தது. இராணுவ நோக்கங்கட்காக அமைக்கப்பட்ட தளங்கள் நாட்டின் கரையோரப் பகுதிகளை அண்டி அதிகமாக இருந்த காரணம் கடல் வழியான ஆபத் துக்களின் முக்கியத்துவமே எனலாம். கண்டி இராச்சியம் முறியடிக்கப்பட்ட பின்பு, தோட்டப்பயிர்ச் செய்கை விருத்தி பெற்றுப் பின்னர் அது இலங்கையின் ஏற்றுமதி வணிகத்தில் முக்கியமான பங்கை ஏற்றது இலங்கையின் பொருளாதாரத் திலும் அரசியலிலும் ஒரு முக்கியமான திருப்புமுனை எனலாம். தோட்டப் பயிர்ச்செய்கையின் பெரும்பகுதிமலைக்காடுகளில் நடந்தது என்பது முக்கியமான ஒரு உண்மை. கண்டி, மாத்தனை மாவட்டங்களில் தோட்டங்களின் விருத்தியால் விவசாயிகள் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்ட போதும். அது கொலனி ஆதிக்கத்திற்கெதிரான ஒரு கிளர்ச்சியாக வளரவில்லை. அது வேறுவிதமாகத் திசைதிருப்பப்பட்டதில் உள்ளூர் நிலவுடைமையாளர்கட்கும் ஒரு பங்கு இருந்தது.

இலங்கையில் கொலனி ஆதிக்கத்திற்குத் துணையாகக் கிறிஸ்துவ மத நிறுவனங்கள் வந்து மதமாற்றத்திலும் மத அடிப்படையிலான ஒரு இடை நிலை வர்க்கத்தின் உருவாக்கத்திரும் பங்கு பற்றிய போதும் காலப் போக்கில் அவை புதிய சமூக முரண்பாடுகளைத் தோற்றுவித்தன. கொலனிய ஆட்சி மீது கிறிஸ்துவத் திருச்சபையின் அழுத்தங்களுக்கும் கண்டி இராச்சியத்தைப் பிடித்த போது புத்த பீடங்களுடன் செய்து கொண்ட சமரசங்களுக்கும் இடையே சிக்குண்ட கொலனிய நிருவாகம் ஆங்கில கிறிஸ்துவத் திருச்சபைக்கான சலுகைகளைக் கைவிட நேர்ந்தது.

கிறிஸ்துவ ஆதிக்கத்தை வலிந்து முன்னெடுப்பது கொலனிய ஆதிக்கத்தைப் பலவீனப்படுத்தும் என்பது காரணமாகவே கொலனிய நிருவாகம் மத விவகாரங்களில் தனது நேரடியான குறுக்கீட்டைக் குறைத்துக் கொண்டது. அதே வேளை இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சியில் அமெரிக்கரான கேணல் ஒல்கொட்டும் ரஷ்யரான பிளவாட்ஸ்கி அம்மையாரும் தலைமைப்பாத்திரம் வகிக்க முடிந்ததையும் நாம் கவனிக்க வேண்டும். தமிழகத்தில் திராவிட மொழிகளின் குறிப்பாகத் தமிழின் தனித்துவமும் தமிழ்மொழி அடையாளமும் மீளெழுச்சி பெறுவதில் ஐரோப்பியர்கள் பங்காற்றியது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூகத்தில் ஆழ வேரூன்றிய பண்பாட்டு வேர்களைக் களைவ தில் நேரடியாகக் குறுக்கிடுவதனால் ஏற்படக்கூடிய எதிர்ப் புக்களைக் கருத்திற் கொண்டே கொலனிய நிருவாகம் பௌத்த. சைவ மறுமலர்ச்சி இயக்கங்கட்குத் தடையாகத் தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை. இந்திய விடுதலை இயக்கத்தின் சற்றுப் பலவீனமான எதிரொலியாக இலங்கையில் "சுயராச்சியம்" என்கிற கருத்து அநகாரிக தர்மபால போன்றோர் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இருப்பினும் இந்தியக் காங்கிரஸின் தொடக்கக் காலச் சுயராச்சியக் கோரிக்கை போல ஆனால் அதிலுங்குறைவாக அதிகாரத்தில் பங்கு கோருகிற நோக்கத்தைக் கொண்டிருந்தளவுக்கு அந்நிய ஆட்சியை மறுதலிப்பதாக அது அமைந்திருக்கவில்லை.

கிறிஸ்தவத்துக்கு எதிராக பௌத்ததை முன்னிறுத்தி அதை மேம்பாடான ஒரு சமயமாக நிறுவிகிற விவாதம் 1860களில் நடந்த விவாதங்களின் வெற்றியை அடுத்து கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்கட்கு மாற்றாக பௌத்தக் கல்வி நிறுவனங்கள் உருவாகு முன்னமே வடக்கில் 1849 அளவில் ஆறுமுகநாவலர் சைவப்பாடசாலை ஒன்றை நிறுவினார். அந்த நூற் றாண்டின் பிற்பகுதியில் அரபி பாஷா என்ற கொலனிய விரோத எகிப்தியர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட சூழலில் அரபிபாஷாவின் ஆதரவுடன் சித்தி லெப்பை அவர்களது முன் முயற்சியால் முஸ்லீம்களின் கல்விக்கும் சமூக மீளெழுச்சிக்குமான முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டன.

மத அடிப்படையிலான மூன்று மீளெழுச்சிகளும் கொலனிய ஆட்சியைத் தூக்கி எறியாமலே தமது சமூக அடையாளங்களையும் நலன்களையும் வற்புறுத்துகிற நோக்கில் நிகழ்ந்தன. இவற்றிடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளைக் காண முடியுமாயினும் அதே அளவுக்கு முக்கியமான வேறுபாடுகளும் இருந்தன. இந்தப் போக்குக்கள் மேற்குறிப்பிட்ட முயற்சிகளுடன் தொடர்புபடுத்தப்படுகிற மூன்று தனிமனிதர்களால் வழிநடத்தப்பட்டன என்று கொள்வோமானால் அப் போக்குக்கள் எவ்வாறு நிலை பெற்றன என்பதை நம்மால் விளங் கவோ விளக்கவோ இயலாது. இம் மூன்று போக்குகளதும் தலைமைச் சக்திகளாகக் காட்டப்படுவோர் குறிப்பிட்ட ஒரு வரலாற்றுச் சூழலில் நிலவிய ஒவ்வொரு சமூகத்தினதும் பிரதிநிதிகளாக இருந்தவர்களாலேயே அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. அவை அந்தந்தச் சமூகப்பிரிவின் ஆதிக்கச் சக்திகளின் நலன்களையும் தேவைகளையும் குறித்து நின்றன. அதேவேளை அவை குறிப்பிட்டவர்க்க நலன்களை முன்னெடுக்கிற போக்கில் தத்தமது சமூகங்களில் இருந்து வந்த தேக்க நிலையையும் உடைத்தன. இந்தவித மான உடைப்பு ஒரு பூரணமான சமூக மாற்றத்திற்கு ஏன் இட்டுச் செய்லவில்லை என்றோ ஏன் சமூக நீதிக்கான போராட்டங்களாகப் பரிணமிக்கவில்லை என்றோ விசாரிப்போமானால். இந்த மீளெழுச்சிகளை வழி நடத்திய வர்க்க நலன்களுடன் வர்க்கத்திற்கும் சாதிக்கும் இருந்த இறுக்கமான தொடர்பு இன்ன மும் விடுபடாத ஒரு அரை நிலப்பிரபுத்துவச் சூழலில் ஆதிக்கஞ் செலுத்திய சாதியக் கண்ணோட்டங்களும் மேற்கூறிய மீளெழுச்சிகளை நெறிப்படுத்தியதைக் காணுவோம். ஒவ்வொரு தேசிய இனத்தினதும் அடையாளப்படுத்தலின் தொடக்கங்கள் அதனதன் மேல்தட்டு வர்க்கங்களின் நலன் சார்ந்து அமைந்தது போலவே தேசிய இனங்களிடையிலான முரண்பாடுகளும் தொடர்ந்தும் அந்த நலன்களையொட்டி அந்த நலன்களிடையிலான முரண்பாடுகளால் நிருணயிக்க ப்பட்டன. இவற்றை ஊடறுத்து நின்ற வர்க்க முரண்பாடுகள் தேசிய அடையாளந் தொடர்பாகவும் இன அடையாளங்கள் தொடர்பாகவும் வேறு விதமான பார்வைகளை வேண்டி நின்றன.

இந்த நாட்டின் உற்பத்தித் துறையில் முக்கியமான பங்குவகித்த மலையகத் தமிழ் மக்கள் தது தேசிய இன உருவாக்கத்தை இனங்காணுவதற்கு ஏன் காலஞ் சென்றது என்ற கேள்விக்கான விடையையும் அந்தச் சமூகத்தின் வர்க்க அமைப்பும் அதன் தலைமையின் வர்க்க நோக்குஞ் சார்ந்தே நாம் அறிந்து கொள்ள இயலும். மலையகத் தமிழ் மக்கள் ஒரு சமூகமாகவே எவ்வாறு பின் தங்கிய தனிமைப்படுத்தப்பட நிலையில் இருத்தப்பட்டனர் என்பதையும் மேற்படி வினாக்களுடன் சேர்த்தே கவனிக்க வேண்டும்.

அடுத்து வரும் அத்தியாயங்களில் எவ்வாறு இலங்கையின் தேசியத் தலைமைத்துவங்கள் வர்க்க, சாதிய நலன் சார்ந்து உருவெடுத்தன என்பதையும் கொலனிய ஆட்சியுடன் ஒவ்வொரு தலைமையினதும் உறவின் தன்மைகள் எவ்வாறு விருத்தி பெற்றன எனவும் கவனிப்போம்.

# மனிதாபிமான ஏகாதிபத்தியம் மக்களின் நண்பனாக முடியாது

**அடக்கு முறையாளர்களும் ஆளும்** வர்க்கங்களும் சர்வதேச சமூகம் பற்றி அதிகமாகவே பேசுவதைக் கேட்கின்றோம். தங்களின் அடக்கு முறைகளையும் அராஜகங்களையும் கேள்விக்குட்படுத்தாதவரை சர்வதேச சமூகம் பற்றி மகிழ்ச்சியடைபவர்களாகவே ஆளும் வர்க்கத்தினரும் அடக்குமுறையாளர்களும் இருப்பர்.

அடக்குமுறைகளினதும் ஆதிக்கங்களினதும் ஒட்டுமொத்த வடிவமாக இருக்கும் சர்வதேச சமூகம் எனப்படுகின்ற ஏகாதிபத்தியத்தின் தலையீட்டின் மூலம் அடக்கி ஆளப்படும் மக்களினது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று நம்புவது இன்றைய பொதுவான போக்காக இருக்கிறது. அடக்குமுறை ஆட்சி யந்திரத்திற்கு எதிராக மக்களின் போராட்ட சக்தியைப் புதிய போக்கிற்கு ஏற்ப கட்டிவளர்க்க முடியாத ஜனநாயக இடதுசாரி சக்திகளும் சர்வதேச தலையீடுகளை தத்தம் நிலையில் நின்று வரவேற்பவர்களாகவே இருக்கின்றனர்.

முரண்பாடுகளை ஊக்குவித்து மோதல்களை உருவாக்கி யுத்தங்களைத் திணித்து அதில் பாதிக்கப்படுவர்களுக்கும் அதேவேளை அடக்குமுறை அரசாங்கங்களுக்கும் மனிதாபிமான ரீதியாக உதவுவதாகக் கூறி உலக மேலாதிக்க சக்திகள் செயலாற்றுகின்றன. மேலும் இயற்கை அனர்த்தங்களின் போதும் எயிட்ஸ் ஒழிப்பு போன்ற திட்டங்களினூடாகவும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவெனவும் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவெனவும் மேலாதிக்க சக்திகள் நாடுகளில் தலையிடுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சர்வதேச சமூகம் என்ற போர்வைக்குள்ளிருக்கும் ஏகாதிபத்தியத்தை வரவேற்று உபசரிக்கும் நிலைமையில் பல்வேறு பிரிவினர் இருக்கின்றனர்.

நமது அரசியல் நிருபர்

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு முன் ஏகாதிபத்தியம் செயற்பட்ட விதத்திற்கும் இன்று செயற்படுகின்ற விதத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. இன்று மனிதபிமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டு சர்வதேச சமூகம் என்ற பெயரில் வசதியாக ஏனைய நாடுகளின் இறைமையில் தலையிடுவது என்பது மட்டுமன்றி சில நாடுகளில் குடியேறியும் விடுகின்றன. இதனையே தற்போது "மனிதபிமான ஏகாதிபத்தியத் தலையீடுகள்" என்று கூறுகின்றனர்.

நமது நாட்டிலும் இம் மனிதாபிமான ஏகாதிபத்தியத் தலையீடுகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. சுனாமி பேரலையால் பாதி க்கப்பட்டபோது ஏகாதிபத்திய சக்திகளை கரம்நீட்டி உதவிக்கு வரவழைப்பதைத் தவிர இலங்கை அரசாங்கத்திற்கு வேறு வழி இருக்கவில்லை. யுத்தத்தி னால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகளையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. இவற் றுனூடாக அவை அவற்றின் நிகழ்ச்சி நிரல்களை இங்கு மனிதாபிமான நடவடி க்கைகளைச் செய்வதாகக் கூறிக்கொண்டு தலையீடுகளைச் செய்து அரசாங்கத்திலும் பல சந்தர்ப்பங்களில் போராட்டங்களிலும் அப்பட்டமாகத் தலைடு கி ன்றன. அரசாங்கத்தில் தலையீடு செய்யும் போதும் பாதிக்க ப்படுகின்ற மக்களின் சம்மதமும் போராட்டங்களில் தலையீடும் போது அரசாங்கத்தினதும் அடக்கு முறையாளர்க ளினதும் சம்மதமும் இம் மனிதாபிமான ஏகாதிபத்திய சக்திகளுக்குகிடைத்துவிடுகிறது.

இலங்கையில் மனிதாபிமானப் பணிகளைக் கண்காணிப்தற்காக வந்திருந்த ஐ.நா. பிரதிநிதி ஹோம்ஸ் மனித நேயப்பணியாளர்கள் கொலை செய்யப்படுகின்ற நாடுகளில் ஒன்றாக இலங்கை இருப்பதாகக் கூறினார். இதனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் ஆத்திரமடைந்துள்ளது. ஆனால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மத்தியில் ஹோம்ஸின் கூற்றுக்கு ஐ. நா தலையிடப்போகிறது என்றும் அரசாங்கத்திற்கு பாடம் புகட்டப்போகிறது என்றவாறும் குதூகலிக்கப்படுகிறது.

தொடர்ச்சி 14ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

## மக்கள் பிரதிநிதிகள்

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்திருந்த மக்கள் பிரதிநிதிகள் பலர் வாக்குகளை முறையாக அளிக்கத் தவறிய மையால் பல வாக்குகள் செல்லுபடியற்றதாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் மக்கள் பிரதிநிதிகளுக்கு சோனியா காந்தியும் பா.ஜ.க.வின் மக்கள் பிரதிநிதிகளுக்கு சுஸ்மா சுவராஜ்ம் உப ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி என்று பாடம் நடத்தினர். இது குறித்து கருத்துத் தெரிவித்த மக்கள் பிரதிநிதிகள் எப்படித் தேர்தலில் வாக்களிப்பது என்று எமக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இது உண்மையில் மிகவும் பயனுள்ளது" என்று சொன்னார்கள். வாக்குகள் கூட அளிக்கத் தெரியாமல் இருப்பது தான் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதற்கான அடிப்படைத் தகுதியோ!

## பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை

பிலிப்பைன்ஸில் தனிநாட்டுக்காகப் போராடி வரும் மின்தானாவோ (Mindanao) போராளிகளுக்கும் அப்பிரதேச மக்களுக்கும் எதிராகக் கொடூரமான தாக்குதல்களை பிலிப் பீனிய இராணுவம் நடத்தி வருகிறது. பிலிப்பீனியப் பத்திரிகைகள் இந்தத் தாக்குதலில் அமெரிக்கப் படைகளும் பங்கு கொண்டதாகத் தெரிவித்திருந்தன. இது குறித்து கருத்துத் தெரிவித்த பிலிப்பைன்ஸில் உள்ள அமெரிக்கத் தூதரகம் "பயங்கரவாதத்தை ஒழிப்பதுதான் எங்களின் இலக்கு" என்றும் "தற்பாதுகாப்புக்காக தாக்குவது பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை" என்றும் சொல்லியிருந்தது. இத்தாக்குதல்களில் மின்தா னாவைச் சேர்ந்த அப்பாவி மக்களே இலக்கு வைக்கப்பட்டு கொல்லப்படுகின்றனர்.

யாரும் எங்கும் எப்போதும் கொல்லப்படலாம், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்பதன் பெயரால்.

## தற்கொலைகள் சொல்லும் உண்மை

தற்கொலை செய்து கொள்ளும் அமெரிக்கப் படைவீரர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. தனது ஏகாதிபத்திய ஆசைகளுக்காக உலகின் ஏனைய நாடுகளை அடக்கியாள ஆசைப்படும் அமெரிக்க அரசின் பேராசைக்கான பரிசாகவே இதைக் கொள்ள முடியும். உலகெங்கும் "ஜனநாயகம்" பற்றிப் பேசும் அமெரிக்கா தனது படைவீரர்களுக்கு உரிய வசதிகளைச் செய்து கொடுப்பதில்லை. வெளியே தெரிகின்ற பகட்டான அமெரிக்காவிற்குள்ளே இருப்பதெல்லாம் மனித உரிமை மீறல்களும் சித்திரவதைகளுமே. வாய்திறந்து எதையும் பேச முடியாத அமெரிக்க படைவீரர்களால் செய்யக் கூடியது தற்கொலை மட்டும் தானா? என்பது ஒருபுறமிருக்க இந்தத் தற்கொலைகளின் பின்னால் இருக்கின்ற ஏழ்மையும் இங்கே கவனிப்புக்குள்ளாக வேண்டியது. சொந்த நாட்டு மக்களின் நலனையே கவனிக்காத அமெரிக்கா உலக மக்களின் நலனுக்காக உலகெங்கும் போர் செய்கிறது.

## யாருடைய நாடு

பொலிவிய அரசாங்கம் தனது நாட்டுக்குள் வரவிரும்பும் அமெரிக்கப் பிரஜைகள் விசா அனுமதி பெற்ற பின்னரே தனது நாட்டுக்குள் வர முடியும் என்று ஒரு புதிய சட்ட மூலத்தை நிறைவேற்றியிருக்கிறது. இதுவரை காலமும் பொலிவியாவிற்குள் வருவதற்கு விசா அனுமதி தேவையில்லை. நாட்டின் பாதுகாப்புக் கருதியும் நலன் கருதியும் இப்புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டிருப்பதாக பொலிவிய அரசாங்கம் தெரிவிக்கிறது. இப்புதிய நடைமுறையை வண்மையாக கண்டிக்கும் அமெரிக்க அரசு இவ்வாறான செயற்பாடுகளால் அமெரிக்க - பொலிவிய இராஜதந்திர உறவுகளில் பாரிய விரிசலை ஏற்படுத்தக் கூடும் என எச்சரித்திருக்கிறது. ஒரு நாட்டுக்குள் இன்னொரு நாட்டுப் பிரஜை விசா பெற்றுப்போவது தான் நடைமுறையாக உள்ளது. விசா இல்லாமல் ஒரு நாட்டுப் பிரஜை இன்னொரு நாட்டிற்குள் நுழைவது சட்டவிரோதம். வழமையிலேயே சட்டவிரோதமான செயற்பாடுகளைச் செய்யும் அமெரிக்கா, பொலிவிய தனது மாநிலங்களில் ஒன்று என்று நினைத்துக் கொண்டிருக்கின்றதோ என்னமோ.

# இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்

# இடதுசாரிகளின் எதிர்ப்பு இறுதிவரை தொடருமா?

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே உருவாக்கப்பட்டுள்ள அணு சக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் 123 என்பது இந்திய அரசியல் பரப்பில் பெரும் சர்ச்சைகளையும் எதிர்ப்பு இயக்கங்களையும் உருவாக்கியுள்ளது. இவ் ஒப்பந்தம் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு அணு சக்தியை அமைதி வழியில் பயன்படுத்தி முன்னேற்றம் காண்பது என்றே மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் விளக்கம் தரப்படுகிறது. ஆனால் அரசாங்கத்திற்கு வெளியே இருந்து கொண்டு ஆதரவு கொடுத்து வரும் நான்கு இடதுசாரிக் கட்சிகள் இவ் ஒப்பந்தத்திற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. அதில் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் பிரதான கட்சிகளாக இருந்து எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இவற்றை விட பாராளுமன்றத்திற்கு அப்பாலான மா. லெ. கம்யூனிஸ்ட் கட்சிகள் பலவும் இவ் ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்து மக்களை அணிதிரட்டி ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகின்றன. அதேவேளை இந்துத்துவ அடிப்படை மதவாதக் கட்சியான பாரதிய ஜனதாவும் இவ் ஒப்பந்தத்தை தனது அரசியல் காய் நகர்த்தலுக்காக எதிர்த்து வருகின்றது. ஜெயலலிதா சந்திரபாபு நாயுடு தலைமையிலான மாநிலக் கட்சிகளும் தத்தமது நிலைப்பாட்டிலிருந்து இவ் இந்திய அமெரிக்க அணு ஒப்பந்தம் 123 ஐ எதிர்த்து வருகின்றன. ஆனால் கருணாநிதியும் தி.மு.கவும் தமது அமெரிக்க விசுவாச அடிப்படையில் அரசாங்கப் பக்கமே இருந்து வருகின்றனர்.

இருப்பினும் அமெரிக்க விசுவாசியான பிரதமர் மன்மோகன் சிங் அவரது தலைவியான சோனியா காந்தியின் வழி நடத்தலுடன் இவ் ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் முழுமூச்சுடன் செயல்பட்டு வருகின்றார். தனது பதவி போனாலும் பரவாயில்லை அரசாங்கம் கவிழ்ந்து உருண்டு கொண்டாலும் ஒப்பந்தத்தை நிறைவேற்றித்திருவேன் என்று சபதம் ஏற்று நிற்கிறார். அதாவது இந்தியாவை அமெரிக்காவின் காலடிக்கு கொண்டு சென்று அடிமைச் சங்கிலியால் இறுக்கி விடுவதெனபதில் மன்மோகன் சிங் வெறி கொண்டு நிற்கிறார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் சக்தி வலு உற்பத்தி அதிகரிக்கும் என்றும் அதனால் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுவதுடன் வேலை வாய்ப்புப் பெருகும் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் இவ்வாறான சிறு வகை நன்மைகளை விட இந்தியாவின் இறையாண்மையும் சுதந்திரம் சுயாதிபத்தியம் என்பவை அமெரிக்காவிடம் தாரை வார்க்கப்படும் அபாயமே இவ் ஒப்பந்தத்தால் உருவாகும். இந்தியாவை மறு கொலனியாக்கம் செய்யும் அமெரிக்கா தலைமையிலான உலகமயமாதல் பொருளாதாரம் இந்தியாவிற்குள் மேன் மேலும் ஊடுருவிப் பாய்வதற்கும் இவ் ஒப்பந்தம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படும். அதற்கான ஒன்பது சரத்துக்கள் மேற்படி ஒப்பந்தத்தில் இருப்பதாக அதனை எதிர்க்கும் சக்திகள் சுட்டிக் காட்டுகின்றன.

இவ் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால் இந்தியாவால் சுதந்திரமான உள் நாட்டு வெளிநாட்டுக் கொள்கையை முன்னெடுக்க முடியாத வாறான நிர்ப்பந்தங்களையும் அச்சுறுத்தல்களையும் அமெரிக்காவால் விடுக்க முடியும். ஏற்கனவே இந்திய ஆளும் வர்க்கம் அமெரிக்காவுடன் பத்து வருட பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன் அடிப்படையில் கூட்டு ராணுவப் பயிற்சிகள் இடம் பெற ஆரம்பித்துள்ளன. ஈரான் வடகொரியா ஆகிய நாடுகள் தமது ஆக்க அபிவிருத்தி முயற்சிகளுக்கு அணு சக்தியை உற்பத்தி செய்வதை அமெரிக்கா எதிர்த்து அவற்றைத் தடுக்க முழு முயற்சி செய்கிறது. ஆனால் இந்தியாவுடன் தனக்குச் சாதகமான அம்சங்களைக் கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தைச் செய்கிறது.




இவ்வாறு இந்தியாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தைச் செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் சீனாவுடனும் பெற்றோலிய எரிவாயு வளம் மிக்க ஈரானுடனும் இந்தியா இணக்கமுடன் இருந்து வரும் சூழலைத் தகர்த்து அந் நாடுகளுக்கு எதிரான தனது நிலைப்பாட்டிற்கு வலுச் சேர்த்துக் கொள்ள முயன்றும் வருகின்றது.

"நான் என்னுடைய உலக மேலாதிக்க நலன் சார்ந்த நிபந்தனைகள் கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தை உன்னுடன் செய்கின்றேன். நீ உன்னுடைய கதவுகளைத் தாராள சந்தைக்காக எவ்வித கட்டுப்பாடும் இன்றித் திறந்துவிட வேண்டும். அங்கே என்னை வர வேற்க டாட்டா பிர்லா அம்பானி போன்ற பல கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள். அதேபோல் நுகர்வுக்கான ஒரு உயர் மத்தியதர வர்க்கம் மட்டுமன்றி கீழ் மத்தி யதர வர்க்கத்தையும் தயாராக்க முடியும். அதேவேளை எத்தனை லட்சம் கோடி விவசாயிகளும் தொழிலாளர்களும் ஏனைய உழைப்பாளிகளும் அடி நிலைக்குச் சென்றாலும் செத்து மடிந்தாலும் நமக்குக் கவலை இல்லை". இவ்வாறே அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியாவைப் பொறுத்து தனது கொள்கையை கடைப்பிடிக்கிறது. இதனை உலகமயமாதல் அபிவிருத்தி முன்னேற்றம் என இந்திய ஆளும் வர்க்கமும் அவர்களது எடுபிடிகளான பொருளா தார நிபுணர்களும் வரவேற்கின்றனர். பாராளுமன்ற இடதுசாரிகளும் உலகமயமாதலின் வரப் பிர சாதங்களைக் கையேற்று உச்சி மேல் வைத்து கொண்டாட கேரளத்திலும் மேற்கு வங்கத்திலும் முயன்று வருகின்றனர். அவர்களது இக் கொள்கையின் பரீட்சார்த்தம் மேற்கு வங்கத்தில் நந்திகிராம் விவசாயிகளின் எழுச்சியில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. கேரளத்தில் பல்வேறு எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்துள்ளது.

அதே வேளை பாராளு மன்றத்திற்கு அப்பாலான மா.லெ. கட்சிகளும் இயக்கங்களும் கர்ண கடூரமாக உலக மயமாதலையும் ஏகாதிபத்திய மறுகொல னியாக்கத்தையும் எதிர்த்துப் போராடி வருகின்றனர்.

இந் நிலையில் அறுபது பாராளுமன்ற ஆசனங்களை வைத்துக் கொண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு வெளியே இருந்து ஆதரவு தந்து வந்த பாராளுமன்ற இடதுசாரிகளுக்கு தாக்க முடியாத நிர்ப்பந்தமும் இக்கட்டான நிலையும் தோன்றியுள்ளது. தமது இதுவரையான இவ் ஒப்பந்த எதிர்ப்பை மேலும் உறுதியுடன் முன்னெடுத்து அதனைக் கைவி டச் செய்வதா? அல்லது சந்தர்ப் பவாத முடிவெடுத்து ஆளும் ஐக்கிய முற்போக்கு முன்னணியுடன் இணங்கிப் பணிந்து கொள்வதா? என்பதே இந்திய பாராளுமன்ற இடதுசாரிகள் முன்னால் எழுந்துள்ள சவாலாகும்.

இவ்வாறான சூழலில் அமெரிக்க அடி வருடியாகச் செயல்பட்டு இந்திய நாட்டையும் மக்களையும் ஏகாதிபத்தியத்திடம் காட்டிக் கொடுத்து துரோகம் இழைக்கும் ஒரு அரசாங்கம் பதவியில் இருப்பதில் எவ்வித அர்த்தம் இருக்க முடியாது. மத சார்பின்மை, பாரதிய ஜனதா கட்சி பதவிக்கு வந்து விடும் இந்துத்துவ அடிப்படைவாதம் மேலோங்கி விடும் என்ற நியாயங்களின் பேரில் பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தமது எதிர்ப்பைக் கைவிட்டுச் சோரம் போகக் கூடாது. அது இந்திய இடதுசாரி இயக்கம் முழுவதற்கும் முகத்தில் கரி பூசுவதாகும். எதிர்த்து நிற்பது இடதுசாரி இயக்கத் திற்கும் மக்கள் போராட்டங்களுக்கும் வலிமை சேர்ப்பதாகும். பாரா ளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் எதனைச் செய்யப் போகின்றன.

எவ்வாறாயினும் இந்தியப் பெரு நிலப் பரப்பில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் நச்சுத்தன உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் ஊடுருவல்களையும் ஒவ்வொரு தளத்திலும் எதிர்த்து பரந்து பட்ட விவசாயிகளும் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் கிளர்ந்தெழுவதை எவராலும் தடுக்க முடியாது என்பது இன்றைய யதார்த்தமாகும். அவ் எழுச்சிகளுக்கு மா. லெ. கட்சிகளும் இயக்கங்களும் வழிகாட்டி முன்னெடுக்கும் சூழல்கள் வலுவடைந்து வருவதையும் காண இயலுமாகிறது.

எனவே இவ் இந்திய அமெரிக்க அணு சக்தி ஒப்பந்தம் இந்தியாவிற்கு மட்டுமன்றி தென் ஆசியப்பிராந்தியத்திற்கும் அபாயங்களைக் கொண்டு வர வல்லதாகும். அந்த வகையில் இலங்கையிலும் அவ் ஒப்பந்தத்திற்கு எதிரான இயக்கம் முன்னெடுக்கப்படுவது அவசியமோகும்.

www.padippakam.com    நன்றி - நூலகத்திட்டம்



# யாழ் - கொழும்பு பயணத்தில்

## ஆகாயம் கடலில் கொள்ளை உலைச்சல்

**யாழ்ப்பாணத்திற்கான ஏ9 நெடுஞ்சாலை** மூடப்பட்டு சரியாக ஒரு வருடம் முடிவடைந்து விட்டது. இப்பாதை வழி மறிப்பால் யாழ்ப்பாணத்திலிருந்து பிறமாவட்டங்களுக்குச் செல்லும் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்கள் சொல்லும் தரமன்று. கடல் வழி, ஆகாய வழி இரண்டு மட்டுமே பயணிப்பதற்கான பாதைகள். குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வோர் ராணுவத்திடம் வெளிச் செல்லும் அனுமதி பெற வேண்டும். அதற்கு விண்ணப்பிப்பதும் அனுமதி பெறுவதும் அலைந்த உலைந்த நரக வேதனைகளாகும். அவ்வாறு நீண்ட காத்திருப்பு விசாரணைகளுக்குப் பின்பு கிடைக்கும் வெளிச் செல்லும் அனுமதியைக் கொண்டு பிரயாணத்திற்கான பயணச் சீட்டை கப்பலுக்கும் விமானத்திற்கும் பெறுவது இரண்டாம் கட்ட வேதனைகளாகும். அங்கும் காத்திருப்பு அலைச்சல் உலைச்சலுக்குக் குறைவில்லை. அங்கு செல்வாக்கும் அதிக பணமும் முன்னுரிமை பெற்று விடுகின்றன.

இவைதான் வேதனை மேல் வேதனை என்றால் பயணத்திற்கு அறவிடப்படும் பணம் தலையில் அடித்தது போன்றதாகும். கப்பலில் காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு வந்து சேர ரூபா 2500 அறவிடப்படுகிறது. கொழும்புக்கு வந்து சேர வழிச் செலவுடன் ரூபா 500 தேவை. அவ்வாறே திரும்பிச் செல்லவும் அறவிடப்படுகிறது. இதனுடன் கப்பலில் சுமார் 16 அல்லது 17 மணி நேரம் பிரயாணம் செய்ய வேண்டும். கப்பல் பிரயாணம் கடுமையானதும் அச்சம் நிறைந்ததுமாகும். அத்துடன் தலைச்சுற்று வாந்தி உடல் நடுக்கம் என்பனவற்றுக்கு எல்லாப் பயணிகளுமே ஆட்படவேண்டிய அவல நிலை. எப்படியாயினும் தத்தமது அத்தியாவசிய அலுவல்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற கட்டயாத்திலேயே குடாநாட்டு மக்கள் இக் கப்பல் பயணத்தை மிகுந்த சிரமங்கள் மத்தியில் மேற் கொள்கின்றனர்.

அதேவேளை விமானத்தில் கொழும்புக்குப் பயணிக்கவும் திரும்பவும் பயணச் சீட்டிற்கு ரூபா 9000, 9500 என இரண்டு விமானச் சேவைகளினால் அறவிடப்படுகின்றது. ஒரு வழிப் பயணத்திற்கு மட்டுமே இந்தப் பண அறவீடாகும். இருவழிப்பயணத்திற்கும் ஏனைய வழிச் செலவுகளுக்கும் சுமார் 20,000 ரூபாவிற்கு மேல் தேவைப்படுகின்றது. ஒரு அரசாங்க ஊழியரின் ஆகக் குறைந்த சம்பளம் 11, 786 மட்டுமேயாகும். இருபதினாயிரம் சம்பளம் பெறும் ஒரு அரசாங்க ஊழியரினால் அல்லது அதற்குங் குறைவான சம்பளம் பெறும் தனியார் துறையினரால் இவ்வாறு விமானத்தில் பயணம் செய்ய முடியுமா? இவ்வாறு இரண்டு தனியார் விமான சேவையினர் அறவிடுவது ஏன்? சென்னைக்குச் செல்ல இருவழிப் பயணத்திற்கு 21000 ரூபா மட்டுமே. அதைவிடவும் குறித்த திகதியில் சென்று திரும்ப 12, 500 ரூபாவிற்கும் பயணச் சீட்டு உண்டு. இவற்றுடன் ஒப்பிடும் போதும் கொழும்பு- யாழ் விமானச் சேவையில் "ஆகாயக் கொள்ளை" நடைபெறுகின்றது என்று குறிப்பிட்டால் தவறு இருக்க முடியாது. இந்த ஆகாயக் கொள்ளையில் யார் யார் பங்காளிகள் என்பது மட்டும் இரகசியம். அதனை வெளிப்படுத்தினால் ஆபத்து என்றே கூறப்படுகின்றது.

இவ்வாறு பணம் செலுத்தி ஆகாய வழிப் பயணம் மேற்கொள்வோர் வெளிநாட்டுத் தொடர்புள்ளவர்களாக மட்டுமே இருக்க முடியும். ஓரளவுக்கு பணத்தைப் பாராது ஆகாய வழிப் பிரயாணம் செய்யும் இவர்களும் கட்டாயத்தின் பேரிலேயே பிரயாணம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வெளிநாடுகளில் பனிக்குள்ளும் குளிருக்குள்ளும் மாய்ந்து மாய்ந்து அதிக நேரம் கடும் உழைப்பில் ஈடுபட்டே புலம் பெயர்ந்தோர் இங்குள்ள உறவுகளுக்குப் பணம் அனுப்புகின்றனர். அப்பணத்தில் இவ்வாறான பலவகைக் "கொள்ளைகள்" இடம் பெறுகின்றன. "ஏன் கொடுத்தால் என்ன? வெளிநாட்டுப் பணம் தானே" என்ற மொட்டை நியாயம் கூறுவோர் பலர் இருக்கிறார்கள்.

நீதி நியாயம் மனித நேயம் மனச்சாட்சி மனித உரிமைகள் ஜனநாயகம் யாவும் புதையுண்டு கிடக்கும் மண்ணிலே எத்தனை வகைக் கொள்ளைகளும் கொடுமைகளும் நாளாந்தம் அரங்கேறி வருகின்றன என்பதே பார்க்க வேண்டியதும் சிந்திக்க வேண்டியதுமாகும்.

கப்பலில் மட்டுமன்றி விமானப் பயணமும் சோதனைகளும் வேதனைகளும் அச்சமும் பீதியும் கொண்டதுதான். ஒரு பிரயாணி "கடந்த இருபது வருடங்களில் நானும் மனைவி பிள்ளைகளும் இவ்வாறான பயண வேதனைகளை தரை கடல் ஆகாயம் என்ற வழிகளால் தாராளமான அளவுக்கு அனுபவித்து விட்டோம். எமக்குப் பின் எமது பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும் தொடர்ந்து அனுபவிக்கப் போகிறார்களே என்பது தான் ஏக்கம் மிக்க கவலையாக உள்ளது" எனக் கூறினார். **"கேள்விகள் தான் எத்தனை விடைகள் ஏன் இல்லை போர் மூண்டு எத்தனை நாள் விடுதலை ஏன் இல்லை. கனவு காணும் புதிய யுகம் ஏன் காணவில்லை. கண்ணீரும் கம்பலையும் ஏன் ஓயவில்லை." இந்தக் கவிதை வரிகள் நம்முடையவை அல்ல. ஒரு வடபுலத்து மூத்த கவிஞனின் உள்ளக்குமுறல்.** அது வடக்கு கிழக்கு மக்களின் குமுறல்களைப் பிரதிபலித்து நிற்கிறது.

**நமன்**

# பல வண்ணக் காடு

ஒரு நாள்
கால் போன போக்கிலே போனேன்
காய்த்தவையுங் காயாதவையுமாகப் பல வேறு நிறங்களில்
மரங்கள் அடர்ந்த காடொன்று எதிர்ப்பட்டது.
காயாதவற்றினின்று காய்த்தவற்றுக்குத்
தனித்தனியாகவும் குழுக்குழுவாகவும் குரங்குகள் தாவின
குந்தியிருந்த கிளைகளில் வேறு குரங்குகள் அமராமலும்
களவாகக் காய் பிடுங்காமலும் சில கவனமாய்க் காவலிருந்தன.
காய் கிடைக்காமல் ஏமாந்தவை பழைய மரங்கட்கு மீண்டன.
இன்னொரு நாள்
காய்த்த மரங்கள் சில வாடித் தெரிந்தன
காய்கள் இருந்த மரங்களுக்குக் குரங்குகள் படையெடுத்தன
வந்த குரங்குகளை மறித்து இருந்த குரங்குள் மிரட்டின
கொஞ்சி இரந்து விழுகிற காய்களைப் பொறுக்க
கொஞ்சக் குரங்குகள் மரத்தின் கீழே காவலிருந்தன.
உச்சக் கொப்பில் இருந்த ஒரு குரங்கு
யாருக்கு எந்தக் கிளை என்றும் இடையிடையே
குரங்கட்குரிய கிளைகளை மாற்றியும் கட்டளையிட்டது.
நல்ல கிளைகள் கிடையாதவையும் நல்ல கிளைகளை இழந்தவையும்
உச்சிக் குரங்குக்கு எதிராகச் சூழ்ச்சிகள் செய்தன.
உச்சிக் குரங்கை உசுப்ப முடியாமல் தோற்றபின்
வேறுமரம் தேடின சில. பேசாமல் அடங்கிற்போயின சில.
சில மரங்கள் காயாததற்கு அதன் உச்சிக் குரங்கேதான்
காரணமென்று தீர்மானித்த குரங்குகள்
உச்சிக்குரங்கை விரட்ட முடிவெடுத்தன. பின்பு
உச்சிக்குரங்கை விரட்டியும் பயனில்லை என்று
மரத்தை விட்டுப் போயின.
பல நாட்கள் கவனித்த பின்பு குரங்குகளால்
மரங்களுக்கு ஏற்றபடி
தங்கள் நிறங்களை மாற்ற இயலுகிற தெனவும்
சில குரங்குகளால் ஒரே நாளில் மூன்றுமுறை
நிறம் மாற முடிகிறதென்றும் அறிந்தேன்.
இந்த அற்புதம் பற்றி எனது விஞ்ஞான ஆசிரியரிடம் விசாரித்தேன்.
"இதெல்லாம் இந்த மாதிரி இடங்களில் வெகு சுலபம். உண்மையிற்
குரங்குகளின் நிறங்கள் அவற்றின் அடையாளங்களல்ல
மரங்களும் அம்மாதிரித் தான்" என்றார்.
"இன்னொன்று தெரியுமா?
இக் காடு காடேயில்லை. இது ஒரு தனிமரம்.
வேருக்குமேலே வெகு உயரத்துக்குக் குப்பையும் மண்ணுங் குவிந்து
வெவ்வேறு மரங்களாகத் தெரிகின்றது."
"அப்படியானாற் குரங்குகளின் சண்டைகள்?" என்று குறுக்கிட்டேன்
அதெல்லாம் உள் வீட்டுச் சண்டைகள். கண்டு கொள்ளாதே.
இந்தக்காடு மாதிரி உலகெல்லாம் பல உண்டு" என்றார்.
"இக்காட்டின் பேரென்ன?" என்று கேட்டேன்
"காட்டின் பேர் முக்கியமானதல்ல. குரங்குகள் எல்லாம்
பாராளு மந்திகள் என்ற வகைக்குரியன" என்று சொல்லியபடியே
"நேரமாகிறது" என்று சொல்லிப் போய் விட்டார்.

**-ஜெ-**

## மனிதாபிமான ஏகாதிபத்தியம்

**12ம் பக்க தொடர்ச்சி**

ஆபிரிக்காவில் கொங்கோ, எத்தியோப்பியா, ரூவாண்டா ஹெயிட்டி சூடான் போன்ற நாடுகளில் மனிதாபிமானப் பணிகளுக்காக என்றும் யுத்த நிறுத்தக் கணிக்காணிப்பு என்றும் தலையிட்ட ஐ.நா வும் அதன் ஏனைய அமைப்புகளும் இதுவரை எவற்றைச் சாதித்துள்ளன? பயங்கரவாதத்தை தோற்கடிப்பதாகக் கூறிக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் ஐரோப்பிய கூட்டாளிகளுடன் ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் இராணுவ ஆக்கிரமிப்பை செய்தது. அந்நாடுகளில் கொலைகளும் குண்டு வெடிப்புகளும் நடக்காத நாளே இல்லை. அங்கு அமெரிக்கப்படையினராலும் ஐரோப்பிய நாடுகளின் படையினராலும் பயங்கரவாதம் தாராளமாகப் புரியப்படுகின்றது. ஈரானையும், வடகொரியாவையும் அடிபணிய வைக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்க ஏகாதிபத் தியம் ஈடுபட்டுள்ளது. வடகொரியாவிடமிருந்து தென் கொரியாவைப் பாதுகாப்பதாக அங்கு சென்ற அமெரிக்கப் படைகள் அங்கு ராணுவத் தளங்களை அமைத்து நிரந்தரமாகவே தங் கிவிட்டன. அதனால் அந்நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான அரசி யல், பொருளாதார சமூகப் பண் பாட்டுச் சீரழிவுகளை மறந்து விடமுடியாது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் மார்க்கோசின் மனித உரிமை மீறல்களைத் தண்டிப்பதற்காக அங்கு சென்ற சர்வதேச நிறுவனங்கள் அங்கு இடம் பெற்றுக் கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசிய விடுதலை நோக்கிய புரட்சிகரப் போராட்டங்களை பின்னடையச் செய்தன. அங்கு மனிதாபிமானப் பணிகளை செய்வதென்ற பேரில் சென்ற சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பாரிய அரசியல், பொருளாதார, பண்பாட்டு சீரழிவுகளை ஏற்படுத்தின. இன்று பர்மா, தாய்லாந்து போன்ற நாடு களிலும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுடனேயே செயற்படுகின்றன.

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு முதல் இயங்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் சாதனைகள் எவை? இன்று ஆயிரக்கணக்கான தொண்டு நிறுவனங்கள் வெளிநாடுகளில் வழிகாட்டும் தலைமையகங்களையும் உள்ளூர் முகவர்களையும் பணிமனைகளையும் கொண்டு இயங்குகின்றன. அவை சர்வதேச ஏகாதிபத்தி நிகழ்ச்சி நிரலுடனேயே செயற்படுகின்றன. மாறி மாறி ஆட்சி செய்கின்ற அரசாங்கங்கள் அவற்றின் இயலாமையால் தமிழ் மக்கள் மீதான யுத்தத்தை வெவ்வேறு வகையில் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன. அதனால் அரசாங்கத்தின் ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள் தலைவிரித்தாடுகின்றன.

இவற்றுக்கு எதிரான மக்கள் சார்பான அரசியல், வெகுஜன நடவடிக்கைகள் எதுவும் இல்லாத சூழ்நிலையில் சர்வதேச சமூகம் என்ற ஏகாதிபத்தியத்தை ரட்சகராகக் கொள்வதற்கு பல சக்திகள் உள்ளூரில் செயற்படுகின்றன. அரசாங்கங்களின் அடக்கு முறைகளை எதிர்க்க ஏகாதிபத்தியத்திடம் எதனையும் எதிர்பார்க்க முடியாது. அதன் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுவது போன்று பிரசாரம் செய்யப்பட்டாலும் அதில் எவ்வித உண்மையும் இல்லை. ஏகாதிபத்திய உதவிகளும் அதனை முன்னெடுக்கும் தொண்டு நிறுவனங்களும் உள் நோக்கங்கள் கொண்டவையும் நச்சுத்தனமானவையுமாகும். அடிப்படையில் அவை ஏகாதிபத்தியத்திற்கு தொண்டு புரியும் நிறுவனங்களேயாகும்.

ஏகாதிபத்தியம் தற்போது யுத்தத்தை விற்கிறது. யுத்தங்களை ஊக்குவிக்கிறது. யுத்தங்களை நடத்துகிறது. அதனோடு மனிதாபிமான உதவிகள், மனித உரிமை மீறல் கண்காணிப்பு போன்ற பல்வேறு போர்வைகளில் தேசிய அரசுகளையும், அரசாங்கங்களையும் மிரட்டுகின்றன. கட்டுப்படுத்துகின்றன. மக்களுக்கு உதவுவது போன்று பாசாங்கு செய்து அவற்றின் சந்தை நுகர்வு லாபம் மற்றும் இராணுவ ஆதிக்கம் போன்றவற்றை நிலைநாட்டிக் கொள்கிறது.

அன்று காலனித்துவமும், நவகாலனித்துவம் இலகுவாக கண்டுகொள்ளப்பட்டன. எதிர்க்கப்பட்டன. ஆனால் இன்று உலகமயமாதல் நிகழச்சி நிரலின் கீழ் மனிதாபிமான ஏகாதிபத்தியம் தேசிய அரசுகளினாலும் அரசாங்கங்களினாலும் வரவேற்புடனும், மக்களின் ஆதரவுடனும் அதன் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கிறது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களும் போராடுகின்ற இயக்கங்களும் தேசிய அரசிற்கு எதிராகச் செயற்படும் அதேவேளை மனிதாபிமான ஏகாதிபத்தியத்தின் வலையில் மாட்டிக் கொள்ளாதிருப்பதில் கவனஞ் செலுத்த வேண்டும். மனிதாபிமான ஏகாதிபத்தியமாகக் காணப்படும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் சர்வதேச சமூகம் எனப்படும் உலக மேலாதிக்க ஏகாதிபத்திய சக்திகளை உரியவாறு அடையாளம் காணவேண்டும். அதனை அம்பலப்படுத்தி எதிர்த்துப் போராட மக்கள் இயக்கங்களை கட்ட வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கிராமத்தை வண்டியேற்றுகிறவர்கள்

நாட்டார் கலை இலக்கியங்கள் பற்றி அக்கறையுள்ளவர்கள் எப்போதுமே நம் மத்தியில் இருந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரதும் அக்கறைக்கு ஒவ்வொரு பின்னணி இருந்திருக்கலாம். என்றாலும் நமது சமூகத்தை விளங்கிக் கொள்ள வேண்டுமெனில் நமது கிராமங்களை நாம் சரிவர விளங்கிக் கொள்ள வேண்டும். நகர வாழ்வு நல்லதா கிராம வாழ்வு நல்லதா என்கிற விவாதங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. நகரத்தில் எவ்வளவு சொகுசாகச் சிலர் வாழ்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் கிராம வாழ்வின் சிறப்புக்களை வியந்து கூறுவதையும் கேட்டிருக்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். கிராமங்களில் வாழும் பெரும்பான்மையானவர்கட்குக் கிராம வாழ்வு ஒன்றும் ஆனந்தமாக இல்லை. இருக்குமானால் ஏன் தொடர்ந்தும் கிராமங்களை விட்டு நகரங்களை நோக்கி மக்கள் படையெடுக்கிறார்கள்? மறுபுறம் அவர்கள் தேடி வருகிற நகர வாழ்வு முன்பு அனுபவித்த கிராம வாழ்வை விடத் திருப்தியானதும் இல்லை. இருந்தும் யாராலும் திரும்பிப் போக முடிவதும் இல்லை. இதே மாதிரித்தான் தாய் நாட்டை விட்டு அயல் நாடு போகிறதும். ஒன்று மட்டும் உறுதி. யாராவது தான் என்றோ ஊருக்குத் திரும்பிப் போகிறதைப் பற்றி எவ்வளவு தூரம் அடித்துச் சொல்லுகிறரோ அவ்வளவு தூரம் நிச்சயமாக அவர் திரும்பிப் போகமாமட்டார் என்று சொல்ல முடியும். எனினும் பிரிவும் தொலைவும் ஏக்கத்தையும் பாச உணர்வையும் தூண்டி விடுகின்றன.

புலம் பெயர்ந்தோரிடையே தமது பண்பாட்டைப் பேணுகிற தான பாவனைகளும் தமது சொந்த மண்ணின் கலைகள் பற்றியும் வாழ்க்கை முறை பற்றியும் ஏதோ வகையான அக்கறையும் மேற் சொன்ன விதமான ஏக்கத்தின் விளைவுகள் தான். இதை வைத்து லாபகரமான முறையில் வணிகம் நடைபெறுகிறது. யாழ்ப்பாணத்து நல்லெண்ணெய் (அது எங்கே உற்பத்தியானது என்பது முக்கியமானதல்ல) முதலாக எம்.ஜி.ஆர் படப்பாட்டு இறுவட்டு வரை இந்த ஏக்கத்தையே மூலதனமாகக் கொண்டவை. இவையெல்லாம் சாதாரணமான சந்தை விவகாரங்கள். இன்னொரு வகை யான வணிகம் உயர்ந்த கலை இலக்கிய நோக்கங்களின் பேரில் உலாவருகிறது.

இந்தியாவில் சினிமாப் படங்களில் நாட்டார் இசையைப் பயன் படுத்தி வெற்றி கண்ட இசையமைப்பாளர் நௌஷாத். இந்திப் படங்களில் அவரது இசை நீண்டகாலமாகக் கொடி கட்டிப் பறந்தது. அவர் என்றுமே கிராமியக் கலைக்கு அங்கீகாரம் பெற்றுத்தந்து விட்டேன் என்றோ கிராமியத்துக்குத் திரும்ப வேண்டும் என்றோ சொன்னதாக எனக்குத் தெரியாது. இந்தியாவின் புகழ் பெற்ற கவிஞர்கள். இசை வல்லுனர்கள் பலரிடமும் வெவ்வேறு அளவுகட்கு நாட்டார் கலைகள் பற்றிய ஈடுபாடு இருந்திருக்கிறது. அதை அவர்கள் தங்களது துறைகளில் பொருத்தமான இடங்களில் உள்வாங்கிக் கொள்ளுகின்றனர். இந்த விதமான ஈடுபாடு பெரும்பாலும் வணிக நோக்கங்களால் வழிநடத்தப்படுவதல்ல. அது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட உணர்வும் சிந்தனைப் போக்குத் தொடர்பானது. நாட்டார் கலைகள் பற்றிய இவ்வாறான அக்கறை அந்நியர்கட்குக் கூட வரலாம். அவற்றின் பயனான வெற்றிகள் வேறு விதமான அக்கறைகளையும் உருவாக்குகிறது.

உண்மையான ஈடுபாட்டின் விளைவாக மட்டுமில்லாமல் பல வகையான நிறுவனங்கள் மூலமும் கிராமியக் கலைகளை நாடறியவும் உலகறியவும் செய்கிற முயற்சிகள் இன்று பெருமளவும் வணிகமயமாகி விட்டன. மறுபுறம் அவை கிராமியக் கலைகளைக் கிராமதிலிருந்து வெளியே கொண்டு வந்து உலகறியச் செய்வதுடன் நிற்காமல் அவற் றையும் அவற்றை நடத்திக் காட்டுகிற கலைஞர்களையும் தமக்குரிய வாழ்க்கைச் சூழலிருந்து அறவே அந்நியப்படுத்தி விடுகின்றன.

நகர் சார்ந்த சமூகம் தன்னிடமிருந்து காலத்தாலும் இடத்தாலும் வாழ்க்கைச் சூழலிலும் அந்நியப்பட்டுப் போன மரபுகளிலிருந்து காலத்திற்குக் காலம் ஊட்டம் பெறுகிறது. அது இடையிடையே பழைமையை நோக்கியும். கிராமத்தை நோக் கியும் போகிறது. ஆனால் அங்கேயே தங்குவதற்கல்ல. முன் னைய நிலைக்கு மீளுவது இயலாது எனினும் தன்னை வள ப்படுத்திக் கொள்ள அங்கிருந்து பலவற்றைப் பெறுகிறது. எனி னும் பல சமயங்களில் ஒரு அந்நியச் சூழலி ருந்து தனக் கான வளங்கபைப் பெறுவது போலவே இது அமையவுங் கூடும். இதற்கான காரணம் நகரச் சூழலும் நவீன சமுதாயமும் கிராமியச் சூழலிலிருந்தும் பழைய சமூகத்தினின்றும் மீள முடியாத விதமாக விலகிக் கொண்ட மையே. அதேவேளை அந்த விலகலின் விளைவான வேதனை பழைமை பற்றிய ஒரு விதமான ஏக்கமாகவும் வெளிப்படுகிறது. இச் சூழல்களில் கடந்தகாலம் பற்றிய சிலவாறான அக்கறைகள் குறுக்கிடுகி ன்றன.

கிராமம் பற்றியும் பழைமை பற்றியுமான பார்வைகள் வர்க்க நிலைப்பாடு சார்ந்து வேறுபடுவது போல கிராமியக் கலை வடிவங்கள் பற்றியும் மரபு சார்ந்த கலை வடிவங்கள் பற்றியுமான அக்கறைகள் வேறுபடுகின்றன. ஒரு வகை யான அக்கறை அதை வரட்டுத்தனமான முறையில் விறைப்பான, மாற்ற மற்ற ஒன்றாகக் கருதுகிறது. அதன் உள்ளடக்கம் பற்றியோ அதன் சமூகத் தன்மை பற்றியோ கால த்தை ஒட்டி ஏற்பட்டு ள்ள மாற்றங்கள் பற்றியோ அது அதிகங் கவனங் காட்டுவதி ல்லை. அந்த விதமான அக்கறை கிராமிய, மரபுக் கலை வடிவங்களைக் காட்சிப் பொருட்க ளாக மட்டுமே கொள்ளுகிறது. இவ்வாறான அக்கறைகள் எளிதாகவே வணிக நோக்கங்கட் குக் கீழ்ப்படுகின்றன. உண்மையாகவே பழைய கலைவடிவங் களுடனும் நாட்டார் கலைகளிலும் ஈடுபாடுள்ள பலர் என். ஜி. ஓக்களின் 'உதவி' யால் கவரப்படுகின்றனர். இதன் விளைவுகளை இங்கு மேலும் விவரிக்க வேண்டியதில்லை. ஆனால் இது பலரது ஏக்கங்கட்கு ஒரு போலியான நிறைவைத் தருகிறது.

மறுபுறம் கிராமத்தை உயிரோட்டமுள்ள விடுதலையையும் சமூகமேம்பாட்டையும் வேண்டி நிற்கிற ஒரு மக்கள் திரளாக வும் சமூக மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கக் கூடிய ஒரு சக்தியாகவும் காணுகிறவர்கள் கலைகள் பற்றிக் காட்டுகிற அக்கறை வேறு விதமானது. அவர்கள் மக்களுடைய உடை மையாக அவற்றைக் காணுகிறார்கள். அவை மக்களின் உய ர்வுக்கு எவ்வாறு பங்காற்ற இயலுமென அவதானிக்கிறா ர்கள். பழைய சிந்தனைகட்கு வலுவூட்ட மட்டுமே பயன்பட்டு வந்த கலைவடிவங்களைப் புதிய சிந்தனைகளின் வாகனங்களாக்க இயலுமா என்று ஆராய் கிறார்கள். தமது விடுத லைச் சிந்தனைகளை மக்கள் கலைகள் மீது திணிப்பதற்கு மாறாக மக்கள் மத்தியில் அவற்றைப் பரவ விடுகிறார்கள். மக் கள் மத்தியிலிருந்து கருத்துக்களை உள்வாங்கிறார்கள். மக்களைச் சென்றடை யக் கூடிய கலை வடிவங்களை அடையாளங்கண்டு அவற்றி னூடு புதிய சிந்தனைகளை விருத்தி செய்கிறார்கள். மக்களைச் சமபங்களிகளாக அதற்கும் மேலாகத் தங்கள் எசமானர்க ளாகக் கருதுகிற படைப்பாளிகள் இவ்வாறு உருவாகின்றனர். அவர்கள் மூலம் இறந்த காலம் நிகழ்காலத்துக்குச் சேவையா ற்றுகிறது. கிராமியச் சமூகத்தின் பொருளாதாரச் சிதைவால் தேக்க நிலையில் இருக்கும் கிராமியக் கலைகள் தம்மையும் தமக்குரிய சமூக த்தையும் ஒரு புதிய யுகத்தை நோக்கி வழி நடத்துகின்றன. இவ்வா றான போக்குகளை ஒவ்வொரு வெகுசனப் போராட்டச் சூழலிலும் நாம் காண லாம். இது ஏற்றுமதிக் கான சரக்கல்ல.

> **கிராமியக் கலைகளை வணிகமயமாக்கும் போக்கு வளர்க்கப்படுகிறது.**

கிராமிய சமுதாயத்தின் விடுதலையையும் மேம்பாட்டையும் மறந்து ஒரு புறம் கிராமியப் பொருளாதாரம் நிலவுடைமைக் காலச் சிந்தனையினின்றும் சமூக உறவுகளினின்றும் விடுபட இயலாமலும் உலகமயமாதற் கொள்கையின் வழிநடத்தலின் கீழான விதேசியப் பொருளாதார ஆதிக்கத்தின் விளைவான சுமைகளாலும் திணறுகிற போது கிராமியக் கலை இல க்கியங்களைக் கிராமத்தின் யதார்த்தத்திற்கும் அப்பாற்பட்ட புனிதங்களாக்கி அவற்றை விற்பனைப் பண்டங் களாக் குகிறவர்கள் கிராமியக்கலைகளைக் கிராம மக்களின் வாழ் வக்கும் கிராமத்தின் மேம்பாட்டுக்கும் பயனற்ற முறையிலேயே அடையாளப்படுத்திச் சீரழிக்கின் றனர்.

கிராமங்களின் கலை கலை இலக்கியங்களைக் காப்பாற்றுகிற நோக்கத்தைக் கொண்டவர்கள் நம்மிடையே பலர் உள்ளனர். அவர்கள் அந்தக் கலை இலக்கியங்களை மக்க ளின் வாழ்வினின்றும் சமூக மேம்பாட்டினின்றும் பிரித்து நோக்கு அபாயம் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கிராமங்களின் இலக்கியங்கள் எப்போதுமே மாறி வந் துள்ளன என்பதை மறக்காமலிருக்கிற அதேவேளை கிரா மச் சமூகம் தனது தளைகளிலிருந்து விடுபட வேண்டிய தேவையைக் கிராமியக் கலை இலக்கியங்களுடன் சேர்த் துக் கருதுவது முக்கியமானது. அனைத்தினும் முக்கியமா கக் கிராம மக்களின் வாழ்வைத் தாழ்நிலையில் தொடர் ந்தும் வைத்துக் கொண்டு கிராமியக் கலை இலக்கியங்க ளைக் காட்சிப் பொருட்களாக்கிற முயற்சிகள் பற்றி மிக வும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

-சேகர்-

## அணில் பிள்ளைகளுக்கான பாடல்

ஊடக அணிலாருக்கு ஒரு நாளும்
சும்மாய் இருக்க ஏலாது!
துறு துறுத்து ஓடுவதும்
தாவித் தாவி மரங்களில் ஏறுவதும்
கொய்யா, மா, பலா, தென்னை என்று
கூப்பிட்டுக் கூறுபவற்றை தட்டிப் பார்த்து
கூரிய பற்களால் கொறித்துப் பார்த்து.
முற்றியது, முற்றாதது, கனிந்தது, அழுகியது
பற்றிய செய்திகளை உடனுக்குடன்
பகுத்துத் தொகுத்து பாகம் பண்ணி
உச்சக் கிளைகளில் ஏறி உட்கார்ந்து
ரிக் ரிக் ரிக் கென்று சூடு பறக்க
உரத்துக் கூறுவதுமாய் அதற்கு
ஓயாத வேலை!
காவல்க் கார நாய்க்கும்
அணில்ப் பிள்ளையை
அவ்வளவாகப் பிடிக்காது
மூலை முடுக்கெல்லாம் ஓடித்திரியும்
எலிகளைப் பிடிக்கவும் உணர்வின்றி
அடுக்களை வாசலில் உறங்கிக் கிடக்கும்
கறுப்புப் பூனைக்கும் அணிலைப் பிடிக்காது!
பச்சைக் கிளி, நீலக் குயில், ஆட்காட்டி,
அண்டங்காகம், சிட்டுக்குருவி, சேவல், மயில்
பருந்து இனத்திற்கும் அணிலைப் பிடிக்காது!
நன்மை தீமையைச் சரி பிழையென்று
கோடு கிழித்து கீறிக் கத்துவதால்
அணிலுக்கு நடுநிலை தெரியாதென்று
அவர்களுக்குப் பிடிப்பதில்லை!
வீட்டுக் காரனிடம் கோள் மூட்டி
பொறி வைத்துப் பிடித்துக் கொண்டு போய்
கூட்டில் வளர்த்து வெருட்டியென்ன!
உயிரன உரிமை பற்றி அணில்
ஓயாமல் கத்திக் கத்தி ஓடி வந்து விட்டது!
அணிலைப் பிடித்து அடித்து
கால் முறித்துப் போட்டும் பார்த்தார்கள்!
பாவம் அணில் காரில் அடிபட்டதென்று
வீட்டுக் காரன் அனுதாபப் பட்டான்!
அணில் உச்சக் கொப்பில் ஏறி
உரக்கக் கத்துவதை மட்டும் நிறுத்தவில்லை!
அப்பிளும், ஸ்ரோபறியும், இறக்குமதி வைனும்
அன்பளிப்பாய்க் கொடுத்து மகிழ்ந்து
ஆரத்தழுவியும் பார்த்தார்கள்!
அணிலின் பிறப்பு பற்றி, சாதி பற்றி
காதல், காலியாணம், குடும்பம் பற்றி
தாயின் தூய்மை பற்றியெல்லாம்
இழித்துப் பேசி, ஊருக்கும் சொல்லி
ஊனக் கதைகளைச் சோடித்தும் பார்த்தார்கள்!
அணில் உச்சக் கொப்பில் ஏறி
உரக்கக் கத்துவதை மட்டும் நிறுத்தவில்லை!

ஒரு நாள், ஒரு நாள்- அணில்
பாராளுமன்ற வீதியில் பிணமாய்க் கிடந்தது!
அணிலின் உயிர் நீத்தலுக்கு
இனந்தெரியாதவர்கள் காரணமென்று
மரண அறிவித்தல் ஊடகங்களில்
செய்தியாக எழுதப்பட்டது
ஊடக அணிலாருக்கு ஒரு நாளும்
சும்மாய் இருக்க ஏலாது!


-சுஹாபரணி-

செப்ரெம்பர் 2007

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org

இந்தியாவில் சாதிய ஒடுக்குமுறையும் தீண்டமையும் கொடூரமானது. தமிழ் நாட்டில் அதன் கோரத்தனத்தை வெளிப்படுத்தும் ஓவியக் கண்காட்சி ஒன்று சென்னையில் நடைபெற்றது. அதில் இருந்து சில ஓவியங்கள் இங்கே தரப்படுகின்றன.




1–
சாதிய– தீண்டாமையை எதிர்த்து தாழ்த்தப்பட்ட (தலித்) இளைஞன் கோபாவேசத்துடன் பறை ஒலி எழுப்பும் ஓவியம்

2–
1997ல் மதுரை மேல்வளவு தலித் பஞ்சாயத்து தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட முருகேசனும் ஏனையோரும் தலைகள் வெட்டி எறியப்பட்டு கொலை செய்யப்பட்டமையை வெளிப்படுத்தும் ஓவியம்.



3–
அண்மையில் உத்திர பிரதேச சட்ட சபைக்கு நடந்த தேர்தலில் தலித் தலைவியான மாயாவதி வெற்றி பெற்று முதலமைச்சரானார். அங்கு தலித்துக்களின் அதிகாரம் வரப்போவதாக நம்பி ஆதரவு தெரிவித்த தலித் பெண்களை இங்கு காணலாம். ஆனால் மாயாவதி பிராமணியத்துடன் கூட்டுச் சேர்ந்து தலித் மக்களை ஏமாற்றி துரோகம்இழைத்துக் கொண்டார்.

4–
புதிய விடியலுக்காக காத்திருக்கும் ஒரு கிராமத்து தலித் பெண்ணைச் சித்தரிக்கும் ஓவியம்





வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.